Registered at the G. P. O. as a Newspaper

வாரப்பதிப்பு விலை சதம் 15

# சுதந்திரன்
SUTANTIRAN

194 A, SILVER SMITH STREET, COLOMBO—12.



மெய்யென்பேர்க் ஆட்டுப்பால் மா

இருமல், காசம் தொய்வு நோய் மூல வியாதி மற்றும் பலவீனம் முதலானவற்றிற்கு மிகச் சிறந்தது.

விபரங்களுக்கு!

த. கணேசன்,
53, மெயின் வீதி.
கொழும்பு

புத்தகம் 11 ஏவிளம்பி ஸ்ரீ கார்த்திகை மாதம் 2 திகதி 17-11-57 ஞாயிற்றுக்கிழமை ரபி.ஆகிர் பிறை 24 இதழ் 25

# மாலைதீவில் பாரிய பிரிட்டிஷ் தளங்கள் வெகு துரிதமாக நிர்மாணம்?

—o—

## உணவு குடிநீர் உட்பட சகலமும் கட்டுநாயகாவிலிருந்து பறக்கின்றன

—o—

## தளங்கள் கைவிடப்பட்டாலும் இலங்கைக்கு அபாயம் நீங்கவில்லை

(சுதந்திரன் அந்தரங்க நிருபர்)

இலங்கைக்கு தென்மேற்குத் திசையில் சமார் 400 மைல் தூரத்திலே, இந்து சமுத்திரத்துள் பரந்து கிடக்கும் மாலை தீவுகளில் பிரிட்டிஷார் பாரிய கடற் படைத் தளங்களையும், விமானப் படைத் தளங்களையும் மிகவும் துரிதமாக அமைத்து வருகின்றனர் என்றும், இதற்கு வேண்டிய பொருட்கள் அனைத்தும், உணவு உட்பட, இலங்கை கட்டு நாயகா தளத்திலிருந்து நாளாந்தம் விமான மூலம் எடுத்துச் செல்லப் படுகின்றன வென்றும் ஒரு அந்தரங்க செய்தி சுதந்திரனுக்கு கிடைத்திருக்கிறது.

இலங்கையிலுள்ள தளங்களைக் கைவிட்டு விடச் சம்மதித்து அதன்படி நடந்து வருவதாகக் காட்டிக்கொள்ளும் பிரிட்டன், இந்து சமுத்திரப் பிரதேசத்தை முற்றுக் கைவிட்டுக் குடியெழும்பிவிடவில்லையென்று தெரிகிறது. இலங்கையிலுள்ள தளங்களை கைவிடும் அதேநேரத்தில் இலங்கையிலிருந்து சுமார் 400 மைல்களேஉள்ள மாலை தீவுகளில் பாரிய தளங்களை அது மிகத்துரிதமாக நிர்மாணித்து வருகிறது என்று ஒரு செய்தி சுதந்திரனுக்குக் கிடைத்துள்ளது.

### தளவாடங்கள் பறக்கின்றன

மாலை தீவுத் தள நிர்மாணத்துக்கு வேண்டிய பொருட்கள் அனைத்தும், பெரிய இயந்திரங்கள், இதர தளவாடங்கள், உணவு, குடிநீர் உட்பட சகல பொருட்களும் நாளாந்தம் விமான மூலம் கட்டுநாயகாவிலிருந்து எடுத்துச் செல்லப்படுகின்றன.

இந்த சாமான்களை ஏற்றிச் செல்வதற்கு பாரம் தூக்கக் கூடிய விசேஷ ரக விமானமான 'வெலட்டா' என்ற விமானங்கள் பயன்படுத்தப்படுகின்றனவாம். கடந்த புதன் கிழமை காலையில் ஒரு முறையும், மாலையில் ஒரு முறையுமாக இந்த விமானம் பாண், மரக்கறி முதலிய உணவுப் பொருட்களையும், குடி நீர் தாங்கிகளையும் ஏற்றிக் கொண்டு மாலதீவு நோக்கிப் பறந்ததாக சுதந்திரன் நிருபர் அறிவிக்கின்றார். தள நிர்மாணத்தில் ஈடு பட்டுள்ள பிரிட்டிஷ் அதிகாரிகளுக்கு மாலைதீவில் சுத்தமான குடிநீர் இடைக்காத காரணத்தினால் நல்ல தண்ணீர் கூட இலங்கையிலிருந்து எடுத்துச் செல்லப்படுகிறதாம்.

### அபாயம் திரவில்லை

கட்டுநாயகாவின் பாதுகாப்பு மிகவும் பந்தோபஸ்தாக்கப் பட்டிருக்கிறது என்று தெரிகிறது. இலங்கை அரசாங்கத்தினர் கூட உள்நுழைய முடியாதபடி கட்டுக் காவல் போட்டிருக்கிறது. கட்டுநாயகாவின் சுற்று வட்டாரத்திலேயே படம்பிடிக்கும் கமராக்கள் அனுமதிக்கப்படுவதில்லை.

'இலங்கைத் தளங்களை பிரிட்டிஷார் கைவிட்ட போதிலும், பிரிட்டிஷாரின் படைப் பல ஆதிக்கத்திலிருந்து இலங்கை இன்னும் விடுபடவில்லை. பிரிட்டிஷ் விமானங்கள் இலங்கையை முற்றுகையிடும் அபாயம் அரைமணித்தியால அவகாசத்தில் பின்போடப்பட்டிருக்கிறது. அதாவது அபாயம் திருகோணமலையிலும் கட்டு நாயகாவிலுமிருந்து மாலதீவுக்கு மாற்றி வைக்கப் பட்டிருக்கிறது.' இவ்வாறு ஒரு பிரமுகர் சுதந்திரன் நிருபரிடம் கூறினர்.

# தமிழைத் தமிழர் புறக்கணித்ததன் விளைவு!

—o—

## தபால் இலாகாவிலுள்ள தமிழ்ப்பிரிவுக்கு மூடுவிழா?

—o—

### யாழ்—தமிழரின் மொழியுணர்ச்சி குறித்து அதிகாரி வருத்தம்

(சுதந்திரன் நிருபர்)

தபால் — மணியோடர் இலாகாவில் தமிழில் வரும் கடிதங்களையும், முறையீடுகளையும் கவனிப்பதற்கென்று சுமார் ஒரு வருடத்துக்கு முன்பு ஒரு தனிப் பிரிவு ஏற்படுத்தப்பட்டது. அங்கு வேலை பார்க்கும் தமிழ் உணர்ச்சிமிக்க வாலிப உத்தியோகஸ்தர்களின் வற்புறுத்தலினாலும், செல்வாக்கினாலும், முயற்சியினாலும் அளிக்கப்பட்ட இப்பிரிவில் கடமை பார்ப்பதற்கென்று சில தமிழ்க் குமாஸ்தாக்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். ஆனால் இப்பிரிவைச் சிக்கிரம் மூடிவிடுவதென்று பிரஸ்தாப இலாகாவின் அதிகாரிகள் முடிவு செய்துள்ளதாகத் தெரிகிறது.

மேற்கூறியபடி தமிழ்ப் பிரிவை மூடிவிடுவதற்குக் காரணம் என்ன?

"சிலர் நினைக்கிறபடி வகுப்புத் துவேஷமோ, மொழித் துவேஷமோ இதற்குக் காரணமல்ல. தமிழ்ப் பேசும் மக்கள் தாங்களாகவே சம்பாதித்துக் கொண்ட பெறுபேறுதான் இது" என்று தபால் இலாகாவைச் சேர்ந்த ஒரு உத்தியோகஸ்தர் சுதந்திரன் நிருபரிடம் மிகுந்த அதிருப்தியோடும், மனவருத்தத்தோடும் கூறினர்.

### ஒத்துழைப்பு இல்லை

தபால் — மணியோடர் இலாகாவில் தமிழில் வரும் கடிதங்களையும், புகார்களையும் கவனித்துப் பதில் இறுப்பதற்காகவும், நடவடிக்கை மேற்கொள்வதற்காகவும் சுமார் ஒரு வருடத்துக்கு முன்பு ஒரு தனிப் பிரிவு ஏற்படுத்தப்பட்டதாம். ஆனால் தமிழ் பேசும் மக்கள் ஒத்துழைக்க மறுத்துவிட்டார்கள். அதாவது தமிழ்ப் பொதுமக்களிடமிருந்து தமிழில் எழுதப்பட்ட கடிதங்கள் போதிய அளவு இங்கு வந்து சேர்வதில்லையாம்.

சிங்களப் பிரதேசங்களிலிருந்து வரும் கடிதங்கள் பெரும்பாலும் சிங்கள மொழியில் எழுதப்பட்டு வருவதாகவும், தமிழ்ப் பிரதேசங்களில் இருந்து வரும் கடிதங்கள் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு வருவதாகவும் மேற்படி உத்தியோகஸ்தர் கூறினர்.

### யாழ்—மக்களின் மொழியுணர்ச்சி

கிழக்கு மாகாணத்திலும், மலைநாட்டுப் பகுதிகளிலுமிருந்து வரும் கடிதங்கள் சில சமயம் தமிழில் எழுதப்படுவதுண்டென்றும், ஆனால் வடமாகாணத்தில், குறிப்பாக யாழ்ப்பாணப் பகுதியில் இருந்துவரும் கடிதங்கள் நூற்றுக்குத் தொண்ணூற்றென்பது வீதம் ஆங்கில மொழியிலேயே எழுதப்பட்டும், விலாசமிடப்பட்டும் வருவதாகக் கூறி, "நமது யாழ்ப்பாணத் தமிழ் மக்களே இப்படி மொழியபிமானமின்றி நடந்து கொண்டால் எப்படி அவர்கள் சந்ததிகளுக்கு அரசாங்க உத்தியோகத்தைச் சம்பாதித்துக் கொடுக்கப் போகிறார்கள்?" என்று அவர் கேட்டார்.

(8-ம் பக்கம் பார்க்க)

# சிறுபான்மைத் தமிழர் மகாசபையில் பிணக்கு

—o—

## செனட்டர் தேர்தல் எதிரொலி

—o—

### காரியதரிசி ராஜினுமாச் செய்து வெளியேற ஆவல்

(சுதந்திரன் நிருபர்)

செனெட் சபைத் தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியடைந்த திரு எம். ஸி. சுப்பிரமணியத்தைத் தலைவராகக் கொண்ட அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபையில் பிணக்குகள் தோன்ற ஆரம்பித்துவிட்டன.

"யாருடைய அனுமதியின் பேரில் திரு சுப்பிரமணியம் செனெட் தேர்தலில் போட்டி யிட்டார் என்று அச்சபையின் காரியக் குழுவினர் காரியதரிசி செல்வரத்தினத்தையும் மற்றவர்களையும் நெருக்குவதாகத் தெரிகின்றது. காரிய நிர்வாகக்குழு செனெட்டில் நியமனப் பிரதிநிதியாக வருவதற்கே சிபார்சு செய்து அரசாங்கத்தின் உதவியை நாட வேண்டுமென்றும் தீர்மானித்திருந்ததாம். அதன்படி அரசாங்கத்திடம் சென்று பலன் கிட்டாது போகவே மகாசபையினதோ நிர்வாக சபையினதோ அதிகாரமின்றி திரு ஜி. நல்லையாவுடன் போட்டியிட்டுள்ளார்.

### மோசடியும் ராஜிநாமாவும்

இதில் முக்கிய விஷயமொன்றும் நடைபெற்றிருப்பதாக அறியப்படுகின்றது. அஃது யாதெனில் காரியதரிசி திரு செல்வரத்தினம் கல்லூரியில் படிப்பித்துக் கொண்டிருக்கும் வேளையில் திரு எம். ஸி. சுப்பிரமணியம் கோஷ்டி சென்று ரைப் அடிக்கப்பட்ட சில காகிதங்

(9-ம் பக்கம் பார்க்க)

எங்கே என்னுடைய? '(f)பீட்றைட்' பாலூட்டி



(f)பீட்றைட் பாலூட்டி உங்கள் குழந்தைகளுக்கான பாலை கடைசி வரையும் இதமான சூட்டோடு வைத்திருக்கும்.



இந்தக் கவர்ச்சி மிக்க புதிய(f)பீட்றைட் பாலூட்டிப் போத்தலின் விலை ரூ. 4-85 தான்;

எங்கும் கிடைக்கும்.

லூயிஸ் பிரவுண் & கோ. லிமிட்டெட்,
இன்வெரஸ்க் ஹவுஸ்,
மக்கலம் ரோட், கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியம்:

# கதிர் காத்த காரிகைகளின் காவற் குரலொலி


## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ANANDA MEDICAL HALL 174, SEA STREET, COLOMBO 11

ஆனந்தா லேகியம் நாள்தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கை, கணுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங்கால், கை எரிச்சல், வாய்வுக்குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக்கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டுவந்தால் மூலவியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை:

பெரியது ரூ. 5-75. சிறியது ரூ. 3-00.

இத்துடன், "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச்சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனாமாக அனுப்புவோம்.

பெரியது ரூ. 5-50. சிறியது ரூ. 3-00

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:-

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11


## கைவளைக் கிண்கிணி ஓசை

## உண்ண வந்த கானமயிற் கூட்டத்தை களிநடம் புரியவைத்த அற்புதம்!

### வண்டினத்தின் இன்னிசை, சேறமிழ் சகட மாடுகளின் முனகல், வலவனின் உரப்பும் குரல்

#### 'காமரு கவின்' நாட்டிலே பாவலன் கண்டதும் கேட்டதும்

பின்பனிக்காலத்தின் ஆரம்ப காலமது. கதிர் தாங்கிய செந்நெல் முற்றிக் காற்றடிக்கும் திசை நோக்கிச் சாய்ந்து நின்றது.

கண்டாசை கொண்டன கானகத்து மயில்கள். களவாடின. ஒன்றிரண்டா? ஒரு நாளிருநாளா? கணக்கற்ற மயில்கள்! கணக்கற்ற நாட்கள்! கதிர்கள் குறைந்தன. காவலிட்டனர் உரிமையாளர்கள். அதுவும் கன்னியரை!

**என்னே! அவர் களனி?**

பக்கத்திற்குப் பக்கம் பைங்குவளை மலர்கள். அதனூடே நீலமாய்த் தெரிகிறதே! அது என்ன நீலோற்பலமா? ஆமாம். நீலோற்பலமேதான்! அப்படியென்றால் கைதேர்ந்த நூல் வினைஞன் யாத்த கலிங்கமா? அது தான் இல்லை. இடையீடு இன்றித் தொடுத்த முழுக்குவளை மலர்கள்! அவற்றினூடே மணி பதித்தன்ன ஆம்பல் மலர்கள்!! அப்படிப் பின்னிப் புனைந்த பூந்துகிலாடை அது.

பூந்துகிலுடுத்துப் புதுமலர் சூடி கதிருண்ணும் கானமயில் ஓட்ட வருகிறார்கள் மருதநிலத்து மடமகளிர்.

**மரமேறி ஓச்ச!**

வயலருகே வந்துவிட்டார்கள். காற்சதங்கை ஒலி செய்திருக்க வேண்டும். அல்லது கூட்டாக வந்த அக்குமாரிகள் பாடியிருக்க வேண்டும். கண்டோ, கேட்டோ நீண்ட தலைபதித்து நெற்குழாத்தடி ஓடி மறைந்தன மயில்கள்.

கண்டார்கள் காவற் பெண்கள். கல்லெடுத்து வீசினர். கவண் வீசிச் சுழட்டினர்.

பக்கத்தே நின்ற மருத மரங்களிற் பறந்தமர்ந்தன மயில்கள். பாவம் என் செய்வார்கள்! தூரத்தே சென்றால் திரும்பி வர நேரமாகும். அம்மானையும், சொக்கட்டானும் ஆடிக் களிக்கலாமன்றோ!

ஆனால் அப்பக்கம் இப்பக்கம் அருண்டுவிட்டால் திரும்பி வந்து குவிந்துவிடும் வகையில் பக்கத்து மரத்தில் பார்த்துக்கொண்டே இருந்தன மயில்கள். சீட்டியடித்தார்கள். சிறு கற்களை வாரி வாரி வீசினார்கள். கவணைச் சுழட்டினார்கள். களைத்தார்கள். மயில்கள் நகரவில்லை.

மென்மைசால் பெண்மை நெஞ்சு ஆண்மை பெற்றது. மரத்தில் ஏறினர். "ஓய், ஓய்" "ஆய், ஆய்" மயில்களை ஓச்சினர்.

"குவளைத்தூ நெறியடைச்சி
அலர்ந்தவாம்பலகமடிவையர்
..............—............நணி
மருதமேறித் தெறுமார்"

(பதிற்றுப்பத்து)

பக்கத்துச் சோலை. அங்கே ஓர் நாடக அரங்கு உருவாகிறது. மரதிருந்த மயில்களை ஓட்ட மங்கையர் இசைத்த ஒலி ... றது. பூங்காவில் தங்கிய மயில் நங்கை ஆடுகின்றன. மங்கையர் கையணைமந்தவளையல்கள் பின்னணி பாடுகின்றன.

"எல்வளை மகளிர்
தெள்விளியிசைப்பிற்
பழனக்காவிற்
பசுமயிலாலும்"

(பதிற்றுப்பத்து)

மஞ்ஞையின் எழிலுறு நடனமும், மங்கையர் மயில் ஓட்ட எழுப்பிய இசையையும் அவர்தம் வளையல்கள் பாடிய பின்னணியையும் கேட்டான் ஒருவன். இன்புற்றான் என்று சொல்ல வேண்டியதே இல்லை.

கதிர் முற்றி வெட்டும் காலத்தில் நீர் ஏன்? குளத்தின் வடிகால்கள் எல்லாம்

**தேனீ**

மூடப்பட்டுவிட்டன கதவங்களால்.

பாய்ந்தோடும் நீரைத் தடுக்க முடிந்ததேயல்லாமல், மெல்லெனப் பொசியும் நீரைத் தடுக்குமாற்றல் அக்கதவங்கட்கில்லை.

பொசிந்தோடி வரும் நீரின் செல்வாக்கு. நிரை நிரையாப் பூத்துக் குலுங்கும் நெய்தல் மலர்கள் அவற்றிடைத் தேன் உண்டு செம்மாந்திசை பாடும் வண்டினம்! அந்த இசையையும் கேட்டான் அவன்.

**சேற்றுக்குள் வண்டி**

இந்த இயற்கை அழகு பொங்கிக் குதிக்கும் வழியாகப் பறந்தோடி வருகிறது வண்டியொன்று, அந்தோ நெய்தல் நிரையை அண்மிக்கிறது வண்டி. அலமந்து ஆர்ப்பரிக்கின்றன அச்சமடைந்த வண்டினம்.

பொய்கைநீர் பொசிந்தோடும் அந்தச் சதுப்பு நிலத்திற்கு வந்துவிட்டது வண்டி. ஐ! ஐயோ!! வண்டி கீழிறங்குகிறதே!

பாவம் வண்டி சேற்றில் புதைந்துவிட்டது. மாடுகளைத் தட்டி உரப்பினான் வலவன். பலனில்லை. அடித்தான்; நெடித்தான். அப்பொழுதும் பலன் கிட்டவில்லை.

துள்ளித் துள்ளிக் காளைகளை உரப்பினான். தலைவன் நிலையறிந்த அத்தகைமைசால் காளைகளும் தம் வலு முழுதும் ஒன்றாக்கி முயன்றன.

"பொய்கை வாயிற்
புனல்பொரு புதவின்
நெய்தன் மரபிரைகட்
செறுவின்
வல்வாயுருளிகதுமெனமண்ட
நல்லெருது முயலும்
மளறுபோகு விழுமத்து
சாகாட்டாளர் கம்பலை"

சேற்றினின்று இழுக்கும் அந்த வருத்தம் எருதுகளுக்கு. வண்டி ஓட வேண்டுமென்ற துடிப்பு வலவனுக்கு. எருதுகளின் முனகலும், துள்ளித் துள்ளி உரப்பும், வருத்தம் தோய்ந்த வலவனின் குரலும் சொல்லாமற் சொல்லின அவர் தம் துயரை. இதையும் கண்டான் அந்த மனிதன்.

**கற்பனையுலகில்**

அழகினை நுகரா ஆர்தான் மறுப்பார்? அதுவும் கவிஞன் என்றால் பேசவா வேண்டும்! நமது மனிதனும் ஒரு கவிஞனேதான்.

இந்த நாடோ அவனுக்குப் புதியது. காணும் காட்சிகளோ காமரும் கவினுறு காட்சிகள்! இத்தனை நாள் சுற்றி அலைந்து விட்டான். அவன் செவிகள் பூசல் ஒலி கேட்கவில்லை. போர் முரசு கேட்கவில்லை. இல்லையென்ற குரல் கேட்கவில்லை. இரும்பிணிக் குரல் கேட்கவில்லை.

அச்சமும், ஐயமும், போரும், நொதுமலுமொழிந்து அமைதியும், அழகும் பூத்துக் குலுங்கிய அப்பொன்னாட்டில் அவன் கேட்டவை மயிலோட்டும் மங்கையின் ஒலி - அவள் கைவளை ஓசை - ஆடும் மயிலின் நடன ஒலி - மதுவுண்டு பாடும் வண்டின் இசை - சேற்றுள் புதைந்த வண்டியை இழுக்கும் மாடுகளின் முனகல் - அவற்றை உரப்பும் வலவனின் குரல் - இவைகள்தாம். எண்ணி எண்ணிவியந்தான். "காமரு நாடு" என்று கூற வந்தான். ஆனால் அவனால் அப்படிக் கூற முடியவில்லை.

சலனமற்ற அழகில் தன்னை மறந்துவிட்ட அவனால் "காமுறு பேரழகு" என்று கூறாமல் வேறெப்படிக் கூற முடியும். "காமரு கவின்" என்று கூறிக் கூறிக் களிப்புற்றான் பாலைக் கோதமனாரெனுமப் பைந்தமிழ்ப் பாவலன்.

### அ. இ. அருந்ததியர் சங்க கமிட்டிக் கூட்டம்

அகில இலங்கை அருந்ததியர் சங்கக் கமிட்டிக் கூட்டம் சென்ற 9—11—57ல் கொழும்பு கிரீன் லேனிலுள்ள சங்கக் காரியாலயத்தில் சங்கத் தலைவர் திரு. மா. மு. இராஜகோபால் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின:

(1) திரு. ஜி. நல்லையா செனட்டராக நியமனம் பெற்றதற்கு இச்சங்கம் தனது பாராட்டுதலை தெரிவித்துக்கொள்கிறது.

(2) தமிழ் சமுதாயத்தின் அங்கமெல்லாம் புரையோடிப் போயிருக்கும் தீண்டாமைத் தொழு நோயை வேரறுக்க யாழ் நகரில் இ. தி. மு. க. டிசம்பர் 28-29ம் நாட்களில்நடாத்தும் "சமூக சீர்திருத்த மகாநாட்டை" இச்சங்கம் வரவேற்பதோடு பொதுச் செயலாளர் திரு. ஏ. பி. சுந்தரராசனின் தலைமையில் ஏழு பேரைக் கொண்ட குழுவொன்றையும் அனுப்புவதென தீர்மானிக்கிறது.

(3) கொழும்பு முழுவதற்கும் வட்டாரக் கமிட்டி உறுப்பினர்கள் தெரிவு செய்து அருந்ததிய மக்களை சங்க அங்கத்தவர்களாக்குவதற்கும் சங்கத்தின் சார்பில் பத்திரிகை வெளியிடுவதற்கும் திருவாளர்களான பெ. கி. சண்முகம், மா. சே. அருள், சே. சேதுபதி, சே. சங்கர் ஆகியோரைக் கொண்ட கமிட்டியொன்றும் நிறுவப்பட்டது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கே. விநாயகமூர்த்தி, ஆரயம்பதி

கே: பெண்கள் ஒரே நாளில் இரண்டு மூன்று என்று ஆடை மாற்றுகிறார்களே, எதற்காக?

ப: பாவம், ஜவுளிக்கடைக்காரனும் அவன் பிள்ளை குட்டிகளும், சலவைத் தொழிலாளியும் அவன் பிள்ளை குட்டிகளும் பிழைத்துப்போகவேண்டும் என்ற பரோபகாரத்திற்காக.

ஃ

தவம், சித்தாண்டி

கே: ஒரு சிறந்த பத்திரிகாசிரியனுடைய பார்வை எப்படிப்பட்டதாயிருக்க வேண்டும்?

ப: எவனுடைய கண்கள் அற்பத்தை அண்டமாகக் காட்டும் பூதக் கண்ணாடியாயிராமல் எதிர்காலத்தை ஊடுருவிப் பார்க்கும் தூரதிருஷ்டிக் கண்ணாடியாய் இருக்குமோ அவன்தான் சிறந்த பத்திரிகாசிரியனுக்கேற்ற பார்வையுடையவனாவான்.

ஃ

ஏ. எம். இஸ்மாயில், ஏறாவூர்

கே: பெண்கள் அநேகமாக மெல்லிய ஆடைகளை அணிவதேன்?

ப: மெல்லிய ஆடையைத்தானும் அவர்கள் அணியாவிட்டால் நடிகை அங்கமுத்துப் போன்றவர்களை நாம் மெல்லியலார் என்று சொல்வதெப்படி?

ஃ

செல்வி க. பரஞ்சோதி,
யாழ்ப்பாணம்

கே: உலகில் அதிகம் சக்தி வாய்ந்த ஒலிபரப்பு சாதனம் எது?

ப: அரட்டை படிக்கும் பெண்களின் வாய்.

ஃ

மு. சிவராசா, சுளிபுரம் கிழக்கு

கே: திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் தமது கூட்டங்களில் எல்லாம் கடைசிப் பேச்சாளராகவே பேசுவதன் இரகசியம் என்ன?

ப: அவர் முதலில் பேசி முடித்துவிட்டால், குருவைப் பற்றி அவருடைய சிஷ்யர்கள் புளுகிப் பேசும் கூளப் பேச்சுக்களைக் காதில் போட்டுக் கொள்ள ஒரு காகம் குருவிகூடக் கூட்டத்தில் காத்துக் கிடக்காது என்பதைத் திரு ஜீ. ஜீ. நன்கறிவார்.

ஃ

மு. கந்தவனம், கரவெட்டி

கே: நான் ஒரு குறும்புக்காரன். எனக்கு வாழ்க்கைத் துணைவியாக ஒரு குறும்புக்காரி தேவை. என்ன செய்யலாம்?

ப: கொஞ்சம் பொறுத்துக்கொள்ளும். ஒரு 14 வருடங்கள் கழித்து விடட்டும். தேவையான இடத்திற்கு செல்வி குயுக்தி வந்து சேருவாள்.

ஃ

சுந்தரமணி, டிக்கோயா

கே: இக்காலப் பெண்கள் தங்கள் தலையில் சூட்டிக்கொள்ளும் ஆபரணத்துக்குப் பெயரென்ன?

ப: முடி மயிர்!

கே: குயுக்தியாரே, தங்கள் மூளையின் எடையென்ன?

ப: நான் படிக்கும்போது இரண்டு வண்டிக் களிமண்ணின் எடையென்று எங்கள் இலக்கண வாத்தியார் சொன்னதுண்டு. இப்போது இரண்டு 'லொறி' களி மண்ணின் எடையாவது இருக்க வேண்டும்.

ஃ

டி. என். ராஜா, மட்டக்களப்பு

கே: சூரியன் வெப்பம் கூடியதா? சந்திரன் வெப்பம் கூடியதா?

ப: சுடுமணலில் சிக்குண்டவனுக்கு சூரிய வெப்பம் கடுமையானதாகத் தெரியும். காதலனைப் பிரிந்து காமத்தால் வாடும் மங்கைக்கு சந்திர வெப்பம் சகிக்க முடியாததாகத் தோன்றும்.

ஃ

க. வை. சிவசுப்பிரமணியம்,
தம்பாலை

கே: பெண் புத்தி பின் புத்தியா? பெண் புத்தி பொன் புத்தியா?

ப: ஒரு பெண்ணை நகைக் கடைக்கு முன்னால் கொண்டு போய் நிறுத்துங்கள். அவள் புத்தி பின் நோக்கி வருகிறதா அன்றிப் பொன் நோக்கி முன்னேறுகிறதா என்பதைப் பார்த்தால் இக்கேள்விக்கு விடை தெரிந்து விடுகிறது.

செ. சூ. பிள்ளை, மிருசுவில்

கே: 'மதுவும் மங்கையும் மனிதனுக்கு சத்துரு' என்கிறார் ஒருவர். இது சரியா?

ப: மது மனிதனுக்குச் சத்துரு என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் மங்கையை அப்படிச் சொல்ல முடியாது. மனிதன் மனிதனாக வாழும் வரை மங்கை அவனுக்குத் தீமை செய்ய முடியாது. மனிதன் மிருகமாக வாழும்போதுதான் மங்கை விஷமாகிறாள்.

ஃ

பி. எம். முஹிதீன், சீனக்குடா

கே: ருஷிய ரொக்கட் அரைத் தொன் பாரத்தை ஆயிரம் மைல் கொண்டு சென்றதாமே, என்ன ஆச்சரியம்!

> மிஸ்டர் குயுக்தியார்
> C/O சுதந்திரன்.
> த. பெ. 1183
> கொழும்பு—12.

ப: இதில் என்ன ஆச்சரியம், எங்கள் மந்திரி மரிக்காரை அது ஜப்பான் வரை கொண்டுபோகத்தான் முடியுமா?

ஃ

சா. ஏரம்பு, மட்டக்களப்பு

கே: குயுக்தியாரே, இலங்கை விஞ்ஞானிகள் எப்போது வானவெளிக்கு செயற்கைச் சந்திரனை அனுப்புவார்கள்?

ப: இந்த அற்ப காரியத்துக்கு விஞ்ஞானிகள் எதற்கு? நமது அரசியல்வாதிகளே இந்தக் காரியத்தை தேர்தல் மேடையில் ஏறி நின்று செய்து காட்டுவார்களே!

ஃ

ச. மகேந்திரராசா, திக்கம்

கே: இலங்கையின் சனநாயகத்தைப்பற்றித் தங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: இவ்வளவு காலமும் சேனநாயகமாயிருந்தது. இப்போது பண்டாரநாயகமாயிருக்கிறது. என்று அது செல்வநாயகமாகிறதோ அன்றுதான் தமிழ் பேசும் மக்களுக்கு இந்த நாட்டில் உண்மை சனநாயகம் ஏற்பட்டது என்று பொருள்.

ஃ

ம. சரவணபவன், காரைநகர்

கே: மங்கை மகிழ்வது எப்பொழுது?

ப: பக்கத்துவீட்டுப்பெண் அவள் மீது பொருமைப்படும்போது.

எஸ். அன்னபூபதி, நயினாதீவு

கே: "ஆயிரம் பேரைக் கொன்றவன் அரை வைத்தியன்" என்பது சரியா?

ப: பிழை. "ஆயிரம் வேரைக் கண்டவன் அரை வைத்தியன்" என்றிருக்க வேண்டும். அதாவது ஒரு வைத்தியன் சுமார் 2000 வேர்களை — மூலிகைகளையாவது தெரிந்தவனாக இருக்க வேண்டும் என்பது இதன் பொருள்.

ஃ

சி. என். மாரிமுத்து, அராலி

கே: விவாகம் என்றால் என்ன?

ப: "விவாகம் என்றால் முற்றுகையிடப்பட்ட ஒரு கோட்டை. உள்ளே இருப்பவர்கள் வெளியே வர விரும்புகிறார்கள். வெளியே இருப்பவர்கள் உள்ளே புக விரும்புகிறார்கள்" என்று ஒரு மேல்நாட்டறிஞர் கூறியிருக்கிறார்.


கே: தங்களுடைய வீட்டில் எலியுண்டா?

ப: உண்டு; ஆனால் அந்த எலிகள் பட்சணங்களைத் திருடுவதில்லை. மணிப் பேர்ஸைத்தான் கொறிக்கின்றன.


ஒவ்வொரு வீட்டுப் பெண்ணும் விரும்பும்
தையல் மெஷின்

"கெயிட் & நியூ"

பக்கங்களுக்கு இயங்கி, அளவற்ற விதமான சித்திரத் தையல், பொத்தான் தையல், வளைவுத் தையல் பூவேலைகள் செய்யும் அதிசய மெஷின்.



இது ஒரு ஜெர்மன் தயாரிப்பு

| | |
|---|---|
| கை மொடல் | ரூபா 375-00. |
| கால் மொடல் | ரூபா 450-00. |
| டெயிலர் மொடல் | ரூபா 475-00. |

சோல் ஏஜண்டுகள்:

டொலர் கார்ப்பரேஷன்,

71, குமார வீதி, புறக்கோட்டை, கொழும்பு.
போன்: 6910.


அறிவியல்:

# 'கெய்ஸர்' வெந்நீர் ஊற்று

## தோன்றும் இடங்களும் இயங்கும் விதமும்

வெந்நீர் ஊற்றுகளைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள்; பார்த்திருப்பீர்கள். ஆனால் விநோதமான ஒரு வகை வெந்நீர் ஊற்றைப் பற்றி இப்பொழுது தெரிந்து கொள்வோம்.

எரிமலைப் பகுதிகளில் சாதாரணமாகக் காணப்படும் இந்த ஊற்று எப்பொழுதும் வேலை செய்வதில்லை. முதலில் 100 அடி முதல் 200 அடி வரைகூடக் கொதிக்கும் நீர் பீச்சப்படுகிறது. அதைத் தொடர்ந்து அதிக சத்தத்துடன், மிகுந்த விசையுடன் நீராவி வெளி வருகிறது. பிறகு நீண்ட நேரத்திற்கு ஒருவிதமான வேலையும் இருப்பதில்லை. சிறிது நேரம் கழித்து மீண்டும் வெந்நீரும், நீராவியும் வெளிவருகின்றன. இவ்வாறு விட்டு விட்டு வேலை செய்யும் இந்த ஊற்றுக்குப் பெயர்தான் 'கெய்ஸர்' என்பது.

இது எவ்வாறு வேலை செய்கிறது? முதலில் வெந்நீரும், நீராவியும் வெளிவருகின்றன. பிறகு ஒன்றும் நடப்பதில்லை. இந்த ஊற்று எவ்வாறு அமைந்திருக்கிறது. ஊடே நீண்ட நேரம் அமைதி ஏற்படுவதன் காரணம் என்ன. பூமிக்கடியில் ஏதேனும் இயந்திரம் இருக்கிறதா, என்றெல்லாம் தெரிந்து கொள்ள நம் மூளையைத்தான் உபயோகப்படுத்த வேண்டும். ஏனெனில் வெந்நீரும் ஆவியும் தரையிலிருந்து மேல் நோக்கிப் பீச்சப்படுகின்றன. ஆகவே இதற்கு மூல காரணமாக உள்ள அமைப்பு பூமிக்குக் கீழேதான் இருக்கவேண்டும். நம்மால் கீழே எவ்வாறு அமைந்திருக்கிறது என்று அறிய இயலாது. எனவே 'இவ்வாறு இருந்தால்......?' என்று ஆரம்பித்துப் பார்ப்போம்.

### இப்படி நடக்கலாம்

பூமிக்கடியில் எப்பொழுதும் தண்ணீர் [illegible] கொண்டே இருக்கிறது. பூமியின் நடுப் பாகத்திலிருந்து அதிக உஷ்ணமான நீராவி மேல் நோக்கி வந்து கொண்டிருக்கிறது. கெய்ஸரின் முக்கிய குழாய் 100 அடிகளுக்கும் அதிகமாய் கீழே சென்று, அங்கு பூமிக்கடியில் இருக்கும் காலியான இடங்களுடன் இணைக்கப்பட்டிருக்கின்றது. சுற்றிக் கொண்டே இருக்கும் தண்ணீர் இந்தக் காலியான அறைகளில் சேருகிறது. அப்பொழுது பூமியின் நடுப் பாகத்திலிருந்து வரும் உஷ்ணமான நீராவி சேமிக்கப்பட்டிருக்கும் இந்த நீருடன் கலந்து நீரைக் கொதிக்க வைக்கிறது. மிஞ்சிய நீராவி தண்ணீருக்கு மேல் இருக்கும் அறையின் காலி பாகத்தில் சேருகிறது. இவ்வாறு சேரும் நீராவி அதிகமான அதிகமாக ஆரம்பிக்கிறது. இந்த அழுத்தம் ஒரு நிலையைக் கடந்தவுடன் நீராவி தண்ணீரை வெளித் தள்ள ஆரம்பிக்கிறது. இப்பொழுது கொதிக்கும் நீர் மிக விசையுடன் வெளியேறுகிறது. அதைத் தொடர்ந்து நீராவியும் ஆங்காரத்துடன் வெளியேறுகிறது.

அறைகள் காலியாகி விட்டன. மீண்டும் நீர் நிறைய ஆரம்பிக்கிறது அறைகளில்.

(11-ம் பக்கம் பார்க்க)


லதா
கேம்பிரிக்

★ புடவையில் புதுமையானது
★ தரத்தில் உயர்ந்தது
★ ரகத்தில் சிறந்தது
★ பாவனைக்கு உகந்தது
★ 40 கண்கவர் டிசைன்களில் கிடைக்கும்.

இன்றே உங்கள் பக்கத்திலுள்ள புடவை வியாபாரியிடம்

லதா கேம்பிரிக்

கைக் கேளுங்கள்.

ஏக விநியோகஸ்தர்கள்:

குண்டன்மால்ஸ் லிமிட்.,

26, கெய்ஸர் வீதி — கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'எழுத்து திருட்டு' மன்னிக்க முடியாத குற்றம்

## அதனால் இலக்கியமும் வளராது எழுத்தாளர்களும் வளரமுடியாது

## மனித குலத்தை மாண்புறச் செய்யும் மகத்தான பணி பேனு பிடிப்பவர்களுடையது

### பொறுப்புணர்ச்சியோடு அவர்கள் நடக்க வேண்டும்

''எந்த தொழிலிலுமே சில கரும் புள்ளிகள் இருப்பது வழக்கம். எழுத்தாளர் தொழிலும் இதற்கு விதி விலக்கல்ல. அதிலும் எழுத்துக் கலை மிகவும் கவர்ச்சி வாய்ந்தது. பொருள் வருவாய் குறைவாய் இருந்தாலும் கிடைப்பதற்கரிய புகழையும், பெயரையும் அதன் மூலம் பெற முடியும். ஆகவே, புகழுக்காக ஆசைப்பட்ட சிலர், இன்னொருவர் எழுதிய சிறந்த எழுத்துக்களையும் கற்பனைகளையும் கஷ்டப்படாமல் தமதாக்கிக்கொண்டு அனுகூலம் அடையப் பார்க்கிறார்கள். இந்த விஷயத்தில் விகடனுக்கு ஓரளவு அனுபவம் உண்டு'' என்று சென்னையிலிருந்து வெளிவரும் ஆனந்த விகடன் 10—11—57 இதழில் 'பேனு முனையின் பெருமை' என்ற தலைப்பில் தீட்டியுள்ள தலையங்கத்தில் கூறுகிறது.

சுதந்திரனுக்கும் இந்த அனுபவம் இல்லாமலில்லை. எனவே இதற்கு பொறுப்பாயுள்ளவர்களுக்கு பயன் படும் என்ற நம்பிக்கையில் பிரஸ்தாப தலையங்கத்தை இங்கு மறு பிரசுரம் செய்கிறோம்.

— ஆசிரியர்

மனிதன் தோன்றியபோதே மனமும் அவனுக்கு அளிக்கப்பட்டது. அதனால் எண்ணிப் பார்க்கும் சக்தி அவனுக்கு ஏற்பட்டது. அந்த எண்ணங்களை வெளிப்படுத்த மொழி என்னும் ஒரு வழியை அவன் வகுத்துக் கொண்டான்.

எண்ணிப் பார்க்கும் திறமை வந்தபோது, அவன் காலத்தை உணரலானான். 'நேற்று' 'இன்று' 'நாளை' என்பதைப் பற்றிச் சிந்தித்தான். ஆனால் எண்ணங்களை வெளியிட அவன் கண்டு பிடித்த பேச்சு, பேசியதுமே மறைந்து விடுகிறது. 'நாளை'க்கு நீடிப்பதாக இல்லை. ஆதலால் என்றும் அது நீடித்திருப்பதாக எழுத்து என்ற புது சாதனத்தைக் கண்டு பிடித்தான்.

எண்ணுவதையெல்லாம் எழுத உலகில் இடம் போதாது. ஆகவே, எண்ணத்தை அறிவால் எடை போட்டான்: நன்மை, தீமை என்று கண்டான். அந்த எழுதினான். இவ்வாறு எழுத்து அவனுக்கு அடங்கியது. மனிதன் எழுத்தாளனானான்.

#### எழுத்தின் சாதனை

கல்லிலே எழுதினான். தகடுகளிலே எழுதினான். சுவடிகளில் எண்ணங்களுக்கு உருக் கொடுத்தான். காகிதமும் செய்து, அச்சு யந்திரமும் கண்டு பிடித்து, தன் சிந்தனையை உலகமெல்லாம் பரப்பினான்.

மனிதனுக்கே உரித்தான தனிச் சிறப்புக்கெல்லாம் இந்த எழுத்தேதான் காரணம். அதுவே அவன் வருங் காலத்தை உருவாக்கி முன்னேற்றத்துக்கு அடிகோலியது. பண்பு, நாகரிகம், கலாசாரம், கலை, மொழி, ஒற்றுமை போன்ற எல்லாச் செல்வங்களையும் அளித்தது எழுத்தேதான்.

#### எழுத்தாளன்

மனித எண்ணங்கள் உருவாகியிருப்பதும் அவன் அறிவு வளர்ந்திருப்பதும் எழுத்தாளர்களால் தான். எழுதுகோல் உடைவாளைவிடச் சக்தி வாய்ந்தது. புரட்சிகரமான மாறுதல்களுக்கும், சமூகச் சீர்திருத்தங்களுக்கும் கூட எழுத்தாளர்கள்தான் காரணம். ஒவ்வொரு தேசத்தின் வரலாற்றையும் உருவாக்குவதில் எழுத்தாளர்களுக்குப் பெரும் பங்கு உண்டு.

#### இலக்கியங்கள்

ஒரு தேசத்தின் பெருமையை அதன் இலக்கியங்களிலிருந்துதான் மதிப்பிடுகிறோம். தமிழ் நாடு என்றும் பெருமையுடன் தலை நிமிர்ந்து நிற்பதற்குக் காரணம், வள்ளுவரும், கம்பரும்; பாரத நாட்டின் பண்பு உலகப் புகழடைவதற்குக் காரணம் வியாசரும், வால்மீகியும் தான். ஷேக்ஸ்பியரையும், மில்டனையும் படித்தால் ஆங்கிலேயர்களிடம் மதிப்பு ஏற்படுகிறது. கிரேக்க, ரோம சாம்ராஜ்யங்கள் மறைந்தும் அவைகளின் புகழ் இன்றும் நிலைத்து நிற்பதற்குக் காரணம் அவைகளின் காவியங்களே.

இன்று நம் நாடு விடுதலையடைந்து நம் சுதந்திரப்பேரொளி உலகெங்கும் வீசுவதற்குக் காரணம், பாரதி, தாகூர், இக்பால் போன்ற மகா கவிஞர்களே.

#### எழுத்தாளர் காந்தி

நமக்குச் சுதந்திரம் பெற்றுக் கொடுத்த காந்திஜியே ஒரு தலை சிறந்த எழுத்தாளர்; சத்தியத்தை எழுதி வைத்த உத்தமர். அதனால்தான் அவர் வகுத்தபாதை எளிதில் நம் மனதில் பதிந்தது. அதிருஷ்டவசமாக இன்று கூட நமது அரசாங்கத்துக்குத் தலைமை வகிக்கும் நேருஜி, டாக்டர் ராதாகிருஷ்ணன் போன்றவர்களும் சிறந்த எழுத்தாளர்களாகவே விளங்குகிறார்கள்.

#### வளரும் கருத்து

எழுத்தின் சக்தி அளப்பதற்கரியது. இன்று உலகில் அறிவு வளர்ந்து பல புதுக் கருத்துக்களும், கொள்கைகளும் உருவாகி மனித சமூகத்தை ஒன்று சேர்க்கும் வகையில் அமைந்து வருகின்றன. அறிவால் தூரத்தைக் கடந்து விட்டோம். ஆயிரம் மைல்களுக்கு அப்பாலிருக்கும் தேசங்கள் கூட நவீன வசதிகள் மூலம் இப்போது நமக்கு அண்டை வீடுகளாகிவிட்டன. 'ஒரே உலகம்' 'ஒரே அரங்கம்' என்று மனித சமுதாயம் முழுதும் ஒரு குடும்பமாக வாழ்ந்தால்தான் பிழைக்க முடியும் என்ற கருத்து வளர்ந்து வருகிறது.

இது ஒருபுறமிருக்க, விஞ்ஞான வளர்ச்சியால் ஏற்பட்ட தீய சக்திகளும் தலை தூக்கி நிற்கின்றன. மனிதனை மனிதன் அழித்து நிர்மூலமாக்கக் கூடிய ஆயுதப் போட்டியில் அரசாங்கங்கள் ஈடுபட்டிருக்கின்றன. மனிதனை மனிதன் அடக்கியாள வேண்டும், ஆதிக்கம் செலுத்த வேண்டுமென்ற அரசியல் கருத்துக்கள், வெறுப்பு, துவேஷம் போன்ற தீய உணர்ச்சிகளைத் தூண்டி விட்டிருக்கின்றன.

#### உலகம் வாழ்வது எழுத்தாளர் கையில்...

இந்தச் சூழ்நிலையில் எழுத்தாளர்கள் பொறுப்பு மிகவும் அதிகமாகிறது. சென்ற காலத்தை உருவாக்கிய அவர்களே வருங்காலத்தையும் உருவாக்க உதவவேண்டும். உலகத்தை, அன்பு நெறியில் சமாதானமாக வாழச் செய்வது இன்றைய எழுத்தாளர்கள் கையில் தான் இருக்கிறது.

இதை உலகத்திலுள்ள எழுத்தாளர் சமூகம் உணர்ந்து அவர்கள் ஒன்றுபட்டுச் செயல் புரிய வாய்ப்பளிக்கக் கூடிய உலக ஸ்தாபனம் ஒன்றைச் சில வருடங்களுக்கு முன் அமைத்துக் கொண்டது. அதுதான் பி. இ. என். ('பென்') என்னும் உலகத்திலுள்ள கவிஞர், கட்டுரையாளர் கதாசிரியர்களைக் கொண்ட ஸ்தாபனம்.

#### பரோடா மகாநாட்டில் நேரு

சென்றவாரம் பரோடாவில் இந்த உலக ஸ்தாபனத்தின் மகாநாடு நடைபெற்றது. இந்த மகாநாட்டைத் திறந்து வைத்த பிரதமர் நேருஜி அதிவேகமாக மாறிக்கொண்டிருக்கும் இந்த உலகத்தில் எழுத்தாளர்களின் பொறுப்பு அதிகமாகிறது என்று குறிப்பிட்டார். சிந்தனையாளர்களுக்குச் சுதந்திரம் தரப்பட வேண்டுமென்றும் கூறினார். உபஜனாதிபதி ராதாகிருஷ்ணன், டாக்டர் சி. பி. போன்ற அறிஞர்களும் இதில் பங்கெடுத்துக்கொண்டனர். பொதுவாக எழுத்தாளர்கள் பொறுப்பைப் பற்றியும் எழுத்தாளர்களுடைய பொதுநன்மைக்கான பல பிரச்னைகள் பற்றியும் அங்கு விவாதித்தார்கள்.

#### அபாயம்

முக்கியமாக அரசாங்கம், எழுத்தாளர்களுக்கு ஆதரவு என்ற முறையில் எழுத்துக் கலையில் குறுக்கிடும் அபாயம் சுட்டிக் காட்டப்பட்டது. ''அந்த ஆதரவு, எழுத்துக் கலையை சர்க்காருக்கு அடிமையாக்கும் வகையிலோ புதுக் கருத்துக்களை நசுக்கும் வகையிலோ ஆகிவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அரசியல் வாதிகளின் ஆதிக்கத்துக்கு எழுத்து பணியாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்'' என்றும் மகாநாட்டில் பேசியவர்கள் எடுத்துக் காட்டினார்கள்.

#### எழுத்து-கருத்து திருட்டு

இவைகள் ஒருபுறமிருக்க, இன்னொரு சிறிய அபாயத்தையும் இங்கு சொல்லத்தான் வேண்டி இருக்கிறது. எந்தத் தொழிலிலுமே சில கரும் புள்ளிகள் இருப்பது வழக்கம். எழுத்தாளர்

(9-ம் பக்கம் பார்க்க)

மதிப்புரை:-

### ஆனந்தவிகடன் தீபாவளி மலர்

தாய் மொழிச் சேவையிலும் கலைப் பணியிலும் தமிழ் நாட்டில் விகடன் முன்னணியில் நிற்கிறது என்ற கருத்தை உறுதிப்படுத்துவதாய் அமைந்திருக்கிறது இவ்வாண்டின் ஆனந்தவிகடன் தீபாவளி மலர்.

திராவிடத்து மாநில (நாலு) முதன் மந்திரிகள் மலருக்கு விஷயதானம் செய்திருப்பது விகடனின் செல்வாக்கை எடுத்துக் காட்டுவதோடு மலருக்கு தனிச் சிறப்பு அளிப்பதுமாகும்.

முதலிருந்து கடைசிவரை எந்தப் பக்கத்திலும் கவர்ச்சிக்குக் குறைவில்லை. தமிழ் மணத்தையும் கலை இன்பத்தையும் அனுபவிக்க முடிகிறது.

விகடன் மலரில் இடம்பெற்றுள்ள எந்தக் கவிதை, கதை, கட்டுரையையும் தள்ளிவிட முடியாது அவை அனைத்தும் கருத்துக்கு விருந்து. ஹாஸ்யக் களஞ்சியம் சோர்ந்த உள்ளத்துக்கு சிறந்த மருந்து. குறிப்பாக திரு. கொத்தமங்கலம் சுப்புவின் 'மதி பறக்குது மச்சானே' என்ற கவிதை பல தடவை படித்து இன்புறக் கூடிய தொன்றாகும்.

வண்ணச் சித்திரங்கள், தனிக்கோட்டு ஓவியங்கள் புகைப் படங்கள் பெருமளவில் இம்முறை தீபாவளி மலரில் சேர்க்கப்பட்டுள்ளன. ஒவ்வொன்றின் அழகையும், கருத்தாழத்தையும் இங்கு சொல்லி முடியாது. ஓவியக் கலைஞர்கள், புகைப்படப் பிடிப்பாளர்கள் ஆகியோரின் கைவண்ணத்தையும் சிந்தனைத் திறனையும் உண்மையில் பாராட்டுகிறோம் என்றால் அவர்கள் சிருஷ்டிகளின் சிறப்பை ஒருவாறு சொன்னவர்களாவோம்.

இந்தியாவின் இணையற்ற ஓவியரான ரவிவர்மாவின் அற்புத சிருஷ்டிகளுக்கு சினிமா நடிக நடிகையர்களைப் பாத்திரங்களாக வைத்து, புகைப்பட உத்தி கொண்டு புத்துயிர் கொடுத்து, கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவரும் வண்ணப் படங்களாக அவற்றை மலரில் தந்திருப்பதுபோற்றத்தகுந்த முயற்சி;மேலான கலைப்பணி.

160 பக்கங்கள் கொண்ட ஆனந்தவிகடன் தீபாவளி மலர் தமிழன்னைக்கு சிறந்த சமர்ப்பணம். அது வாசகர்களுக்கும் வரப்பிரசாதமாகும். இலங்கையில் பல சிறந்த எழுத்தாளர்கள் இருந்தும், அவர்களில் ஒருவருடைய சிருஷ்டியேனும் இம் மலரில் இடம் பெறாதது ஒன்றுதான் மலருக்கு ஊறு என்று சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.





கூந்தலைப் படியவைக்கும் பரிமளிப்பு மிகுந்த

**'மிக்காடோ லெவண்டர் பிறிலியன்டைன்**

(கட்டியாக்கப்பட்டது)

இதனைப் பாவித்து சித்தியடைந்தவர்கள் மீண்டும் மீண்டும் தெரிவு செய்கிறார்கள்'

தயாரிப்பாளர்:

**மிக்காடோ & கம்பெனி,**

டாம் வீதி, கொழும்பு.

போன்: 3242.



786

பீடி அன்பர்களுக்கோர்

நல் அறிவிப்பு

**"S. R. பீடி"**

தேச பிரசித்திபெற்ற செய்யது பீடி கம்பெனியாரால் தயார் செய்யப்படுகிறது.

பாவிப்பாளர் போற்றத்தக்க சிறந்த உயர்தர அக்கூள் புகையிலையால் உருவாக்கப்பெற்று அன்பர்கள் நல் ஆசி பெற வந்திருக்கிறது.

கால தேச வர்த்தமானத்தை முன்னிட்டு குறைந்த விலையில் சிறந்த முறையில் உதயமாகி இருக்கிறது.

உண்மை விளங்க ஒருமுறை உபயோகித்துப் பார்க்க கேட்டுக்கொள்கிறோம்.

STOCKIST

**S. Abdul Cader**

254, Messenger Street, COLOMBO.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகில இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்துக்கு கல்வி அமைச்சர் பேட்டி

## 14 மாதங்களுக்குப் பின் புதிய நிர்வாகசபை ஈட்டிய வெற்றி

### பதினெட்டுக் கோரிக்கைகளுக்கு திரு. தஹநாயகா தந்த பதில்

அகில இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கம் கடந்த 14 மாதங்களாக கல்வி அமைச்சர் திரு தஹநாயகாவைப் பேட்டிகாண எடுத்துக்கொண்ட முயற்சி, கண்டியில் நடைபெற்ற ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட புது நிர்வாக சபையினர் பதவியேற்ற பின்னர், கடந்த வாரந்தான் வெற்றியளித்தது.

"உங்கள் சங்கம் எது என்று இதுகாலவரை நான் சரியாக மட்டுப் பிடிக்கவில்லை. பல ஆசிரியர் சங்கங்களுடன் உங்கள் ஆசிரியர் சங்கப் பெயரும் குழம்பிவிட்டது. அதனால்தான் உங்கள் சங்கத்திற்குப் பேட்டி தரக் காலங்கடத்திவிட்டேன். இனிமேல் அரசாங்க ஆசிரியர் சங்கத்துடன் சமதரத்தில் உங்கள் சங்கத்தையும் மதிப்பிட்டு ஆவன செய்யக் காத்திருக்கிறேன்" என்று திரு தஹநாயகா கூறினார்.



அ. இ. த. ஆசிரியர் சங்கத் தலைவர் திரு. ஈ. எம். கனகசபை

அகில இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்திற்குப் பேட்டியளிப்பதில் கல்வி அமைச்சர் காட்டிய நீண்டகால அலட்சியத்தைக் காரசாரமாகச் சுட்டிக்காட்டிய போதுதான், திரு தஹநாயகா மேற்கண்ட சமாதானத்தை எடுத்துரைத்தார்.

கடந்த திங்கட்கிழமை கல்வி அமைச்சரைப் பேட்டி கண்ட தூதுகோஷ்டியில் அகில இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தின் சார்பில் தலைவர் திரு ஈ. எம். கனகசபை, செயலாளர் திரு டி. எஸ். சண்முகதாசன், பொருளாளர்திரு வி. சுப்பையா, திருவாளர்கள்: வெ. கந்தர், டி. எஸ். கே. வணசிங்க, உ. இராசதுரைஆகியோரும், ஆசிரிய தராதரப் பத்திர ஆசிரியர் சங்கச் சார்பில் அதன் தலைவர் திரு எம். நடராசாவும் கலந்துகொண்டனர்.

பிரஸ்தாப தூதுகோஷ்டி கல்வியமைச்சரிடம் சமர்ப்பித்த ஒரு மகஜரில் 18 முக்கிய கோரிக்கைகள் இடம் பெற்றிருந்தன. அந்தக் கோரிக்கைகளையும் அவற்றிற்கு கல்வி அமைச்சர் அளித்த பதிலையும் கீழே தருகிறோம்.

#### ஒன்றுபட்ட சட்ட விதிகள்

கோரிக்கை 1: சுயபாஷா ஆசிரியர்களுக்கும் ஆங்கில ஆசிரியர்களுக்கும் வேறுபாடில்லாத முறையில் ஒன்றுபட்ட சட்ட விதிகளை வெளியிட வேண்டும்.

கல்வி அமைச்சர் பதில்: இப்படியான ஒரு சட்டத் தொகுப்பு தயாராகிறது. விரைவில் வெளியிடப்படும்.

கோ. 2: ஆசிரியர்கள் தங்கள் மாதச் சம்பளத்திலிருந்து ஈவுத்தொகை கொடுக்காமலே பென்ஷன் கிடைக்க வழி செய்ய வேண்டும்.

க. அ. ப: அப்படியே செய்ய வேண்டும் என்று நான் அரசாங்க திறைசேரிக்கு சிபார்சு செய்திருக்கிறேன்.

#### ரூ. 3-93 பென்ஷன்

கோ. 3: ஆசிரியர்களின் கைம்பெண் அனுதை பென்ஷன் திட்டத்தைத் திருத்தியமைக்க வேண்டும். [நடைமுறையிலுள்ள கைம்பெண் அனுதை பென்ஷன் விதிகள் அரசாங்க சேவை நிபந்தனைகளுடன் பிணைக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக தமது சேவைக்காலத்தின் பின்பகுதியில் அரசாங்க சேவையில் சேரும் ஆசிரியர்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். உதாரணமாக 40 வருடம் ஆசிரியராகச் சேவை செய்த ஒரு ஆசிரியரின் மனைவிக்கு ரூ 3. 93 சதம் தான் பென்ஷனுகக் கிடைக்கிறது. இப்படியான ஆதாரங்கள் இக்கோரிக்கையுடன் சுட்டிக்காட்டப்பட்டன]

க. அ. ப: இதுசம்பந்தமாக கல்வி இலாகாவிடமிருந்து முழு விபரங்களையும் ஒரு அறிக்கை ரூபத்தில் பெற்று பரிசீலனையின் பின் ஆவன செய்கிறேன்.

#### ரயில்வே வாரண்ட் வீட்டு வாடகை

கோ. 4: மத்தியஸ்த சபையொன்றைச் சீக்கிரம் நியமிக்க வேண்டும்.

க. அ. ப: இவ்விஷயம் ஆலோசனையிலிருந்து வருகிறது.

கோ: 5 ரயில்வே வாரண்ட் வாடகை அலவன்ஸ், வைத்திய வசதிகள் அளிக்கப்பட வேண்டும்.

க. அ. ப: அப்படியே செய்ய வேண்டும் என்று நான் அரசாங்க திறைசேரிக்கு சிபார்சு செய்கிறேன்.

கோ. 6: வசதிக் கட்டணங்கள் வசூலிக்காத பாடசாலைகளுக்கு அரசாங்கம் உதவி புரிய வேண்டும் அல்லது பொதுமக்களிடம், பெற்றோர்களிடம் நிதி திரட்ட கல்வி அமைச்சர் அனுமதிக்க வேண்டும்.

க. அ. ப: பொதுமக்களிடமும் பெற்றோர்களிடமும் பணம் அறவிடுவதை நான் ஆதரிக்க முடியாது. கல்வி விஷயத்தில் ஏழைப் பெற்றோரை எந்தவகையிலும் துன்புறுத்துவதை நான் விரும்பமாட்டேன். அரசாங்கமும் பணம் தந்து உதவும் என்று சொல்வதற்கில்லை. இப்போதே கல்விச் செலவு அதிகமாக இருக்கிறது. இன்னும் செலவழிக்கப் பணம் இல்லை;

#### நில சுவீகரிப்பு

கோ.7: அரசாங்கபாடசாலைகளைப்போல உதவிபெறும் பாடசாலைகளும் கட்டட விஸ்தரிப்புக்கு இடம் தேவைப்பட்டால் பாடசாலையையொட்டியுள்ள நிலத்தைச் சுவீகரிக்க அரசாங்கம் சட்டம் செய்ய வேண்டும்.

க. அ. ப: இந்த யோசனையை முதலில் கூறியது நான்தான். ஆனால் திருவாளர்கள் மேத்தானந்தாவும், குலரத்னவும் அதை எதிர்த்தார்கள். பொதுமக்கள் அபிப்பிராயம் இந்தக் கோரிக்கைக்கு ஆதரவாகத் திரட்டப்பட்டால் அப்படிச் சட்டம் கொண்டு வர நான் தயாராயிருக்கிறேன்.

கோ. 8: ஆசிரியர்களின் சேவைப் பாதுகாப்புக்கு கல்விச் சட்டத்தில் சரத்து சேர்க்கப்பட வேண்டும்.

#### ஆசிரியர் சேவை நிபந்தனைகள்

கோ. 9: (அ) எந்த ஆசிரியரையும் விசாரணையின்றி நிறுத்தி வைக்கும் அதிகாரம் முகாமைக்காரருக்கு இருத்தல் ஆகாது.

(ஆ) எந்த ஆசிரியராவது நிறுத்தி வைக்கப்பட்டால் அவருடைய விசாரணை நடைபெறும்வரையுள்ள காலத்தில் அவருடைய சம்பளத்தில் அரைவாசித் தொகையை மாதாமாதம் முகாமைக்காரர் வைப்புப் பணமாகப் பிடித்துக் கொண்டு அரைவாசியை ஆசிரியரின் பராமரிப்புக்காகக் கொடுக்க வேண்டும். விசாரணையில் ஆசிரியர் குற்றமற்றவராகக் காணப்பட்டால் பிடித்து வைக்கப்பட்ட மிகுதி பணமும்கொடுபட வேண்டும்.

(இ) வேலைநீக்கத்திற்கு குற்றம் சாட்டப்பட்டால் சம்பந்தப்பட்ட விசாரணையில் ஒரு சட்டவாதியைத் தம் சார்பில் அமர்த்த ஆசிரியருக்கு உரிமை வழங்கப்பட வேண்டும்;

க. அ. ப: [8ம் 9ம் கோரிக்கைகளுக்கு ஒரே பதில்] இந்தக் கோரிக்கைகள் அனைத்தையும் அடக்கிய சரத்துக்கள் தயாராகிக்கொண்டிருக்கும் புதிய கல்விச் சட்டத்தில் இடம்பெறும் என்று உறுதிகூறுகிறேன். அச்சட்டம் வெளியாகும்வரை காத்திருங்கள்.]

#### சம்பளத்தில் ஏற்றத்தாழ்வுகள்

கோ. 10: சுயபாஷா ஆசிரியர் தராதரப் பத்திரம் பெற்ற ஆசிரியர்களின் சம்பள விகிதத்தில் காணப்படும் ஏற்றத் தாழ்வுகளை உடனடியாகத் தீர்க்க வழி செய்ய வேண்டும். [பூலியர் கமிஷனுல் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் இவர்கள் தாம் என்று சுட்டிக்காட்டப்பட்டது]

க. அ. ப: விரைவில் நியமிக்கப்படவிருக்கும் சம்பளக் கமிஷன் இந்தக் குறைபாடுகளை ஆராய்ந்து விமோசனத்துக்கு வழிவகுக்கும்.

#### தோட்டப் பாடசாலை பிரச்னைகள்

கோ. 11: தோட்டப் பாடசாலைகளின் நியமனத்தைப் போலவே வேலைநீக்கத்துக்கும் கல்வி இலாகாவின் அனுமதியைப் பெற வேண்டும் என்று சட்டம் விதிக்கப்பட வேண்டும்;

(12-ம் பக்கம் பார்க்க)

## மக்கள் குரல்

### யார் தலைக்கு தொப்பி?

"முட்டக்களப்பில் ஆதரவு தேடி அலைந்த ஜீ ஜீ." என்ற தலைப்பில் சென்ற வாரச் சுதந்திரன் இதழில் வெளியான விஷயத்தின் முடிவில் யார், யார் ஜீ. ஜீ.யுடன்சென்றுர்கள் என்ற ஒரு குறிப்புச் சேர்க்கப்பட்டிருந்தது. அதில் நானும் அக்கூட்டத்தில் சேர்ந்தவனென மக்கள் மனதில் ஒரு எண்ணத்தை உண்டாக்கும் வண்ணம் ஒரு குறிப்பு காணப்படுகிறது. இது முற்றிலும் விஷமத்தனமான தென்பதை பகிரங்கப் படுத்த விரும்புவதோடு, நான் கடந்தவார இறுதியில் ஜீ. ஜீ யுடன் ஒரு சொல்லாவது பேசினேன் அல்லது சந்தித்தேன் என்று நிரூபிக்க முடியுமா? என்பதை 'தேன்மொழி'யிடம் கேட்க விரும்புகிறேன்.

என்னைப்பொறுத்தவரை இதுவரை எந்த வகுப்புவாதக் கட்சியை ஆதரித்ததும் கிடையாது, இனிமேலும் செய்யப்போவதில்லை என்பதைத் 'தேன்மொழி' உணர்வாராக. 'காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்' என்ற முதுமொழியைக் கடைப்பிடித்து உயர்ந்த இலட்சியமுள்ள [illegible] ஆதரிப்பதைக் [illegible] டோம். சமசமாஜக் கட்சியின் உயர்வை செனட்டர் தேர்தலில் டாக்டர் என். எம். பெரேரா காட்டிய முன்மாதிரியே நிரூபிக்கும். இதனை நீங்களே உங்கள் பத்

(12-ம் பக்கம் பார்க்க)


## சுவிப் டிக்கட்

ஆஸ்பத்திரி சுவிப்பும், கொழும்பு பிளான் சுவிப் டிக்கட்டும் தபாலில் பெற விரும்புவோர் டிக்கட் தொகைக்கு போஸ்டல் ஆடரும், தபால் செலவுக்குப் 10 சத முத்திரை கவரும் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். 2/- ரூ. ஜிம்கானு டிக்கட்டும் பதிவு செய்து கொள்ளலாம்.

தேவகி ஸ்டோர்ஸ்
154, செக்கடித் தெரு,
கொழும்பு-13.

## குடி இயலும் அரசியலும்

வித்தியா பகுதியாரால் பொதுக் கல்வித் தராதரப் பத்திரப் பரீட்சைக்கு மிகச் சிறந்த நூல் என அங்கீகரிக்கப்பட்ட ஆங்கிலப் புத்தகத்தின் தரம்மிக்க தமிழ் மொழிபெயர்ப்பு.

இலங்கைச் சர்வகலாசாலை அரசியற் சாஸ்திரப் பேராசிரியர்
கலாநிதி ஏ. ஜெயரத்தினம் வில்சன்
அவர்கள் எழுதியது.

இலங்கையில் உள்ள பாடசாலைகளில் மிக விரும்பிப் பாவிக்கப்படும் குடியியல் நூல் இது ஒன்றே.

பூரண விபரங்கள் புத்தக ரூபத்தில் இலவசமாக அனுப்பப்படும்.

| | |
|---|---|
| முதலாம் பாகம் | ரூ. 3—25. |
| இரண்டாம் பாகம் | ரூ. 3—75. |
| தபாற் செலவு | சதம் 35. |

வி: பி. பி.யில் அனுப்பப்படமாட்டாது.

அற்லஸ் ஹோல்

த. பெட்டி: 649. கொழும்பு. போன்: 9759.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடு நலம்பெற கைத்தொழில் வளம் வேண்டும்

## நெசவுத் தொழில் ஈழத்துக்கு ஏற்றதும் இன்றியமையாததுமாகும்

## அரசாங்கம் ஆவன செய்யாததால் நாடெங்கிலுமுள்ள நிலையங்களில் அவல நிலை

### உழைப்போருக்கு ஊதியமில்லாத அநியாயம்

"ஒரு நாடு வாழ வேண்டுமானுல், உணவு வளம் வேண்டும்; கைத்தொழில் வளம் வேண்டும்; ஆட்சியுரிமை வேண்டும். பண்டைக்காலத்தில் ஒவ்வொரு சிறிய ஊரிலும் அந்த ஊருக்கு வேண்டிய உணவு இருந்தது. வேண்டிய பொருள்களைச் செய்யக் கூடிய குடிசைக் கைத்தொழில்கள் இருந்தன. எனவே நாடு வாழும் முறை எளிதாக இருந்தது" என்பதாக டாக்டர் மு. வ. ஒரு கட்டுரையில் குறிப்பிடுகின்ருர்.

விவசாயமும், கைத்தொழிலும்தான் ஒரு நாட்டின் செல்வச் செழிப்புக்கு மூலாதாரமாக மிளிர்கின்றன. இவை இரண்டு தொழில்களாலும் சுதந்திரமுள்ள சுபீட்ச வாழ்வை வாழ்வாங்கு வாழ முடியும். கையால் தொழில் செய்து உணவு தேடி உண்ணும் இயல்புடைய தொழிலாளர், பிறரிடம் சென்று இரக்க மாட்டார். தம்மிடம் இரந்தவர்க்கு ஒளிக்காமல் ஒரு பொருளைக் கொடுப்பர்.

"இரவார் இரப்பார்க்
கொன்று ஈவர் கரவாது
கை செய்தூண் மாலையவர்"

என்று திருவள்ளுவர் இடித்துரைக்கின்ருர். "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" "பட்டினிலாடையும் பஞ்சிலுடையும் பண்ணி மலைகளென வீதி குவிப்போம்" என்ருர் பாட்டுக்கொரு புலவன் பாரதி. இவற்றிலிருந்து கைத்தொழிலின் மேன்மை விளங்குகின்றது.

### இந்தியாவில் நெசவுத் தொழில்

விவசாயத்திற்கு அடுத்தபடியாகக் கைத்தொழில்தான் முக்கியமான கிராமத் தொழில். இந்தியாவில் கைத்தொழிலாளர் நெசவு தொழிலைத் தங்களது பிழைப்புக்கான தொழிலாகக்கொண்டிருக்கின்றனர். இங்கு பருத்திப் பஞ்சிலிருந்து நெசவு செய்யும் கைத்தொழிலே முக்கிய இடம் வகிக்கிறது. பம்பாய், ஆமதாபாத் முதலிய நகரங்களில் பருத்தி ஆலைகள் இருக்கின்றன. பாரதத்தில் கிட்டத்தட்ட 28 லட்சம் தறிகள் உள்ளன. அவற்றில் நேரடியாகச் சுமார் ஒன்றரைக் கோடி மக்கள் தொடர்புகொண்டுள்ளனர். சென்னை மாகாணத்தில் மட்டும் சுமார் ஐந்து, ஆறு லட்சம் கைத்தறிகள் இருப்பதாகவும் அவற்றில் ஏறத்தாழ 25 லட்சம் மக்கள் வேலை செய்து வருவதாகவும் கணக்கிடப்பட்டுள்ளது. இவ்வேலையில் ஈடுபட்டோர் இத்தொழிலை நம்பியே வாழ்க்கை நடாத்துகின்றனர்.

### ஜப்பானில்......

ஜப்பானியரின் தொழில் முயற்சி உலகத்துக்கோர் எடுத்துக்காட்டு. இங்கு பருத்தித் துணி நெசவும்— பட்டுத் துணி நெசவும் பிரதானமானவை. மொசுக்கட்டைச் செடியைப் பயிரிட்டுப் பட்டுப்பூச்சிகளை வளர்ப்பது, ஜப்பானில், அநேக வீடுகளில் ஒரு பொழுதுபோக்குக் குடிசைக் கைத்தொழில். ஜப்பானியர் பருத்திப் பஞ்சுகளை இந்தியாவிலும், சீனுவிலும், அமெரிக்காவிலும் இருந்து இறக்குமதி செய்து பருத்தித் துணி நெசவைப் பெருக்கி வளர்க்கிருர்கள். நீர்மின் சக்தி மிக மலிவாகக் கிடைப்

**புத்தொளி**

பதாலும் கூலி மலிவானதாலும் இங்கு செய்யப்படும் துணிகள் உலகில் வியாபாரத்துடன் போட்டியிட்டு மலிவாக விற்கக்கூடியதாக அமைந்துள்ளன.

### இலங்கை நிலைமை

இவ்வாறு அரசியல் சுதந்திரம் பெற்ற பல நாடுகள் கைத்தொழில் வளர்ச்சியடையச் சகல முயற்சிகளையும் மேற்கொண்டன. இலங்கையில் கடந்த 35 வருட காலமாக நெசவு தொழிலில் உற்சாகம் காண்பிக்கப்படுகிறது. நெசவுசாலைகளை அரசாங்கம் ஆங்காங்கு ஏற்படுத்தியது. மாணவர்களுக்குப் பயிற்சியளித்தது. ஆனுல் தக்க பயன் இன்னும் கிடைக்கவில்லை. இன்று கிராமத்திற்கொரு கிராம முன்னேற்றச் சங்கம் இருக்கிறது. கிராம முன்னேற்றச் சங்கங்கள் கிராமக் கைத்தொழில்களுக்கு ஊக்கமளிக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. கி. மு. சங்கங்களுக்குச் சமீபத்தில் ஒரு சுற்று நிருபம் வந்தது. கிராம முன்னேற்றத்துக்கான வேலைகளைக் குறிப்பிட்டுவிட்டு நெசவு வேலை-நூல் நூற்றல்-பன்ன வேலை-வெங்காயக்கூடு செய்தல்-தையல்-விளையாட்டுப் பொருட்கள் செய்தல்-மண் வேலை-நெருப்புப் பெட்டி மற்றும் தொழில்கள் இடம் பெறுவதவசியமென அந்த நிருபம் கேட்டுக்கொள்கிறது. மற்றைய கைத்தொழில்களைவிட நெசவு தொழிலில்தான் நாம் அதிகம் ஊக்கம் காண்பிக்க வேண்டும். உணவுக்கு அடுத்து உடை. இத்தேவையை நாம் பூர்த்தி செய்ய வேண்டியது மிக மிக அவசியம்.

### ஆடைச் செலவினம்

வெளிநாட்டிலிருந்து இங்கு இறக்குமதியாகும் 'றெடிமேட்' உடைகளைத் தவிர வருடத்தில் 13 கோடி யார் துணிகள் இறக்குமதியாகின்றன. ஒரு குடும்பத்தில் மாதம் செலவிடப்படும் பணத்தில் சராசரி ரூ. 12 புடைவைகளுக்கெனச் செலவாகின்றது. பணம் கொடுத்து வாங்கும் ஒருவரின் மாதாந்தச் செலவு ரூ. 2-50 மாதா மாதம் மற்றெல்லாச் செலவுகளுடன் உடுப்பு புடவைகளுக்காக 7.5 வீதம் செலவாகின்றது. குடும்பச் செலவில் ஆடவரின் உடைகளுக்காக மாதம் சராசரி 3.18 வீதம் செலவாகின்றது மாதாந்தச் சராசரி பெண்களுக்கு 2.79 வீதமும், குழந்தைகளுக்கு 1.53 வீதமும் செலவாகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நெசவுபற்றிப் பிரசாரம்

நமது நாட்டில் நெசவு நிலையங்கள் ஆங்காங்கு நிறுவப்பட்டுள்ளன. நெசவு செய்யும் மாணவர்களுக்கு பயிற்சியளிக்கப்படுகிறது. இப்பொழுது சுமார் 600 நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. நல்ல வசதியான கட்டட அமைப்புள்ள நிலையத்தில் 1200 தறிகளை வைத்து வேலை செய்ய முடியும். ஒரு தறியில் ரூ. 200 லட்சம் பெறுமதியான புடைவைகளை நெசவு செய்யலாம்; இதனுல் வருடத்தில் வேலை செய்பவர்களுக்கு வேதனமாக 90 லட்ச ரூபா கொடுக்கலாம். நெசவு நிலையத்தில் பயிற்சி பெறுவோர் இப்பொழுது ஆறு மாதம்வரை எதுவித ஊதியமுமின்றி வேலை செய்து வருகிருர்கள். ஆருவது மாதத்திலிருந்து எட்டாவது மாதம் வரை தினமொன்றுக்கு 75 சதம் பெறுகிருர்கள். எட்டாவது மாதம் முடிந்ததும் கூட்டுறவுச் சங்கமூலம் புடைவைகளை உற்பத்தியாக்கலாம். பயிற்சி பெற்ற ஒருவர் ஒரு தறியை அரசாங்கத்திடம் ரூ. 150 ஆகக் கடனுக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

நெசவு செய்யும் துணிகளைக் கொடுத்து ரூ. 20 வரை கழித்துவிடலாம். இப்படியாகப் பிரசாரம் செய்யப்படுகிறது நாமும் நல்ல திட்டமென நம்பி நெசவு தொழிலில் ஈடுபடுகிறேம். ஈடுபட்டதும் பின் திராக் கஷ்டத்தை அனுபவிக்க நேரிடுகிறது.

### நெசவு நிலையத்தில் அநியாயம்!

சுமார் 5 வருடங்களுக்கு முன் ஒரு நெசவுப் பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. அப்பொழுது பாடசாலைகளில் கல்வி கற்றுவந்த ஆண்களும், பெண்களுமாக அநேகர் அந்த நிலையத்தில் சேர்ந்தனர். இந்த 5 வருடத்தில் சேர்ந்து பயின்ற மாணவர்கள் மொத்தமாக ரூபா 200 ஊதியமாகப்பெற்ருர்களோவென்ருல், அது முயற்கொம்பாக இருக்கின்றது. கடந்த வருடம் பயிற்சி பெறுபவர்களுக்கு ஆறு மாதத்திற்கு நாளாந்தம் 75 சதம் கொடுக்கப்பட்டது. இதனுல் சுமார் 30 மாணவர்கள் பயின்று வந்தனர். பயிற்சி முடிந்து வருடக்கணக்காக அவர்கள் இந்த நிலையத்தில் வேலை செய்து எதுவித வருவாயும் பெருது வருந்துகிருர்கள். இந்த நெசவு நிலையத்தில் 5 வருட காலமாக வேலை செய்து வரும் மாணவன் மாதம் ரூ. 10 தானும்பெறுவதாகக் காணவில்லை. தினமும் காலை 9 மணிமுதல் மாலை 4-30 மணி வரை மாடாக உழைத்து, சரீரத்தை வதைத்து, மாத முடிவில் ஒழுங்காக ரூ. 10 ஆயினும்கிடைக்காதகண்ணராவியை என்னென்பது. ஐயோ அநியாயமே! மேலும் மேலும் நெசவு நிலையங்களை ஏற்படுத்துங்கள் என சுற்றறிக்கை அனுப்புவதில் அர்த்தமேதும் உண்டா?

பயிற்சி பெற்றவர்களுக்கு கூட்டுறவுச் சங்கமூலம் நெசவுத் தொழிலை விருத்தியாக்க அரசாங்கம் ஆவன செய்ய முன்வராததால் இந்த அவல நிலை ஏற்பட்டு வருகின்றது. இதனுல் பயிற்சி பெறுவோர் நிலையத்தை விட்டு வெளியேற வேண்டியிருக்கிறது. முதலில் பயிற்சி பெற்றேருக்கு வாழும் வகையை, வருவாயை-அளிக்க அரசினர் முன்வர வேண்டும். இந்தியாவில் ஒரு குடும்பத்தின் வாழ்க்கை கைத்தறி நெசவு வேலையில் தங்கியிருக்கிறதென்ருல் நமது நாட்டில் ஒருவர் இந்த வேலையை நம்பி வாழ முடியாமல் இருக்கிறது.

### இறக்குமதிச் சரக்கு

ஒரு வருடத்தில் 10 கோடி யார் பருத்திப் புடைவை இறக்குமதி செய்யப்படுகிறது. இங்கு வருடத்தில் 120 லட்சம் யார் பருத்திப்புடைவையே நெசவு செய்யப்படுகிறது. சாறம்-துவாய்-ஆஸ்பத்திரி புடைவைகளே ஏராளமாக நெசவு செய்யப்படுகின்றன. வருடத்தில் 2/3 வீத சாறம் இந்தியாவிலிருந்து இறக்குமதியாகிறது. இறக்குமதியாகும் சாறம் இங்கு உற்பத்தியாகும் சாறத்தின் விலையைக்காட்டிலும் குறைவாகக் கிடைக்கிறது. நாம் வெளிநாடுகளிலிருந்து பெறும் ரூ. 20 கோடி பெறுமதியான துணிகளில் 75 வீதமான துணிகள் அந்நாடுகளில் கைத்தறிகளிலும் மின்சக்தித் தறிகளிலும் உற்பத்தியாக்கப்படுபனவே.

### கூட்டுறவுக் கழகங்கள் தோன்ற வேண்டும்

இங்கு உற்பத்தியை அபிவிருத்தி செய்வதற்கு தனிப்பட்ட நெசவாளரிடம் போதிய வசதிகள் இல்லை. இன்றைய நிலையில் போதுமான வருமானம் அடைவது, தன் சமூக பொருளாதார நிலையை உயர்த்திக்கொள்வது ஆகியனவை மிகவும் கடினம். நெசவு நிலையங்களில் பயிற்சி பெறுவோர்—பயிற்சி பெற்று இலவுகாத்த கிளியாக எதிர்கால வாழ்விற்காக ஏங்கியிருப்போர் முதலானவர்களை ஒன்று திரட்டி நெசவு தொழிலாளர் கூட்டுறவுக் கழகங்களை' ஏற்படுத்துவது மிக மிக அவசியம். இதுவே இலட்சக்கணக்கான கைத்தறி நெசவாளரின் பொருளாதார வளர்ச்சிக்கு மிகச் சிறந்த சாதனம்.

### சுயதேவைப் பூர்த்திக்கு...

உடையில் சுயதேவையை நமது நாடு ஓரளவிற்குப் பூர்த்தி செய்ய வேண்டுமானுல் முதலில் நூல் வேண்டும். நெசவு தொழிலுக்காக இந்தியாவிலிருந்து நூல் இறக்குமதி செய்யப்படுகிறது. இதுவே இங்கு உற்பத்தியாகும் உடைகள் விலை கூடியும் இறக்குமதி வரிகள் விலை குறைந்தும் இருப்பதற்குக் காரணமாகும். உள்நாட்டுத் துணிகளின் விலையைக் குறைப்பதுடன் வெளிநாட்டிலிருந்து இறக்குமதியாகும் துணிகளைக் கட்டுப்படுத்தினுல் நெசவாளர்க்கு நல்ல எதிர்காலம் உண்டு; 'றெடிமேட்'' உடைகளைப் படிப்படியாகக் குறைத்து முற்ருக இறக்குமதி செய்யாமலும் விட வேண்டும்

### கைத்தறிக்குப் பதில் மின்சக்தித் தறிகள்

கைத்தறியைவிட்டு மின்சக்தித் தறிகளின் உபயோகத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்தால் அதிக புடைவைகளை உற்பத்தி செய்யலாம். 2500 மின்சக்தித் தறிகளை நடைமுறைக்குக் கொண்டு வந்தால் வருடத்தில் 250 லட்சம் யார் துணிகளை நெசவு செய்ய முடியும். இதனுல் எமக்குத் தேவையான பருத்திப்

(12-ம் பக்கம் பார்க்க)

அண்ட மழையா? கொடூர வெய்யிலா?
எதற்கும் பாதுகாப்பளிப்பது
மான் மார்க் குடைகளே!



★ இலங்கையின் சீதோஷ்ண நிலைமைக்கு ஏற்றவாறு கைதேர்ந்த நிபுணர்களால் நிர்மாணிக்கப்பட்டவை மான் மார்க் குடைகளே!

★ அகோர வெப்பத்திலும் அடை மழையிலும் சம்பூரண பாதுகாப்பளிப்பதும் — நீடியகாலம் உழைப்பதற்கும், நம்பிக்கைக்கும் பாத்திரமானதும் மான் மார்க் குடைகளே!

★ ஆடவர் குடைகள் 25'' அங்குலத்திலும், பெண்டிர் குடைகள் 20'' அங்குலத்திலும் மனத்திருப்தி அளிக்கும் விலைகளில் பெற்றுக் கொள்ளலாம்.

ஏக விநியோகஸ்தர்கள்:

மெக்கி ஸ்டோர்ஸ்,

265, மெயின் வீதி, கொழும்பு.
61, கொழும்பு வீதி, கண்டி.
154, மெயின் வீதி, காலி,
144, மெயின் வீதி, ரத்தினபுரி,
24, பஜார் வீதி, பதுளை,
11, பஜார் வீதி, குருணுக்கலை.

# ஆகாய விமானத்தை முதலில் கண்டு பிடித்த பெருமை இந்தியர்களுக்கே!

## 60 ஆண்டுகளுக்கு முன் பம்பாயில் நடத்திய விமான ஆராய்ச்சி பலித்தது

## பரத்துவாஜருடைய சூத்திரமே ஆதாரம்

### விமான தயாரிப்புக்கான குறிப்புகள் அதில் ஏராளம்

இந்த நாகரிக யுகத்தில் நடக்கும் ஆராய்ச்சிகளெல்லாம் நம் நாட்டில் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஆராய்ந்து முடிவுக்கு வந்தவை. அப்படி ஆராய்ந்து முடிவு கண்டவற்றில் விமானச்சிற்பசாஸ்திரம் ஒன்று. நாம் இன்று அந்நிய நாட்டினர் கண்டு பிடிக்கும் யந்திரங்களைக் கண்டு அதிசயிப்பதும் மகிழ்வதும் வழக்கமாகிவிட்டது. ஆனால் இவற்றின் மூல சாதனங்களை நம்மவரே கண்டு பிடித்தார்கள் என்பதை அறிவதற்கு இதுவரை ஆதாரம் கிடைக்காமல் இருந்தது. அதற்குக் காரணம் பல சாஸ்திர நுணுக்கங்கள் நிறைந்த ஓலைச் சுவடிகள் மறைந்துவிட்டதுதான். இப்பொழுது அரசாங்கம் அவற்றைத் தேடிக் கண்டுபிடிப்பதில் முனைந்திருக்கின்றது. அதன் பலனாகச் சில ஓலைச் சுவடிகள் நிறைந்திருக்கின்றன. அவற்றுள் பரத்துவாஜ மகரிஷி எழுதிய 'வைமானிக சாஸ்திரம்' ஒன்று.

### பரத்துவாஜரின் 'வைமானிக சாஸ்திரம்'

இந்த நூல் ஏழு பிரகரணங்கள் (அத்தியாயங்கள்) அடங்கியது. ஐந்நூறு சூத்திரங்களைக் கொண்டது. அவற்றை ஆராய்ந்தால், இப்பொழுது இருக்கும் விமானங்களை நிருமிக்கும் சாஸ்திர முறைகள் எல்லாம் விளக்கமாகக் காணப்படுகின்றன. விமானம் அமைப்பதில் பற்பல வகைகள் காணப்படுகின்றன.

### விமான அமைப்பு

அவற்றுள் அபேத்யங்கள் (உடையாதவை), அதாஹ்யங்கள் (எரிக்க முடியாதவை), அசேத்யங்கள் (உடைக்க முடியாதவை) என்பவற்றைக் குறித்திருப்பதைக் காணலாம். அதில் உள்ள சூத்திரங்கள், விமானத்துக்கு முப்பத்திரண்டு பாகங்கள் இருக்கவேண்டுமென்றும் சூட்டையும், ஒளியையும் தணிக்கும் சக்தி அமைந்திருக்கும் உலோகங்களாலேயே விமானத்தை நிருமிக்க வேண்டுமென்றும் சொல்லுகின்றன. இப்படித்தக்க உலோகங்களைக் கொண்டு அமைத்த விமானங்கள் பதினறு வகைப்படும்.

### ஐந்துவகை விமானங்கள்

சித்திரித்திருக்கும் விமானங்களின் உருவத்தைக் கொண்டு பார்த்தால் ஐந்து வகையாக வகுக்கலாம். 1. சுந்தர விமானம், 2. ஷ—காணம், 3. ருக்மகம், 4. புஷ்பகம், 5. மருத்ஸகம். இந்தப் பெயர்களை நாம் புராணத்தில் படித்திருக்கிறோம். விவரங்களை இந்த நூலில் கண்டு ஊகத்தால் மனதில் பதியவைத்து அந்தக்காலத்து விஞ்ஞானச் செல்வத்தை மெச்சாமல் இருக்க முடியவில்லை.

### பாரதிய சிற்ப சாஸ்திரம்

விமான சாஸ்திர நூல்கள் நமக்கு இப்பொழுதுதான் கிடைத்திருக்கின்றன. ஆனால் சுமார் முப்பது வருஷங்களுக்கு முன்பே இந்தியச் சிற்பஞானி ஒருவர் வேதகாலத்து நூல்களை ஆராய்ந்து தொகுத்து 'பாரதிய சிற்ப சாஸ்திரம்' ஒன்று எழுதியிருக்கிறார். அவர் தம் 40 வருஷ ஆராய்ச்சியின் பயனாகவே அந்த நூலை

### பள்ள அகல்யாதேவி

எழுதினார். அதில் விமானச் சிற்பத்திற்கென்று ஓர் அத்தியாயம் ஒதுக்கியிருக்கிறார். அகஸ்தியரும் பரத்துவாஜருமே இந்தச் சாஸ்திரத்தை முதலில் கண்டுபிடித்தார்கள் என்று சொல்லியிருக்கிறார். ஆனால் அப்பொழுது பரத்துவாஜருடைய சிற்ப நூலை எவரும் கண்டு பிடிக்கவில்லை என்று தெரிகிறது. அவர் தம் நூலில் அகஸ்தியருடைய 'அகஸ்திய ஸம்ஹிதை'யில் இருந்த சூத்திரங்களைத்தான் எடுத்தாண்டிருக்கிறார். பரத்துவாஜருடைய சூத்திரங்களையோ, அவருடைய பற்பல வகை விமானங்களைப் பற்றியோ குறிப்பிடவில்லை.

### 'அக்கினியானம்' விமானத் தயாரிப்பு

'அகஸ்திய ஸம்ஹிதை'ச் சூத்திரங்களில் 'அக்கினியானம்' என்னும் விமானம் அமைக்கும் முறையில் இரு வகைகளைக் குறிப்பிட்டிருப்பதைக் காணலாம். பிரெஞ்சுக்காரர்கள் தயாரித்த பலூனையும் பாரஷூட்டையும் போன்றவை இவை. அகஸ்திய சூத்திரங்களில் காணும் பலூனைப் போன்ற 'அக்கினியானம்' அமைக்கும் முறையைப் பார்ப்போம்.

'பட்டுத் துணியால் ஒரு பை தயாரிக்க வேண்டும். சில ரசாயனங்களை பைகள் மேல் பூசி பையைக் காற்றைத் தடுக்கும் சக்தியுள்ளதாகச் செய்ய வேண்டும். நீராவியால் பையை நிரப்ப வேண்டும். பையை இறுகக் கட்டி லேசான மரத்தால் செய்த ஆசனத்தைப் பையின் கீழ்ப்புறத்தில் ஒட்டி விடவேண்டும்' என்று எழுதியிருக்கிறார். நீராவி காற்றினும் லேசானதாகையால் ஆகாயத்தில் பறக்கும். கோட்டை, கொத்தளங்களைப் பகைவர் சூழ்ந்த சமயங்களிலும், தீப்பற்றிவிட்ட போதும் தற்காப்புக்கு இந்த அக்கினியானம் உதவும். பரத்துவாஜ மகரிஷி சொல்லும் விமான நிர்மாண முறைகள் எல்லாமே நம்மை மூக்கின்மேல் விரலை வைக்கச் செய்யும்.

அவர் விமானம் செய்யும் முறையில் முப்பத்திரண்டு ரகசிய முறைகள் உள்ளன என்று எழுதியிருக்கிறார். சில அதிசயி[illegible]த்தக்கவையாகவும், சில [illegible]ப்பொழுது கூடக் கண்டுபிடிக்கப்படாதவையாகவும் இருக்கின்றன. இந்தக் காலத்து விமானங்களில் இருக்கும் 'சவுண்ரிஸீவர்' போன்றதையே தம் ரகசியச் சூத்திரத்தில் சொல்லியிருக்கிறார் பரத்துவாஜர். இதற்குப் 'பர சப்தக்ராஹம்' என்று பெயர். மற்றென்று 'டெலிவிஷன்' போன்றது. இவற்றை உபயோகிக்க அமைத்த யந்திர சாதனங்கள் இந்தக்காலத்து 'மெஷினரி' முறைகளைப் போலவே அமைந்திருக்கின்றன என்று இந்தக் கால நிபுணர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

### தற்காப்பு முறை

எதிரி விமானங்களை அழிக்கவோ தாக்கும் எதிரி விமானங்களிலிருந்து தற்காப்புச் செய்துகொள்ளவோ உதவும் முறைக்கு 'பிரதிக்ரியா' என்று பெயர். இதற்கென்றே தனி அறை ஒன்று உண்டு. விமான ஓட்டி தற்காப்புக்காக அணிந்துகொள்ளும் உடைகள் விமானங்களுக்குத் தகுந்தபடி பல வகையில் இருக்குமாம்.

### போர்த் திறமை

பரத்துவாஜருடைய நூலில் சத்துரு விமான நாசனக்கிரியா என்னும் சூத்திரம் எதிரி விமானத்தை அழிப்பதில் எடுத்துக் கொள்ளவேண்டிய ஜாக்கிரதையைப் பற்றிச் சொல்லுகிறது. எதிரி விமானங்கள் சூழ்ந்துகொண்ட சந்தர்ப்பத்தில் 'லகுப்பிரதிக்கிரியா' என்ற சூத்திரம் ஒரு நொடியில் வேகத்தை அதிகமாக்கித் தப்பித்துக் கொண்டு ஆகாய வீதியில் உலாவும் முறையை விவரிக்கிறது. இதனால் அந்தக் காலத்தவர்களின் போர்த் திறமை வெளியாகிறது.

### விமானத்தில் பிறதேசப் பிரயாணம்

'விமானம் நிருமிப்பதில் 1200 வருஷங்களுக்கு முன்பே இந்தியர் கைதேர்ந்தவர்கள்' என்று வெர்னன் யூனிவர்ஸிட்டி பிரின்சிப

(10-ம் பக்கம் பார்க்க)

# சிங்கையில் மர்ம மனிதனின் அட்டூழியம்

## பெண்கள் கலக்கம்

## பலத்த காவல் போட்டும் ஆள் பிடிபடவில்லை

—சிங்கப்பூர்

**சிங்கையில் மர்ம மனிதன் ஒருவனைக்கண்டு ஓராயிரம் சிப்பாய்கள் குடும்பத்தினர் பயந்துபோய் இருக்கின்றனர்**

**இம் மனிதன் நடுத்தர உயரம் உடையவனும் இருக்கிறானும். இவன் சுருண்ட மயிரும் கரு நிறமும் உடையவனும். கரும் கால் சட்டை இவன் அணிந்திருக்கிறான் என்றும் சொல்லப்படுகிறது. கிளிமண்டி ரோட் எஸ்டேட், கம்பங் குல்லாக் குவார்ட்டர்ஸ் முதலியவற்றினிடையே இவன் சுற்றி அலைகிறானும்.**

கிளிமண்டி ரோட் எஸ்டேட்டில் வசிக்கும் சிப்பாய்கள் இதுபற்றி கூறியதாவது:

கடந்த ஏழு நாட்களாக இவன் அநேக பெண்களை மானபங்கப்படுத்தியிருக்கிறான். இந்த மர்ம மனிதனைப் பிடிக்க பல முயற்சிகள் செய்து பார்த்தோம். அநேகர் இவனைப் பிடிப்பதற்கு இரவு முழுவதும் விழித்துக்கொண்டிருந்தனர். அவனைப் பலர் துரத்திக்கொண்டு ஓடினர். ஆனால் இவர்களுக்கெல்லாம் கடுக்காய் கொடுத்துக் கம்பி நீட்டிவிட்டான்.

இப்பொழுது இரவில் இந்த எஸ்டேட்டுக்கு உள்ளிலும் வெளியிலும் காவற்காரர்கள் போடப்பட்டிருக்கின்றனர்.

நிர்வாணமாக இவன் இங்கெல்லாம் பலதடவைகள் சுற்றி வந்திருப்பதைப் பார்த்திருக்கின்றனர். தங்கள் கணவர்கள் வெளியே சென்றிருக்கும் பெண்களைத்தான் இவன் இம்சை செய்கிறான்.

இவன் எதையும் திருடவில்லை.

சிலர் இவனுக்கு மனோவசிய சக்தி இருக்கிறது என்று நம்புகின்றனர். இவன் கறுப்பு நாயாகவும், வெள்ளைப் பூனையாகவும் மாறிவிடுகின்றான் என்று சிலர் கூறுகின்றனர். இவனைத் துரத்திச் செல்லும் போது நிழல் மட்டும்காணப்படுகிறது. ஆள் பறந்துவிடுகிறான் என்று சிலர் கூறுகின்றனர்.

அவனிடம் விசேஷ சக்தி எதுவுமில்லை என்றும் அவன் ஒரு சாதாரண மனிதனே என்றும் சிலர் சொல்லுகின்றனர்.

இந்த மர்ம மனிதனைக் கண்டு பிடிக்க மூன்று மலாய் மந்திரவாதிகள் அழைக்கப்பட்டிருக்கின்றனர்.

கிளிமண்டி எஸ்டேட்டில் கூப்பிடுவதற்குக் குரல் கொடுக்காத வேற்றாள் எந்நபரையும் பார்த்த மாத்திரத்தில் சுட்டுத்தள்ளும்படி சிங்கையைச் சேர்ந்த ஓராயிரம் பொலீஸாருக்கும் சிப்பாய்களுக்கும் [illegible] பிறப்பிக்கப்பட்டிருப்பதாக [illegible] கப் பிரதிக் கிடைத்த செய்தி ஒன்று கூறுகிறது.

அச் செய்தி மேலும் கூறுவதாவது:

'எண்ணெய் மனிதன்' என்று சொல்லப்படுகிற மர்ம மனிதனைப் பிடிக்க அந்த எஸ்டேட்வாசிகள் எல்லாம் முயன்று வருகின்றனர். கடந்த சில தினங்களாக அப்பிராந்தியம் ஊரடங்குச் சட்டம் விதிக்கப்பட்ட பிரதேசம் போன்றே காட்சியளித்தது.

பொலீஸாரும் துருப்புகளும் அவ்வட்டாரம் முழுவதையுமே சுற்றிவந்தனர்.

கார்ப்பரல் யாக்கூப் பின் அப்துல்லா கடைசியாகச் செய்துகொண்ட புகாரையொட்டியே இத் தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

ஒருநாள் நள்ளிரவு 12.40 மணிக்குத் தன் மனைவி இந்த 'எண்ணெய் மனித'னால் தொந்தரவுக்குட்படுத்தப்பட்டாள் என்று அவர் கூறினார். அவர் மேலும் சொன்னார்:

"ஏதோ மந்திரத்தால் மயங்கி விழுந்த நிலையில் நானும் எனது மனைவியும் படுக்கையை விட்டெழுந்தோம். என் மனைவியின் கழுத்தில் எண்ணெய் காணப்பட்டது.

திடீரென்று ஏதோ ஓர் உணர்வால் படுக்கையை விட்டு எனது புகைக் குழாயைப் பற்றவைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் எழுந்தபோது என் மனைவி கழுத்தில் கறுப்பான வஸ்தொன்று தடவப்பட்டிருப்பதை நான் கண்டேன்.

கரும் உருவம் ஒன்று தன்னைக் கற்பழிக்க முயன்றதாக அவள் பிறகு என்னிடம் கூறினாள்"

இப்படி அவர் கூறினார்.

குழுவாக அன்றித் தனிப் [illegible] என்று பொலீஸாருக்கும் உத்தரவிடப்பட்டிருக்கிறது.

ஷெல் மார்க் அலுமினியப் பாத்திரங்கள் சுத்தமான இங்கிலிஷ் அலுமினியத்தால் செய்யப்பட்டவை என்பதை மறக்கவேண்டாம்.

ஷெல் மார்க் அலுமினியப் பாத்திரங்கள் எல்லா நகரங்களிலும் கிடைக்கும்;

உங்கள் தேவையை அறிவித்தால் அனுப்ப முடியும்;

சி. வி. பாட்,

218 - 220, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

தலைமை ஸ்தாபனம்:

டாம் வீதி, கொழும்பு.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்
SUTANTIRAN

1957 நவம்பர் மாதம் 17-ந் திகதி

194 ஏ, தப்டா தெரு, கொழும்பு. போன்: 3411 த. பெ. 1183


## தமிழை அழிப்பவர் யார்?

‘சிங்களம் மட்டும்’ வீரர்களில் ஒருவரான திரு எல். எச். மேத்தானந்தா கடந்த வாரம் கொழும்பிலுள்ள அகில இலங்கை முஸ்லிம் வாலிப இயக்கத்தினரின் முன் ஒரு நீண்ட சொற்பொழிவாற்றினர்.

அந்த சொற்பொழிவிலே அவர் கீழ்த்தரமான வகுப்புவாத விஷத்தை வாரி வாரிக் கொட்டியபோதிலும் அதன் மத்தியிலே ஒரு மணியான உண்மையையும் எடுத்துக் கூறினர். ஆம், பண்டாரநாயகா-செல்வநாயகம் சமரஸ உடன்படிக்கை சட்டமானல் தமிழ் பேசும் மக்களுக்கு அதனல் விளையும் ஒரு முக்கிய பலன் என்ன என்பதுதான் அவர் வெளியிட்ட உண்மையாகும்.

பிரஸ்தாப கூட்டத்திலே திரு மேத்தானந்தா கூறியதாவது:—

“திரு பண்டாரநாயகா, திரு செல்வநாயகத்துடன் செய்துகொண்டிருக்கும் சமரஸ உடன்படிக்கையின்படி நாட்டின் எந்தப் பகுதியில் வசிக்கும் எவராவது அரசாங்கத்துடன் தமிழில் தொடர்பு வைத்துக்கொள்ளலாம் என்று ஆகிறது. இந்த நிலையின்படி தமிழ் பிரதேசத்திலுள்ள சிங்களவர் ஒருவர் கிராமவிதானையிடம் வாக்குமூலம் அளிப்பதானல் தமிழிலேயே அளிக்க வேண்டியிருக்கும். சிங்களப் பிரதேசங்களில் வசித்து வரும் தமிழர்கள் தமது பிறப்பு, இறப்பு, மணப் பதிவுகளை தமிழில் நடத்தவும் இது வசதியளிக்கிறது. இப்பிரதேசங்களிலுள்ள சிங்களப் பத்திரங்களில் கைச்சாத்திடவும் தமிழர்கள் மறுக்கக்கூடும்.

“இந்த நிலை தமிழுக்கு சமஅந்தஸ்து அல்லாமல் வேறு என்ன? இந்நிலையேற்பட்டால் ஒவ்வொரு அரசாங்க காரியாலயத்திலும், உப-காரியாலயங்களிலும் தமிழ் தெரிந்தவர்களைநியமிக்கவேண்டியிருக்கும். ‘இந்தநியாயமான அளவு உரிமை’ வழங்கும் சட்டத்திஞல் டி. ஆர். ஓக்களின் காரியாலயங்களிலும், தபால் நிலையங்களிலும், கச்சேரிகளிலும் உடனடியாக மேலும் 2000 தமிழ் அதிகாரிகள் வேண்டியிருப்பர். இது சமஅந்தஸ்துக்கும் மேலான சட்டபூர்வமான உரிமையாகிவிடுகிறது என்பதை யார்தான் மறுக்க முடியும்?”

திரு மேத்தானந்தா புட்டுக்காட்டியிருக்கும் இந்த உண்மையைத் தமிழ் பேசும் மக்களில் பலர் உணராமல் இருக்கிருர்கள் என்பது பெரிதும் வருந்தத்தக்கதாகும். உணர்ந்து அவர்கள் ஒருமுகமாகச் செயலாற்ற முடியுமானல் ஒரு நொடிப்பொழுதில் அரசாங்கத்தின் ‘சிங்களம் மட்டும்’ கொள்கையை நாம் முறியடித்துவிடலாம். அதற்கு ஏற்ற சட்டக் கவசத்தைச் சமரஸ உடன்படிக்கை நமக்குத் தேடித் தந்திருக்கிறது.

தமிழ் மொழியின் உரிமைகளைப் பிறர் பறித்து அழிப்பதைவிட, தமிழ் பேசும் மக்களாகிய நாமே உள்ள பல உரிமைகளை உபயோகிக்காமலும், பிரயோகிக்காமலும் இழந்து வருகிறோம். அந்நியர் தமிழை ஒதுக்குவது ஆச்சரியமல்ல; தமிழ் பேசும் மக்களே தமிழை ஒதுக்கி அழித்து வரும் கொடுமைதான் பார்த்து சகிக்க முடியாததாகவிருக்கிறது.

தமிழ் பேசும் மக்களுடைய தமிழுணர்ச்சி மேடைப் பேச்சுக்களுடன் மட்டும் நின்றுவிடுகிறது. நடைமுறையில், நாளாந்த வாழ்க்கையில் அது இடம்பெறுவதாகத் தெரியவில்லை. அன்றாடம் உழைக்கும் வண்டிக்காரன் கூட, அவன் தமிழ் பேசுபவனய் இருந்தால், ஐம்பது சதத்தைக் கொடுத்தேனும் ஆங்கிலத்தில் ‘பிட்டிசம்’ எழுதுவதுதான் உயர்வு என்று நினைக்கிறன். சிங்கள மக்களிடையே கொழுந்துவிட்டெரியும் மொழி உணர்ச்சி தமிழ் மக்களுக்கு இருப்பதாகத் தெரியவில்லை.

இரண்டு சிங்களவர்கள்—ஆங்கிலம் கற்றவர்கள்— ஒருவரை ஒருவர் வழியில் சந்தித்தாலுஞ் சரி பெரும்பாலும் ரயிலில் சந்தித்தாலும் சரி சிங்களத்தில்தான் கலந்து பேசிக்கொள்ளுகின்றனர். சிங்கள மக்கள் சிங்களப் பத்திரிகைகள் புத்தகங்கள் படிப்பதையும், தங்கள் தேவைகள் குறித்து அரசாங்கத்துக்கு எழுதுவதானல் சிங்கள மொழியிலேயே எழுதுவதையும் பெருமையாகவும் கடமையாகவும் கொள்ளுகின்றனர். சிங்கள மொழியுணர்ச்சி கிளப்பப்பட்ட பின் அரசாங்கக் காரியாலயங்களுக்குத் தினந் தினம் நூற்றுக்கணக்கான கடிதங்கள் சிங்கள மொழியில் வந்து குவிகின்றன என்ற உண்மையை அங்கு வேலைபார்க்கும் தமிழ் பேசும் நண்பர்களிடம் கேட்டாலே தெரிந்துகொள்ளலாம்.

ஆனல், தமிழ் மொழிக்கு இவ்வளவு இன்னலும், இடைஞ்சலும், நெருக்கமும் ஏற்பட்ட பின்னரும் கூட தமிழ் பேசும் மக்கள் மொழியுணர்ச்சி கொண்டுள்ளார்களா? அந்த வெட்கக்கேட்டை என்னவென்று சொல்வது? இன்றைய சுதந்திரனில் முதல் பக்கத்தில் வெளியாகியுள்ள ஒரு துக்ககரமான செய்தியைப் பாருங்கள். தபால் இலாகாவின் ஒரு பிரிவில் தமிழில் வரும் கடிதங்களைக் கவனிப்பதற்கென்று ஒரு தனிப் பகுதியை ஏற்படுத்தி, அதற்கென்று தனியாக தமிழ்க் குமாஸ்தாக்களை நியமித்தும், அவர்கள் கவனத்துக்கு போதிய தமிழ் கடிதங்கள் தமிழ் பொதுமக்களிடமிருந்து வருவதில்லையாம். இதன் காரணமாகத் தமிழ்ப் பிரிவை மூடிவிட அரசாங்கம் ஆலோசித்து வருகிறதாம்!

இந்த இலட்சணத்தில்தான் நாம் சமஅந்தஸ்துக்காக சத்தி கட்டிக்கொண்டு போராடுகிறோம். தமிழ் பேசும் மக்களுக்கு உத்தியோகத்துக்கு வழியில்லையே என்று முதலைக்கண்ணீர் வடிக்கிறோம். அரசாங்கம் தமிழை ஒழித்துக்கட்டுகிறது என்று குற்றப் பத்திரிகை படிக்கிறோம்.

உண்மையில் தமிழ் மொழியை இந்த நாட்டில் உரிமையும் பெருமையும் அற்ற மொழியாக ஒதுக்கித் தள்ளுபவர்கள் யார்? அவர்கள் அந்நியர்களா அன்றிக் கேவலம் தமிழர்கள்தாமா என்பதைத் தமிழ் பேசும் மக்கள் கண்டுணர்வார்களாக.

செனட் தேர்தல்:

## நினைத்தபடி நடந்திருந்தால்... கொம்யூனிஸ்டுகள் விருப்பு

—:0:—

# உண்மையில் நடந்தது என்ன? வாக்கெடுப்பு புள்ளி விவரம்

(சுதந்திரன் அரசியல் விமர்சகர்)

அண்மையில் நிகழ்ந்த செனட் சபைத் தேர்தல் எப்படி நடைபெற்றது என்ற விபரங்களின் முன்பகுதியைக் கடந்த வாரம் இப்பத்திகளில் எழுதியிருந்தோம்.

எதிர்க்கட்சிக் கூட்டத்தில் செய்த ஏகோபித்த தீர்மானத்தின்படி யு. என். பி. கட்சி நடந்துகொள்ளமுடியவில்லை. அதாவது அவர்கள் தமிழரசுக் கட்சி அபேட்சகருக்குத் தங்கள் வாக்குகளை அளிக்க மறுத்துவிட்டார்கள். அப்படி அவர்கள் கடைசி நேரத்தில் மறுத்ததற்கு காரணம் கொம்யூனிஸ்டுகள் வெளியிட்ட ஒரு மொட்டைப் பிரசுரம்தான் என்பதைக் கடந்த வாரம் எடுத்துக் கூறியிருந்தோம்.

கடைசி நேரத்தில் நிலைமை இப்படியாவதைக் கண்ட எதிர்க்கட்சித் தலைவர் டாக்டர் என். எம். பெரேரா திரு எஸ். ஜே. வி. செல்வநாயகத்துடன் கலந்துகொண்டு இந்த சிக்கலில் இருந்து விடுபடுவதற்கு ஏதாவது மாற்று வழியுண்டா என்பதை ஆராய்ந்தார்.

அன்றையத் தினம் எதிர்க்கட்சியின் பலம் பின்வருமாறு அமைந்திருந்தது:

| | |
|---|---|
| சமசமாஜக் கட்சி | 14 |
| தமிழரசுக் கட்சி | 8 |
| யு. என். பி. கட்சி | 6 |
| சுயேச்சைகள் | 4 |
| மொத்தம் | 32 |

திரு. வி. சுந்தரலிங்கத்தைத் தவிர ஜனப்களான எம். எம். முஸ்தபா, மாக்கான் மரிக்கார், முகமது அலி ஆகிய மூன்று சுயேச்சைகளும் எதிர்க் கட்சிக் கூட்டத்தில் கலந்துகொண்டார்கள். திரு சுந்தரலிங்கம் கூட்டத்தில் கலந்துகொள்ளாவிட்டாலும் தமிழரசுக் கட்சிஅபேட்சகருக்குத் தாம் வாக்களிப்பதாக உறுதி கூறியிருந்தார்.

எனவே உள்ள இந்த 32 வாக்குப் பலததைக் கொண்டு எப்படியாவது இரண்டு எதிர்க்கட்சிஅபேட்சகர்களையும் வெற்றி பெறச் செய்துவிட வேண்டும் என்று டாக்டர் பெரேரா திட்டமிட்டார். அதே சமயத்தில் யு. என். பி. யினர் தமிழரசுக் கட்சி அபேட்சகருக்கு வாக்களிக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படாதபடியும் பார்த்துக்கொண்டார்.

உள்ள வாக்குகளை டாக்டர் பெரேரா பின்வருமாறு பங்கிட்டார்.

சமசமாஜக் கட்சி அபேட்சகரான திரு ஆர்மண்ட் டி. சூஸாவிற்கு பின்வருமாறு வாக்களிப்பதென முடிவு செய்யப்பட்டது:

| | |
|---|---|
| சமசமாஜக் கட்சி | 11 |
| யு. என். பி. கட்சி | 6 |
| மொத்தம் | 17 |

தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த திரு ஜி. நல்லையாவுக்கு பின்வருமாறு வாக்களிப்பதென முடிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| தமிழரசுக் கட்சி | 8 |
| சமசமாஜக்கட்சி சார்பில் (டாக்டர் என். எம். பெரேரா டாக்டர் கொல்வின் ஆர். டி. ஸில்வா, திருமதி விவியன் குணவர்த்தன) | 3 |
| சுயேச்சைகள் | 4 |
| மொத்தம் | 15 |

ஆனல் வாக்கெடுப்பின் போது சுயேச்சைகளில் ஒருவர் கரணமடித்து கொம்யூனிஸ்டு அபேட்சகருக்கு வாக்களித்துவிட்டார். இப்படிக் கரணம் அடித்தவர் தமிழ் உரிமையை பாதுகாப்பேன் என்று வாயளவில் சொல்பவரும், ஏக காலத்தில் சமசமாஜிகளுடனும் கொம்யூனிஸ்டுகளுடனும் ‘அரசியல் விபசாரம்’ செய்பவருமான ஒரு முஸ்லிம் பிரதிநிதிதான் என்றுபேசிக் கொள்ளப்படுகிறது. இவர் மட்டும் ‘புரட்டாமல்’ எதிர்க் கட்சியோடு நின்ற மாதிரி நின்றிருந்தால் கொம்யூனிஸ்டுகளுக்கு 5 வாக்குகள்தான் கிடைத்திருக்கும்.

எதிர்க்கட்சிக் கூட்டத்தில் தாமும் ஒருவராகக் கலந்து கொண்டு, அங்கு எதிர்க்கட்சியின் தீர்மானப்படி நடப்பதாகச் சொல்லிவிட்டு, பின்னர் கரணமடித்த இந்தப் பிரதிநிதியை ஒரு பேடி என்றுதான் சொல்ல வேண்டும்.

தேர்தல் முடிந்து வாக்கு விவரம் வெளியானதும் ஆத்திரமடைந்த திருவாளர் சுந்தரலிங்கம், கரணமடித்த இந்தப் பேடிப் பேர்வழியைப்பற்றிக் குறிப்பிடுகையில் “ஒரு ஆனைக் கள்ளன் புரண்டு விட்டான்” என்று சிங்களத்தில் கூறினராம். தமிழிலோ ஆங்கிலத்திலோ கூருமல் ஏதோ ஒருகாரணத்தோடுதான் அவர் அப்படிச் சிங்களத்தில் கூறினர் என்று தெரிகிறது.

எனவே வாக்கெடுப்பின் போது சமசமாஜ அபேட்சகருக்கு 17 வாக்குகளும் தமிழரசு அபேட்சகருக்கு 14 வாக்குகளும் பதிவாயின.

அன்று பாராளுமன்றத்துக்கு சமூகமளித்திருந்த மொத்த அங்கத்தினர் தொகையை அனுசரித்து ஒரு செனட்டர்தெரிவு செய்யப்படுவதற்கு 15.84 வாக்குகள் கிடைக்க வேண்டும் என்று கணக்கிடப்பட்டது.

சமசமாஜ அபேட்சகருக்கு கிடைத்த 17 வாக்குகளில் 15. 84 வாக்குகள் கழிக்கப்பட்டபின், மேலதிகமாக விருந்த 1. 16 வாக்குகள் திரு ஜி. நல்லையாவுக்குக் கிடைத்த 14 வாக்குகளுடன் சேர்க்கப்பட்டு அவர் பெற்ற வாக்கு 15.16 ஆக்கப்பட்டது.

இதன் பின்னர் 14 சமசமாஜ அங்கத்தவர்களும் கொடுத்த ‘இரண்டாவது பிரிதி வாக்கு’ திரு ஜி. நல்லையாவுக்கு சாதகமாக விருந்ததால் அவர் பெற்ற வாக்குப் பலத்துடன் மேலும் அம்சங்கள் சேர்க்கப்பட்டு, செனட்டர் தெரிவில் அவர் நான்காவதுஸ்தானத்தைப் பெற்றூர். அதாவது தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து செனட்டர்களில் இரண்டு அரசாங்க செனட்

(13-ம் பக்கம் பார்க்க)

## தமிழைத் தமிழர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சிங்களப் பகுதிகளில் உள்ள உப-தபாற் கந்தோர் அதிபர்கள்கூட (Sub-Post masters & Receiving Post masters) சிங்களத்தில் தங்கள் அறிக்கைகளையும் கடிதங்களையும் எழுதி வருவதாகவும் இதே பிரகாரம் தமிழ்ப் பகுதியிலுள்ளவர்கள் [illegible] அவர் கூட [illegible]

## பலத்தைக் குறையாதீர்!

—:0:—

## பிரிவினை கோரும் ஆசிரியர்களுக்கு முன்னள் தலைவர் புத்திமதி

“தமிழ் ஆசிரியர் சமூகத்திற்கு ஏற்பட்டிருக்கும் இன்னல் நிறைந்த இச்சந்தர்ப்பத்தில் மேல் மாகாணத் தமிழ் ஆசிரியர் சங்கத்தை அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்திலிருந்து பிரித்து அகில இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்துக்கு ஒரு போட்டிச் சங்கத்தை நிறுவச் சிலர் முயற்சிப்பது ஆசிரிய சமூகத்திற்குச் செய்யும் மிக மோசமான துரோகச் செயலாகும்” என்று முன்னைநாள் மேல் மாகாண ஆசிரியர் சங்கத் தலைவரும், நீர்கொழும்பு முனிஸிபல் சபை அங்கத்தவருமான திரு கே. எஸ். லியோனிஸ் பெர்னந்து பத்திரிகைகளுக்கு விடுத்த ஒரு அறிக்கையில் கூறியுள்ளார்.

பிரஸ்தாப அறிக்கையின் முழு விவரம் பின்வருமாறு:

தமிழ் மொழியின் சமஅந்தஸ்திற்கும், சுயபாஷா ஆசிரியர்களின் உரிமைகளுக்கும் ஒன்றுபட்டுப் போராட வேண்டியது தமிழாசிரியர்களின் நீங்காத கடமையாகும் அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கம் இலங்கை முழுவதுமுள்ள தமிழாசிரியர்களின் ஏகசங்கமாக இருந்து மேற்படி உரிமைகளுக்காகப் போராடி வந்திருக்கிறது. தமிழ் ஆசிரிய சமூகத்திற்கு ஏற்பட்டிருக்கும் இன்னல் நிறைந்த இச்சந்தர்ப்பத்தில் மேல் மாகாணத் தமிழ் ஆசிரியர் சங்கத்தை அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்திலிருந்து பிரித்து அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்துக்கு ஒரு போட்டிச் சங்கத்தை நிறுவச் சிலர் முயற்சிப்பது ஆசிரிய சமூகத்திற்குச் செய்யும் மிக மோசமான துரோகச் செயலாகும்.

பதவியை மாத்திரம் நோக்கமாகக்கொண்ட சிலரின் பிழையான பாதையில் தமிழாசிரியர்கள் செல்லமாட்டார்கள் என்பது எனது அசையாத நம்பிக்கை. அபிப்பிராய பேதங்களும், கொள்கை வித்தியாசங்களும் எந்தச் சங்கங்களிலுமிருப்பது சர்வசாதாரணம். ஆசிரிய சங்கத்தின் மேலான, புனிதமான நோக்கங்களை ஆசிரியர்கள் உணர்ந்து தம்மிடையேயுள்ள சில்லறை வித்தியாசங்களை மறந்து அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தின்கீழ் ஒன்றுபட்டு பலம்பொருந்திய ஆசிரிய சமுதாயத்தை அமைக்கும்படி வேண்டுகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களத்தைத் திணிக்க தீவிர நடவடிக்கை

## அரசாங்க குமாஸ்தாக்களுக்கு திறை சேரி எச்சரிக்கை

## சிங்களத் தகுதிகாண் பரீட்சையில் சித்தியடையத் தவறினல் வேலை நீக்கமாம்

## தமிழரசுக் கட்சி தலைமையிடும்: அவசரப்பட்டு எதுவும் செய்ய வேண்டாமென வேண்டுகோள்

(சுதந்திரன் நிருபர்)

சிங்களத்தை (தமிழ்) குமாஸ்தாக்களின் தொண்டைக்குள் திணிக்க அரசாங்கம் தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது.

சிங்களம் மட்டும் சட்டம் வருவதற்கு முன்னரே பயிற்சிக் கால எல்லை (Probationary Period) குறிப்பிட்டு வேலைக் கமர்த்தப்பட்ட அரசாங்க குமாஸ்தாக்கள்தமது பயிற்சிக்கால முடிவுக்குள்சிங்களத்தில் தேர்ச்சி பெற்று அதற்கான பரீட்சையில் சித்தியடையாவிட்டால் அவர்களின் நியமனம் உறுதிப்படுத்தப்பட மாட்டாது (இதை வேறு விதமாகச் சொன்னல் வேலை நீக்கம் செய்யப்படுவார்கள்) என்று அரசாங்கம் ஒரு சுற்றறிக்கை மூலம் அவர்களுக்கு அறிவித்திருப்பதாகத் தெரிகிறது.

சிங்களம் மட்டும் சட்டம் வருவதற்கு முன்னர் நியமிக்கப்பட்ட குமாஸ்தாக்கள் சம்பந்தப்பட்ட மட்டில் அரசாங்கத்தின் போக்கு இப்படி இருக்கிறதென்றல் அதற்கு பின்னர் நியமனம் பெற்றவர்கள் விஷயத்தில் அரசாங்கத்தின் மனப்பான்மை எப்படி இருக்கும் என்பதை யாரும் யூகித்துக் கொள்ளலாம்.

அரசாங்கம் (அதாவது திறை சேரி) 29-10-57 தேதியிட்டு சிங்களம் மட்டும் சட்டத்துக்கு முன்னர் குமாஸ்தாக்களாக நியமனம் பெற்றவர்களுக்கு அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் அன்னரின் பயிற்சிக்காலத்தை இரண்டு வருடங்களிலிருந்து மூன்று வருடங்களாக அதிகரித்திருப்பதாகவும் இந்தக் கால எல்லைக்குள் சிங்களத்தில் போதிய தேர்ச்சி பெற்று முடிவில் நடத்தப்படவிருக்கும் தகுதிகாண் பரீட்சையில் சித்தி யெய்துவதைப் பொறுத்துத்தான் அவர்களின் நியமனம் உறுதிப்படுத்தப்படுமென்றும் தெரிவித்திருக்கிறது.

பிரஸ்தாப தகுதி காண் பரீட்சையில் சித்தியெய்தத் தவறும் குமாஸ்தாக்கள் வேலைநீக்கம் செய்யப்படலாம் என்றும் சுற்றறிக்கை கூறுகிறது.

மொழிப் பிரச்னை சம்பந்தமாக உடன்படிக்கை தோன்றியுள்ள இச் சந்தர்ப்பத்தில் அரசாங்கம் இத்தகைய நிபந்தனைகளை விதிப்பது தற்போது நிலவி வரும் நல்லெண்ணத்துக்கு தீது விளைப்பதும், பொதுவாகத் தமிழ் பேசும் மக்களினதும் குறிப்பாகத் தமிழ் பேசும் குமாஸ்தாக்களினதும் ஒத்துழையாமையையும் தீவிர எதிர்ப்பையும் சம்பாதித்துக் கொள்வதாகும் என்றும் இது பற்றி ஓர் தமிழரசுப் பிரமுகரிடம் பிரஸ்தாபித்த போது அவர் கருத்து வெளியிட்டார்.

பிரதமருடன் தமிழரசுக் கட்சி விரைவில் இது குறித்துப் பேசி நல்ல முடிவு காண முனையும் என்று தாம் நம்புவதாகவும் தமிழ்க் குமாஸ்தாக்கள் அவசரப்பட்டு எதுவித அடாத காரியத்திலும் இறங்கிவிடக் கூடாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மட்டக்களப்பில் திரு. ஜீ. ஜீ.

### இரண்டாவது படையெடுப்பும் படு தோல்வி

திரு. ஜீ. ஜீ.யின் ஆதரவாளர்கள்-மொத்தம் பன்னிருவர்-மட்டக்களப்பில் கடந்த 12-ந் திகதி செவ்வாய்க்கிழமை ஒரு பொதுக்கூட்டம் நடத்திவிடப் பகீரதப் பிரயத்தனம் செய்தனர்.

திரு பொன்னம்பலமும் நேரில் வந்து நின்று பலரின் ஆதரவைத் தேடி ஓடி ஆலாய்ப்பறந்தார். ஆனல் அவருடைய இரண்டாவது படையெடுப்பும் படுதோல்வியில்தான் முடிந்தது.

'அடுத்த வழக்கு தவணை 23ந் திகதி இருக்கிறது. எனவே 24ந் திகதிக்காவது ஒரு கூட்டத்துக்கு ஏற்பாடு செய்யுங்கள்' இப்படி வற்புறுத்தி விட்டு போயிருக்கிறர் என்று தெரிய வருகிறது.

## 'எழுத்து திருட்டு'....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தொழிலும் இதற்கு விதிவிலக்கல்ல. அதிலும் எழுத்துக் கலை மிகவும் கவர்ச்சி வாய்ந்தது. பொருள் வருவாய் குறைவாக இருந்தாலும் கிடைப்பதற்கரிய புகழையும், பெயரையும் அதன் மூலம் பெற முடியும். ஆகவே, புகழுக்காக ஆசைப்பட்ட சிலர், இன்னொருவர் எழுதிய சிறந்த எழுத்துக்களையும் கற்பனைகளையும் கஷ்டப்படாமல் தமதாக்கிக் கொண்டு அனுகூலம் அடையப் பார்க்கிறர்கள்.

### திருட்டுச் சரக்கு பிரசுரமாயிற்று

இந்த விஷயத்தில் விகடனுக்கு ஓரளவு அனுபவம் உண்டு. தினசரி எவ்வளவோ கதைகளும் கட்டுரைகளும் எழுத்தாளர்களிடமிருந்து வந்து குவிகின்றன. அவைகளைப் பரிசிலிக்கும் போது முக்துக் குவியலுக்கு இடையே சுக்கான் கல்லும் கிடப்பது போல் ஏற்கனவே மற்றப் பத்திரிகைகளில் வந்த கதைகளும், கற்பனைகளும் அகப்படுகின்றன. முன்னரே வெளிவந்த எழுத்தோவியங்களைச் சொந்தமாக்கிக் கொண்டு சிலர், புதிது போல் எழுதி அனுப்பி விடுகிறர்கள். நமது கூர்ந்த பரிசிலனைக்கும் தப்பி இத்தகைய கதைகள் எப்போதாவது விகடனில் இடம் பெற்று விடுகின்றன.

சமீபத்தில் கூட இம்மாதிரி ஒரு கதை வெளியாகிவிட்டது. ஆனல் ஒருவர் கண்ணிலிருந்து தப்பலாம். பலர் கண்ணிலிருந்து தப்ப முடியுமா? லட்சக் கணக்கான வாசகர்களை ஏமாற்றி விடத்தான் முடியுமா? மேற் சொன்ன கதை பிரசுரமானதைக் குறித்து நமக்கு பல நேயர்கள் கடிதம் எழுதி இருக்கிறர்கள்.

### இலக்கியக் களவு

சிந்தனையில் தோன்றுவதுதான் இலக்கியம். பிற நாட்டுச் சிந்தனையாளர்களின் கருத்துக்களை நம் நாட்டுப் பண்புக்கு ஏற்றவாறு மாற்றி அமைத்துக் கொள்ளுவதில் தவறில்லை. பிற மொழியில் தோன்றிய சிந்தனைகளை நம் சொந்தக் கற்பனையைக் கொண்டு, அபிவிருத்தி செய்து புது உருவம் கொடுப்பதும் வரவேற்கத் தக்கதே! அப்படித்தான் பல நாட்டு இலக்கியங்களும் வளர்ந்திருக்கின்றன. ஆனல் பிறர் எழுத்தை அப்படியே தமதாக்கிக் கொள்ளும் 'இலக்கியக் களவு' மன்னிக்க முடியாத குற்றம். அதனல் இலக்கியமும் வளராது; எழுத்தாளரும் வளர மாட்டார்கள்.

### எழுத்தாளர்களின் மகத்தான பணி

எழுத்தாளர் நலனில் அக்கறை செலுத்திவரும் எழுத்தாளர் சங்கங்கள் இந்த விஷயத்தில் தீவிர கவனம் செலுத்தவேண்டியது மிகவும் முக்கியமாகிறது.

பொதுவாக நாட்டில் எழுத்தாளர்களுக்கு வருங்காலம் மிகப் பிரகாசமாகத்தான் இருக்கிறது. தேசங்களின் தலையெழுத்து அவர்களின் பேனு முனையில்தான் இருக்கிறது. எழுத்தாளர்கள்தான் உலக மக்களை ஒருவருக்கொருவர் அறிமுகப்படுத்தி நல்லுறவை வளர்க்க வேண்டும்.

இதையெல்லாம்விட முக்கியமாக ஒருவருக்கொருவர் வெறுப்பு, சந்தேகம், பொருமை இவைகளைப் போக்கி அன்பு, அறம் போன்ற நற்பண்புகளை நிலைநாட்டி மனித குலத்தை மாண்புறச் செய்யும் மகத்தான பணி அவர்களுக்குத்தான் வாய்த்துள்ளது. உலகம் என்றும்போல் இன்றும் அவர்களைத்தான் நம்பியிருக்கிறது. வாழ்க எழுத்து! வளர்க பணி!

## சிறுபான்மைத் தமிழர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களில் அவரிடம் அவசர அவசரமாகக் கையெழுத்து வாங்கிக்கொண்டு சென்றதாம். இக் கடிதத்தின் பிரதியை வீட்டில் வாசித்த திரு செல்வரத்தினம் தன்னை மோசடி செய்துவிட்டார்களென்றறிந்து உடனே ராஜிநாமாவை சபையிடம் சமர்ப்பித்தாராம்.

### வாபஸ்

பல விஷயங்களுக்குமாகக் கூடிய நிர்வாக சபையில் காரியதரிசியின் ராஜிநாமா சபையின் அநுமதியின்றி செனெட் சபைத் தேர்தலில் திரு எம். வி. சுப்பிரமணியம் போட்டியிட்டது செனெட்டர் திரு ஜி. நல்லையாவுக்கு வரவேற்பளிப்பது போன்ற விஷயங்களில் அங்கத்தவர்கள் திரு எம். வி. சுப்பிரமணியத்தின் செய்கையைக் கண்டித்துப் பேசியதாகவும், அங்கத்தவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க திரு செல்வரத்தினம் ராஜிநாமாக் கடிதத்தை வாபஸ் செய்து கொண்டதாகவும், செனெட்டர் ஜி. நல்லையாவுடன் எம். வி. சுப்பிரமணியம் போட்டியிட்டபடியால் மகாசபை மூலம் வரவேற்பளிக்கக் கூடாதென்றும் தீர்மானிக்கப்பட்டதாம்.

### கடிதத்தில்...

அக் கடிதத்தில் எழுதப்பட்டிருந்த விஷயம் செனெட்சபைத் தேர்தலில் போட்டியிடவிருக்கும் திரு எம்.வி. சுப்பிரமணியத்திற்கு ஆதரவு கேட்டு அரசாங்கக் கட்சி எம். பீ. க்களுக்கு எழுதப்பட்டிருந்ததாம்.

பூசி மெழுகிப் பொம்மலாகக் கம்யூனிஸ்ட்டுகளின் ஆதரவுடன் நடைபெற்று வரும் இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் போக்கில் அதிருப்தியடைந்த திரு செல்வரத்தினம் எந்த நேரமும் அச்சபையிலிருந்து வெளியேறும் தருணத்தை எதிர்பார்த்திருப்பதாக அறியப்படுகின்றது.


வெளிவரும் நன்னாளை எதிர்பாருங்கள்

1958

யாழ்ப்பாணம் பிரம்ம ஸ்ரீ இரகுநாதையர் வாக்கி பஞ்சாங்க கணிதமடங்கியது

லீலா பஞ்சாங்க சித்திரக்கலண்டர்

1957 கலண்டரில் காணுத பல அரிய பெரிய ஆராய்ச்சி விஷயங்களும் சித்திரங்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

பார்த்துஉங்கள்தீர்ப்பைக்கூறுங்கள்

இன்று இலங்கையில் வெளிவரும் இவ்வித கலண்டர் எல்லாவற்றையும்விட லீலா சித்திரக் கலண்டர் மேன்மையான தயாரிப்பென நாம்உறுதிகூறுவதுடன் உத்தரவாதும் செய்கின்றேம். நீங்கள் பார்த்து உங்கள் தீர்ப்பை கூறுங்கள்.

உங்கள் வியாபாரியிடம் கேளுங்கள்.

எங்கும் கிடைக்கும்.

லீலா ஸ்டோர்ஸ்,

249, நொறிஸ் ரேட், கொழும்பு-11.



உஷா

தையல் மெஷின்கள்

குடும்பஸ்தர்களுக்கு ஒரு அரிய சந்தர்ப்பம்!

உஷா மெஷின் ஒன்று உங்களிடம் இருந்தால் நீங்கள் தையல் கூலிக்காக செலவிடும் அவ்வளவு பணத்தையும் மிச்சப்படுத்தலாம்.

கவர்ச்சிகரமான புதுவித மெஷின்கள் கையிருப்பில் உள்ளன.

ரொக்க விலை:

| | |
|---|---|
| கை மாடல் | ரூ. 195/- |
| டிறெடில் மாடல் | ரூ. 315/- |
| போல்டிங் மாடல் | ரூ. 335/- |

மாதாந்தர தவணையில்:

| | முதலில் முற்பணம் | மாதாந்த தவணை | | |
|---|---|---|---|---|
| கை மாடல் | ரூ. 12/50 | ரூ. 12/50 விகிதம் | 18 | மாதங்கள் |
| டிறெடில் மாடல் | ரூ. 75/- | ரூ. 19/50 ,, | 18 | ,, |
| போல்டிங் மாடல் | ரூ. 75/- | ரூ. 21/50 ,, | 18 | ,, |

சோல் ஏஜண்டுகள்:

ரெய்மு சன்ஸ் லிமிட்டெட்,

17, புதிய சோனகத் தெரு, கொழும்பு.

டெலிபோன்: 6060.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சிறுகதை:

# சுந்தரி விபசாரி?

— உதயணன்

விபசாரியாம் விபசாரி! வயது வந்தவாலிபரின் வாழ்வைக் கெடுக்கும் வஞ்சகியாம் நான்! மறைக்கவில்லை; நான் விபசாரிதான்! ஆனால் இவர்களுக்கு யார் வெற்றிலை வைத்தழைத்தது? தினசரி விட்டில் பூச்சி மாதிரி வந்து விழுகிறார்களே, அவர்களும் என்னைத் தூற்றும் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள்தான்.

தம் குற்றம் வெளிப்பட்டுப் போகலாகாதே என்ற நோக்கில்—தன்னிருளை மக்கள் கவனிக்குமுன் உலக இருளை நீக்கிவிட முந்திக் கொள்ளும் சந்திரிகையைப் போல இவர்கள் நடந்து கொள்வது வேடிக்கை! ஆளுக்கொரு நீதி பேசும் நேர்மையென்ற குருட்டுச் சமுதாயம் கற்பைக் களிப்போடு பறித்துவிட்டுக் காறியுமிழ்ந்து கதை பேசுகிறது!

விபசாரம் செய்யக்கூடாததுதான். எனினும் அதைவிட எனக்கு வேறு வழி...? ஏன் எனக்கு இந்த நிலை? யாரால் வந்தது......? எப்படி? இதோ அந்தக் கதை:—

★

தொழுதுண்டு வாழ்வதிலும் உழுதுண்டு வாழ்தல் பழுதற்ற வாழ்வு என்ற வாக்கியம் என் அப்பாவைப் பொறுத்தவரையில் பொய்த்துவிட்டது. உழுது, நெல்லை விதைத்து, நீர்ப் பாய்ச்சி பொற்குவியல் போன்ற நெற்குவியலை உண்டுபண்ணி, எஜமான் சுந்தரம்பிள்ளை வாழ வழிகோலி விட்டு, வீட்டுக்கு வந்து வாடிய வயிற்றுக்குக் கஞ்சியோ கூழோ ஊற்றிக் கொள்வார், அப்பா!

அந்தக் கிராமத்தில் அப்பாவுக்கு மட்டும் இக்கதி நேர்ந்துவிடவில்லை; பெரும்பான்மையானோர் இந்நிலையில்தான் வாழ்ந்தனர். ஆயினும் அவர்களுக்கு சுந்தரம் பிள்ளையில் இருந்த அன்பு, அபிமானம், நம்பிக்கை குறையவில்லையே! அப்பனுக்கும் பிள்ளைக்கும் சண்டையா, அவர்தான் வர வேண்டும் விசாரணை செய்ய; யாராவது ஒருவர் வீட்டில் மனைவி அறப்போரா, அவர்தான் வர வேண்டும் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்த; எங்காவது கொலை நடந்துவிட்டதா, அவருக்கு முதலில் அறிவித்துத்தான் மற்றவை: அவ்வளவு மதிப்பு அவருக்கு!

வண்ண மலர்த் தோட்டத்திலே அந்திபடும் வேளையிலே, சொந்த அத்தான் அருகினிலே, மதுவுண்ட மந்திபோல் மாந்திக் கிடக்கையில் அவர்:

"சுந்தரி" என்றழைத்தார் அன்போடு, ஆதரவோடு.

"அத்தான்......!" ஏக்கத்தின் எதிரொலியாக இருக்க வேண்டும் என் பதில் என்றுதான் துடித்தேன், அது

பிரிந்தோம் மனமின்றி!

★

"வாம்மா வா, காலையிலே சிவராமன் எல்லாம் சொன்னான்" என்ற எஜமானின் வரவேற்புரையுடன் உள் நுழைந்தேன்.

பழுத்த பூசணிப் பழம் போன்ற உடலில் திருநீறு-சந்தனம்-குங்குமம்-இத்தியாதி இடமின்றிப் பூசப்பட்டிருந்தன. வரம்பில் உள்ள புல்லை வெட்டி வயலில்

**ஆளுக்கொரு நீதி பேசும் குருட்டுச் சமுதாயம் கற்பைக் களிப்போடு பறித்து விட்டுக் காறியுமிழ்ந்து கதை பேசுகிறது.**

**விபசாரியாம், விபசாரி! வயது வந்த வாலிபரின் வாழ்வைக் கெடுக்கும் வஞ்சகியாம் நான். மறைக்க வில்லை, நான் விபசாரி தான்! ஏன் எனக்கு இந்த நிலை......? யாரால் வந்தது......? எப்படி......?**

சுந்தரம்பிள்ளையின் வீட்டுக்குப் பக்கத்தில் வாழ்பவன்தான் சிவராமன். அந்தப் பட்டிக்காட்டிலிருந்து கொழும்பு சென்று படித்துவிட்டு வந்த ஒரே 'மேதாவி' சிவராமன்தான். "அழகில் சிறந்தவன், அறிவில் பெரியவன், ஆற்றல் மிக்கவன். ஊக்கமுடையவன், துடிக்கும் வாலிப வயதினன்"—என்றெல்லாம் எனது குழாத்தைச் சேர்ந்த கன்னியர் மத்தியில் ஒரு அபிப்பிராயம் இருந்தது. எனினும் அந்த அதிர்ஷ்டம் எனக்கே கிடைத்தது. அவர் என்னைத்தான் காதலித்தார். நான் அவரைத்தான் காதலித்தேன்.

வெளியே எப்படிக் கேட்டதோ!

"இன்னும் எத்தனை நாளைக்கு நாம் மாலை மறைந்த பின் மறைவில் சந்தித்து மகிழ்வது?"

"ஆமத்தான், அப்பா அறிந்தால் தோலையுரித்துக் கையில் கொடுத்துவிடுவார்"

"நல்லதாய்ப்போயிற்று! வாங்கிக் கொண்டுவா நாம் பட்டணம் போய் ஒரு செருப்புக் கடை போட்டுப் பிழைக்கலாம்!"

"போ......ங்கத்தான், ஆமா, நம்ம எஜமானிடம் போய்......!"

"கரக்ட்!" சுந்தரி நீ சொல்வது சரி. எஜமான் சுந்தரம்பிள்ளையிடம் சென்று எங்கள் நிலையைச் சொன்னால் கட்டாயம் கல்யாணம் செய்து வைப்பார். எங்க இராமண்ணைவுக்கும் அப்படித்தானே நடந்தது"

'இப்போதேபோவோமா?'

"இல்லையில்லை. அது இருவருக்குமே ஆபத்து நாளைக் காலையில் நானே சென்று விபரத்தைக் கூறிவிடுகிறேன். மாலையில் நீ சென்று உன் கடைசி அஸ்திரத்தையும் பிரயோகித்து விட்டு இங்கு வந்து சேர்"

"சரியத்தான்......இன்னொரு...—!"

"இதோ......'இச்'......போதுமா......"

போட்டதுபோல, கரையோரங்களில் முளைத்திருந்த மயிரை வழித்திழுத்து வழுக்கைத் தலைக்கு மூடி போட்டிருந்தார். எத்தனை அலங்காரங்கள் இருந்தபோதிலும் அவரது நாற்பதாவது வயது அவருடைய குழிவிழுந்த கண்களினூடாக வெளியே எட்டிப் பார்த்துக்கொண்டிருக்கத்தான் செய்தது.

"வர வர உன்னப்பனுக்கு அறிவே கெட்டுப்போய்விட்டது. ஹூம், நாளுச்சு—உன் கல்யாணமாச்சு" என்று சொல்லிக்கொண்டே சென்று கதவை மூடி தாழ்ப்பாளிட்டார் அந்தப் பெரிய மனிதர். எனக்குத் 'திக்' கென்றது.

"எ-ஜ-மா-ன்......இது......இது......!"

"இப்படி வா சுந்தரி? சிவராமனுக்கே உன்னைக் கல்யாணம் செய்து வைக்கிறேன்" என்று என் கையைத் தொட்டு......இழுத்து......?

அரசன் ஊர்வலம் வருகிறான். வழியில் நின்றால் பொன்னும் பொருளும் கிடைக்கும் என்று எதிர்பார்த்து நின்றானும் ஒரு பரதேசி. அரசன் அவ்விடத்தில் வந்ததும் இறங்கிச் சென்று ஏதாவது கொடுவென்று பரதேசியைக் கேட்டானாம்.

எப்படிக் கதை? வழியில் பணத்தைப் பறிகொடுத்துவிட்டு நீதிபதியிடம் சென்று முறையிட்டால், நீதிபதி மிகுதிப் பணத்தையும் பறித்துக்கொண்டு பாய்ந்தோடுவார் என்று யார் கண்டது?

கொல்லைப்புறத்தில் ஒரு தென்னை மறைவில் பதுங்கியிருந்து எங்களைக் கவனித்த கதிரவன் இந்தக் கண்ணராவிக்காட்சியைக் காணச்சகிக்காமலோ என்னவோ அடிவானத்தில் விழுந்துவிட்டான்.

அலங்கோலமாக இருந்த ஆடைகளை ஒழுங்கு செய்துகொண்டு ஆறுத்துயரோடு, மாறாத அவமானத்தோடு வெளியே வந்த எனக்கு "பளீர்"—"பளீர்" என்று கன்னத்தில் அறைகள் விழுந்தன. கண்ணீர்த் திரைக்கூடாக சிவராமனின் ரௌத்தரகார உருவம் தெரிந்தது; 'விபசாரி' என்றதைத் தவிர அவர் என்னோடு பேசக்கொடுக்கவில்லை; நிலைமையைப் புரிந்துகொள்ள முயலவுமில்லை. ஆத்திரத்தையெல்லாம் கன்னத்தில் 'அறை'மூலம் கொட்டிவிட்டு விர்ரென்று நடந்தார். கதறி அழுது அழைத்தேன். ஆனால் அவர் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை; நெஞ்சு நிறைந்திருந்து எனக்குத் தஞ்சமளித்து வந்த அவர் போய்விட்டார்.

இனி நான் மட்டும் அங்கிருந்து என்ன செய்வது? ஊர் சனங்களிடம் உதைபட்டுச் சாவதா? வாழப்பிறந்த நான் அதை விரும்பவில்லை. அந்தச் சொல்லே பயங்கரமாகத் தோன்றியது. கெட்டவங்க பட்டணத்தை ஒட்டிக்கோளு மென்பதாலே—நானும் எப்படியோ இங்கு வந்து சேர்ந்தேன் மனதையும் திடப்படுத்திக்கொண்டேன். பிழைப்பை ஆரம்பித்தேன். அன்றிலிருந்து இன்றுவரை எத்தனையோ தினுசான மக்களைக் கண்டிருக்கிறாள் இந்தச் சுந்தரி!

★

"அம்மா யாரோ வந்திருக்கிறார்கள்" என்று வேலைக்காரி சொன்னதும், "உள்ளே வரச்சொல்" என்று வழக்கம்போலக் கட்டளையிட்டேன்.

உள்ளே வந்தார் சிவராம்... திடுக்கிட்டார், திகைத்து நின்றார். பாவம் எவ்வளவு கேவலம்! இருபத்தைந்து வயது முடியு முன்பே நாற்பத்தைந்து வயது தோற்றத்

(11-ம் பக்கம் பார்க்க)


நோத் சிலோன் டிரேடிங் கம்பெனி லிமிட்டெட்,

மோட்டார் வாகனங்கள் வேண்டுமா?
இரும்புக் கட்டிடச் சாமான் வேண்டுமா?
மின்சார மோட்டார் உபஉறுப்புக்கள் வேண்டுமா?

வேறென்ன வேண்டும்?

North Ceylon Trading Co. Ltd.
11/3, Stanly Road, JAFFNA

போன் :578. தந்தி:"யாழ்றேட்ஸ்"


## ஆகாய விமானத்தை....

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

லான சர்ச்வுட் கல்கத்தாவில் அறிஞர் கூட்டம் ஒன்றில் ஒரு சமயம் சொன்னார். அசோகன்காலத்தில் கலிங்க தேசத்தார் ஆகாய மார்க்கமாகச் சிங்களத்துக்குப் போய் வந்தார்கள் என்று சொல்வதுண்டு.

### பம்பாயில் ஆராய்ச்சி வெற்றி

அறுபது வருஷங்களுக்கு முன் பம்பாய்க்கருகே வேத சாஸ்திரங்களில் தேர்ந்த ஒரு விஞ்ஞானி வேதத்தைப் பரத்துவாஜருடைய 'வைமானிக்' சூத்திரத்துக்கு ஒட்டியபடி ஆராய்ந்தார். பாதரசம், நட்சரசம் என்ற ரசங்கள், சூரிய கிரணங்கள் இவற்றின் கலப்பிலிருந்து மின்சாரத்தைத் தயாரித்து அந்தச் சக்தியால் விமானத்தை ஓட்டத் திட்டமிட்டார். அவருடைய முயற்சியில் மகா மேதையான அவருடைய மனைவியும் ஒத்துழைத்தாள். இவருடைய இந்த முயற்சியால் ஒரு விமானம் உருவாயிற்று. அது பம்பாய் சௌபாத்திக் கடற்கரையில் 150 அடி உயரம் வரையில் பறந்து பத்திரமாக இறங்கியும் வந்தது. இந்தக் காட்சியைக் கண்டு மகிழ்ந்தவர்களுள் மகாதேவ கோவிந்தரானடேயும் ஒருவர்.

### வேருடன் அழிந்தது

நம்மவரின் துரதிர்ஷ்டவசத்தால் வெண்ணெய் திரண்டு வரும்போது தாழி உடைந்த கதையாக அந்த விமான ஆராய்ச்சி அதோடு முடிந்தது. அந்த விஞ்ஞானி எல்லா முயற்சியிலும் தமக்கு வலக் கையாய் இருந்த மனைவி இறந்ததால் ஊக்கத்தை இழந்தார். விமானத்தைப் பற்றிய ஆராய்ச்சியை விட்டுவிட்டார். சில நாட்களில் அந்த ஏக்கத்திலேயே இறந்தும் விட்டார். பிறகு அவருடைய உறவினர்கள் அவர் உருவாக்கிய விமானத்தை அந்தக் காலத்தில் பெயர் பெற்ற பிரிட்டிஷ் கம்பெனி ஒன்றுக்கு விற்றுவிட்டார்கள். அன்றோடு இந்த நாட்டில் விமான ஆராய்ச்சி வேருடன் அழிந்தது. இப்படி அறுபது ஆண்டுகளுக்கு முன் நம் நாட்டில் புனர் ஜன்மம் எடுத்து அயல் நாட்டில் வளர்ந்து, உலகப் புகழ்பெற்றன. பரத்துவாஜ சூத்திரத்தை ஆதாரமாகக்கொண்டு தோன்றிய ஆகாய விமானங்கள் காலக் கிரமத்தில் பல மாறுதலை அடைந்தாலும் அவற்றை முதலில் கண்டுபிடித்தவர்கள் இந்தியர்களே!


போன்:- 281. தந்தி:- "ஜுவல்லர்ஸ்"

எல். கே. எஸ். ஜுவல்லர்ஸ்

உத்தரவாதம் பெற்ற வைரங்கள்!

அழகு மிக்க தங்க ஆபரணங்கள் !!

யாவற்றிற்கும் சிறந்த இடம்

யாழ்ப்பாணம்

தங்கமாளிகை

★ தோற்றத்திலே கவர்ச்சி!
★ உழைப்பிலே புகழ்ச்சி!!
★ தரத்திலே உயர்ச்சி!!!

பெற்று விளங்குபவை

எல். கே. எஸ். நகைகளே.

நிகரற்ற அழகுற்ற எல். கே. எஸ். நகைகளை
என்றென்றும் அணியுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தித் திணிப்பை எதிர்த்தே தீரவேண்டும்

## மேலிடத்து வாக்குறுதியில் நம்பிக்கை வைத்தால் மோசம்

### காலம் தாழ்த்துவதும், பொறுப்பை பின் சந்ததியாருக்கு விட்டுப் போவதும் தவறு

### மாபெரும் கூட்டத்தில் ராஜாஜி உரை

1965 முதல் இந்தி மொழியை இந்தியாவின் தேசிய மொழியாக்குவது என்ற டில்லி அரசாங்கத்தின் கொள்கைக்கு தென்னாட்டிலும் இந்தியாவின் பிற (மொழி) இராச்சியங்களிலும் பலத்த எதிர்ப்பு இருந்து வருகிறது.

தென்னாட்டில், சென்னையில் நடந்த மாபொரும் கூட்டமொன்றில் சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியார் இந்தி திணிக்கப்படுவதை எதிர்த்துப் பேசியதன் ஒரு பகுதி இங்கே தரப்படுகிறது.

— ஆசிரியர்.

இந்தியாவின் ஆட்சி மொழியாக இந்தி திணிக்கப்படுவதை எதிர்ப்பது மிகவும் முக்கியமானது. எனவேதான் நான் இத்தனை கூட்டங்களையும் கூட்டிப் பிரசாரம் செய்துவருகிறேன். இந்தியைப் பற்றிய முடிவு வெறும் அபிப்பிராயத்தையொட்டிய ஒன்றாக இருந்தால் இந்திய அரசாங்கம் இதில் கொண்டிருக்கும் அபிப்பிராயத்தை நடைமுறையில் கொண்டு வந்து, ஒரு தீர்க்கமான முடிவிற்கு ஆறுதலாக வந்துகொள்ள நாம் அனுமதிக்கலாம். ஆனால் இந்தி விஷயமான முடிவு எமது (தென்னிந்திய) மக்களுக்கு மிகவும் தீங்கு விளைவிக்கும் ஒன்று. எனவே இதில் உங்கள் அக்கறையைக் கிளறிவிடுவது எனது பெரும் கடமை எனக் கருதுகிறேன். இப்பிரச்னை என்ன என்று அறிந்து கொண்டால் மாத்திரம் போதாது. இந்தி திணிக்கப்படுவதை எதிர்த்தே தீருவோம் என்ற முடிவிற்கு உங்களை இட்டுச் செல்ல வேண்டியதும் எனது கடமையெனக் கருதுகிறேன்.

### போராட வேண்டும்

பல்வேறு அபிப்பிராயங்களையும் அறிந்து கொண்டு பேச்சளவில் ஒரு முடிவிற்கு வந்துவிட்டால் மாத்திரம் போதாது. ஒரு கோழிச் சண்டையைப் பார்த்து ரசிப்பவர்களுக்கு இத்தகைய மனப்பான்மை இருப்பதைச் சகித்துக்கொள்ளலாம். ஆனால் எம்மீது இந்தி திணிக்கப் படுவது இத்தகைய ஒரு வேடிக்கைப் போட்டியல்ல. காற்பந்து போல உதைத்து உருட்டப் படுபவர்கள் நாங்கள். எனவே காலங்கடந்து விடமுன் நாம் இது பற்றி ஒரு முடிவிற்கு வரவேண்டியது ஜீவாதாரமானது. வீண் பிடிவாதமோ, குழப்ப மனப்பான்மையோ, எம்மை வழிநடத்தக் கூடாது. ஆகவே நாம் விழிப்புடனிருத்தல் வேண்டும். சரியானதைத்தான் செய்கிறோம் என்பது பற்றி நாம் நிச்சயமாயிருக்க வேண்டும். அப்படியானால் தான் நாம் எமது இலட்சியத்தை அடையலாம். இலட்சியம் சரியானதே என்று நாம் கருதினால், எமது சக்தியனைத்தையும் பயன்படுத்திப் போராட வேண்டும். கத்தி, இரத்த மற்ற ஒரு போராட்டத்தில் இது மிகவும் முக்கியமானது. இந்தி திணிக்கப்பட மாட்டாது என்று இந்தியப் பிரதமரும், ஜனாதிபதியும் பலமுறை வாக்களித்திருக்கிறார்கள்.

### ஒரு தேசம், ஒரு மொழி என்று இன்று பேசிப் பயனில்லை

தென்னிந்தியாவின் பிரதேச பாஷைகளுக்குப் பதிலாக இந்தியை பாவிக்கும்படி யாரும் கூறவில்லை. ஏன்? இது மிகவும் துணிகரமானது; யாரும் சாதிக்க முடியாத வேண்டுகோள். சுதந்திரம் கோரி நின்ற காலத்தில் பிரிட்டிஷாருக்கு நம்மை நாம் ஆளுந் திறமை உண்டென்று கூறினோம்; பல்வேறு பகுதிகளில் பல்வேறு மொழிகள் பேசப்படுவது குறித்துத் தடையாக இருக்கமாட்டாது எனக் கூறினோம். இதற்காக, ஒரு மொழி என்ற அடிப்படையில் ஒரு தேசம் என்ற கொள்கையைப் பற்றி இன்று கூறிக் கொண்டிருப்பதில் பயனில்லை. ஆகாயக் கோட்டைகளிலும் மனப்பிராந்திகளிலும் வெற்றிகளை நிலைநாட்ட முடியாது. எனவே இந்தியாவின் தேசிய மொழி இந்தி என்ற மனப்பிராந்தியை அகற்றி விடுவோம். இதிலும் பார்க்க, பல மொழிகளைப் பேசி நிலை நாட்டுவதே மிகவும் முக்கியம். நாட்டின் எல்லாப் பாகங்களிலும் பேசப்படுவதினாலேயே, ஒரு மொழியைத் தேசிய மொழி என்கிறோம். அவ்வாறில்லாவிடில் ஒரு மொழி திணிக்கப்பட்ட, வேண்டாத மொழியாகத் தானிருக்கும். பெரும்பான்மையினர் பேசும் ஒரு மொழியைத் தேசிய மொழி என்று கூறலாம். நான் மறுக்கவில்லை. ஆனால் தேசிய மொழி என்றழைக்கப்படுவதினால் மாத்திரம் ஒரு மொழி தேசிய மொழியாகி விட முடியாது.

### இந்தி திணிப்பு

இந்தி திணிக்கப்படமாட்டாது என்று வற்புறுத்திப் பலதடவைகளில் கூறப்படுவதிலிருந்தே, இதில் ஏதோ தீமையிருக்கிறது என்பது புலனாகவில்லையா? நடப்பதென்ன? மக்கள் வாக்குறுதிகளை இலேசில் நம்பிவிடுகிறார்கள். ஆனால் எமக்கு வரும் கடிதங்களில் இந்தி எழுதப்பட்டிருப்பது இந்தியின் திணிப்பில்லையா? இந்தியில் அச்சடிக்கப்பட்ட மணி ஓடர்கள் உங்களுக்குக் கிடைக்கும்பொழுது நீங்கள் சுலபமாகக் கையெழுத்திட வேண்டிய இடத்தை அறிந்து கொள்ளலாம். ஆனால் நீங்கள் காசனுப்ப வேண்டிய சந்தர்ப்பங்களில் இந்திப் பத்திரங்கள் நிரப்பப்பட வேண்டி வருவது இந்தியின் திணிப்பில்லையா? இது இன்று நடந்துகொண்டிருக்கிறதே! இது பற்றி டில்லி மந்திரிக்கு நான் எழுதியபொழுது அவர் ஏதோ சாக்குப் போக்குகள் சொல்லுகிறார். தவறு நடந்துவிட்டதென்கிறார்; அச்சு யந்திரங்கள் பழுதடைந்து விட்டன என்கிறார்; ஆங்கிலப் பத்திரங்கள் அனுப்பி வைக்கிறோம் என்கிறார். இவையெல்லாம் வலுக்கட்டாயமான திணிப்பில்லையா?

### வாக்குறுதிகளில் நம்பிக்கை வேண்டாம்

இவற்றை எதிர்க்கா விட்டால் இந்தப் புல்லுருவி வளர்ந்துகொண்டேபோய்க் கொண்டிருக்கும். வட இந்தியாவிலிருந்து எனக்குக் கடிதம் எழுதும் நண்பர்கள் —ஆங்கிலம் நன்றாக அறிந்தவர்கள்—இந்தியில் விலாசம் எழுதுகிறார்கள்! விலாசங்கள் மொழி பெயர்க்கப் படவேண்டியிருப்பதால் கடிதங்கள் எனக்குக் காலந் தாழ்ந்தே கிடைக்கின்றன. இந்த அசௌகரியம் இது ஒரு பிற மொழித் திணிப்பில்லையா? இந்தியில் விலாசங்கள் எழுதுவதினால் அம் மொழியில் எமக்குப் பயிற்சி அளிப்பதாகக் கருதுகிறார்கள்! இது போன்ற சிறு சிறு கைங்கரியங்கள் பல துறைகளிலும் நடந்து வருகின்றன; நடக்கும் [illegible]யைத் திணிப்பதென [illegible]துவிட்டால் இவை போன்றவை நடக்கவே நடக்கும். எனவேதான் வெறும் வாக்குறுதிகளில் நம்பிக்கை வைக்க வேண்டாம் என்கிறேன்; விழிப்புடனிருக்கும்படி கேட்கிறேன்.

### உத்தியோகம் கிடையாது

தபாற்சேவகன் நியமனத்திற்கு நீங்கள் மனுப்பண்ணுவதாக வைத்துக்கொள்ளுங்கள். தபால் மந்திரி கேட்பார் "இந்தி தெரியுமா உமக்கு?" என்று. நீங்கள் "இல்லை" என்றால் உங்களுக்கு உத்தியோகம் தர முடியாது என்று கூற மாட்டார். "உங்கள் மனுவை ஆலோசிக்கிறோம்" என்று தான் கூறுவார். புன்னகையுடன் கூறுவார்! ஆனால் இந்தி தெரிந்த ஒருவர் தெரிந்தெடுக்கப்படுவார்; உங்களுக்கு வேலை கிடையாது. இந்த நிலைமை கீழ்ப்படி நியமனங்களில் மாத்திரம்தான் என்று நினைக்க வேண்டாம் எந்த உயர் பதவியிலும் எந்த மந்திரியின் கீழும் இதுதான் நிலைமை. ஒவ்வொரு இந்திய இராச்சியத்திலும் மத்திய அரசாங்க அலுவலகங்களிருக்கின்றன; மத்திய அரசாங்க ஊழியர்களும் ஏராளமானோர் இருக்கின்றார்கள். சென்னை இராச்சியத்திலும் இருக்கிறார்கள்.

### எதிர்த்தே தீர வேண்டும்

இன்ஷூரன்ஸ் பகுதியை எடுத்துக்கொள்வோம். இன்றுவரை இன்ஷூரன்ஸ் கம்பெனிகளில் வேலை கிடைத்தது போல இனி மேல் சென்னை இராச்சியத்தில் கிடையாது. ஹிந்தி தெரியுமா என்று கேட்பார்கள். இல்லை என்றால் இந்தி தெரிந்தவர்களைத்தான் எடுத்துக்கொள்வார்கள். உங்கள் தராதரம் காணாது. ஏனெனில் உங்களுக்கு இந்தி தெரியாது! பதவி விரும்பினால் இந்தி கற்றுக் கொள்ள வேண்டும். இது விதமான திணிப்பு வழிகள ஆயிரமாயிரம் கையாளப்படும்; ஆயிரம் ஆயிரம் வழிகளில் தீமைகள் வரும். இந்நிலையில் நாம் செய்யக் கூடியது என்ன? நாம் இவையனைத்தையும் எதிர்த்தேயாக வேண்டும்; எம்மால் எதிர்க்க முடியும். எனவே தான் நான் இன்று உங்கள் முன்னிலையில் பேசிக் கொண்டு நிற்கிறேன்.

### நம்மவர் சிலரின் தவறான கருத்து

1970-ல் ஒரு கஷ்டம் ஏற்படப் போகிறதென்றால் நாங்கள் அதில் கரிசனை எடுக்கமாட்டோம். அதற்குக் காலம் அதிகமிருக்கிறது என்று வாழா விருப்போம். 1950ல் இதுதான் நடந்தது. 1965ல் இந்தி அரசியல்மொழியாகுமென அன்று அறிவித்தார்கள். யாரும் வாய்திறக்கவில்லை. இன்று 1965 நெருங்கிவிட்டது. எனவே [illegible] ஆபத்தை இன்னும் சிறிது தள்ளிப் போடும்படி பாராளுமன்றத்தில் கேட்கிறார்கள். 1980, 85வரை தள்ளி வைக்கும்படி கேட்கிறார்கள். ஒரு வேடிக்கை. 1980, 85-ல் உலகம் முடிவடைந்து விடும் என இவர்கள் நினைப்பது தான் இதன் காரணம். தங்கள் ஆட்டம் பாட்டம் முடிவடையும் காலத்தில் உலகமும் கவிழ்ந்து விடுமென இவர்கள் நினைக்கிறார்கள்! எதிர் காலத்தைப் பற்றியோ எமது குழந்தை குட்டிகளின் நல்வாழ்வு பற்றியோ இவர்கள் கவலை கொள்ள வில்லை. தமது சீவிய காலத்திற்கும் அப்பாலுள்ள எதிர்காலத்தில் இவர்களுக்கு அக்கறையில்லை. அக்காலம் பற்றிய பிரச்னைகளை அக் காலத்தில் வரும் எமது பேரப் பிள்ளைகளின் தோள்மீது சுமத்தி விட்டுச் சுக வாழ்வை எதிர் பார்க்கிறார்கள் இன்று. இது தான் பெருந் தவறு. நாட்டின் அபிவிருத்திக்கெனத் திட்டம் போடுகிறோம். நீர்ப்பாசனத்திற்கென கோடிக் கணக்கில் செலவழித்து அணைக் கட்டுக்கள் எழுப்புகிறோம். யாருக்காக? இன்றைய இந்தியாவிற்கு இவற்றால் பயனில்லை நாளைய இந்தியாவை இன்று நிர்மாணிக்கிறோம். எனவே மொழிப் பிரச்னையைத் தீர்க்கவும் இன்று நாம் முயற்சிக்க வேண்டும். இதற்காகத்தான் இவ் விஷயத்தில் ஒரு காலவரை குறிப்பிடுவதை எதிர்க்கிறேன்.

இன்றும் காலவரை குறிப்பிட்டால், ஆறின கஞ்சி

(12-ம் பக்கம் பார்க்க)

### சுந்தரி விபசாரி?

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

தைப் பெறும் சக்தியைக் கொடுத்திருந்தது கவலை.

"அத்தான்" என்று அன்று அன்போடு அழைத்த நான் இன்று என்ன சொல்லி அழைப்பது? எந்த வாயால் அழைப்பது?

மௌனமாகக் கண்ணீர் உகுத்தபடி நின்றுகொண்டிருந்தேன், சிலைமுன்னே சிந்தனையற்று நிற்கும்பக்தனைப் போல. திரும்பி நடந்து தெருவிலிறங்கிப் போய்க் கொண்டிருந்தார் அவர்—சிவராம்.

அடுத்தகணம் சகவாச தோஷத்தால் அவர்மீது ஏற்பட்ட பந்தபாசம் போய் விட்டது. ஆத்திரம் மேலோங்கியது. அன்று நான் மனமொத்துச் செய்யாத எந்தத் தவறுக்காக என்னை அடித்தாரோ—எந்தத் தவறுக்காக என்னை 'விபசாரி' என்று தீர விசாரியாது அவசரப்பட்டு பழி சுமத்திவிட்டு யோக்கியனாகச் சென்றாரோ, அந்தத் தவறையே அவரும் செய்ய ஆரம்பித்துவிட்டார். இனி அவரிடமே கேட்கலாமென்றால் அருகில் ஆள் இல்லை.

யாரைக் கேட்டாற்றான் என்ன. ஆண் வர்க்கத்தில் அவர் மட்டுந்தான் அப்படியா? பெண்ணாய்ப் பிறந்த நாம் செய்வதற்குப் பெயர் விபசாரம்! ஆண்கள் செய்வதற்குப் பெயர்......? சமூகம் அதற்குப் பதில் சொல்லக் காணோம். ஆனால் அதல்ல இங்கு முக்கியம். எனக்கும் என்னைப்போன்றோருக்கும் இந்நிலை வரக் காரணம் யார் என்பதுதான்?

### 'கெய்ஸர்'...


(3-ம் பக்கத் தொடர்ச்சி)

நீராவி தண்ணீரைக் கொதிக்க வைக்கிறது. இந்த இடை நேரத்தில் கெய்ஸரில் ஒரு விதமான வேலையையும் நாம் பார்க்க முடிவதில்லை. நீராவியின் அழுத்தம் அதிகமானவுடன் நீர் வெளிவருகிறது நீராவியுடன். இவ்வாறு கெய்ஸர் விட்டு விட்டு வேலை செய்கிறது.

மேலே சொன்ன முறைகளைப் பரிசோதனைச் சாலையில் செய்து பாக்கும் போது சரியான பதில் கிடைக்கிறது. எனவே இதுவே கெய்ஸர் இயங்கும் முறை என்று நாம் ஊகிக்க முடிகிறது.


எவரி 5 அந்தர்

மேடைத் திராசு



எமது ஸ்தாபனத்தில் கிடைக்கும்.

கே.என். அப்துல்காதர் ராவுத்தர் & கம்பெனி
312. ஸ்கின்னர்ஸ் ரோடு தெற்கு, கொழும்பு-10


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

படவிமர்சனம்:

# ராணி லலிதாங்கி

ராணி லலிதாங்கி ஒரு வீராங்கனை. பெண்களே அரசாங்கப் பொறுப்பை நிர்வகிக்கும் சித்திரபுரியின் அரசி. சித்திரபுரியும் மலைநாடும் அழகாபுரியின் சிற்றரசுகள். அழகாபுரி மன்னர் அம்பலவாணரின் மைந்தன் இளவரசர் அழகேசன்—கலைஞன் — சொற்போர், வாட் போர் வீரன் அழகேசருக்கும், அழகாபுரியின் மந்திரி மகளுக்கும் ஏற்கனவே காதலுண்டு. ஆனால் சந்தேகத்தின் காரணமாக மாயாவின் உறவை வெறுத்து அழகேசர் சாமியாராகிறார். ஆனல் அரண்மனையில் ஓர் வீரப்போட்டி நடைபெறுகிறது. மலைநாட்டரசனுக்கும், இளவரசர் அழகேசருக்கும் இடையில் நடைபெற்ற போட்டியில் அழகேசர் ஜெயித்துவிடுகிறார். இதனால் ராணி லலிதாங்கிக்கு அழகேசர் மேல் காதல் ஏற்படுகிறது. பெண்களையே வெறுத்து வாழும் அழகேசரை ஒருவாறு தன் காதல் வலையில் சிக்கவைத்து விடுகிறாள். பின்னர் இருவரும் மணம் செய்துகொள்கிறார்கள். இது கதை.

அழகேசராக சிவாஜி கணேசன் நடித்துள்ளார். பின் கேட்கவேண்டுமா?

பெண்களையே வெறுத்து வாழும் அழகேசரை அவரது குரு அழகேசருக்குப் பெண்ணுறவு ஏற்படுத்து முகமாகக் கலைப் போட்டியொன்று அமைக்கிறார். கலைப் போட்டியில் ராணி லலிதாங்கி பங்குபற்றி, பாடி, ஆடும்போது, இறைவன் மேலுள்ள பக்தியாலும், லலிதாங்கியின் பாட்டிற் பரவசமடைந்ததினாலும் உணர்ச்சிவசப்பட்டு சிவாஜி ஆடுகிறார். அபாரம்!

ராணி லலிதாங்கியாக பானுமதி நடித்துள்ளார். மூன்று பாட்டுப் பாடுகிறார். ரசிகர்களை மெய்மறக்கச் செய்கின்றன அவை. மாயாவாகவும், அழகேசரின்முதல் காதலியாகவும் நடிக்கும் ராஜசுலோசன நடிப்பில் பானுமதியை மிஞ்சிவிடுகிறார். வில்லனாகவும், மலைநாட்டரசனாகவும் பி. எஸ். வீரப்பா நடித்துள்ளார். புதிதாக ஒன்றும் அவரைப் பற்றிக் கூறுவதற்கில்லை. வழமையான அவரது தனிப்பாணி நடிப்பு ராணி லலிதாங்கியிலும் உண்டு.

கே. ஏ. தங்கவேலு, முத்துலட்சுமி, எம். சரோஜா ஆகியோர் ஹாஸ்ய விருந்தளிக்கும் பொறுப்பை எற்றுச் சரிவரச் செய்து முடித்திருக்கிறார்கள்.

கதாசிரியர் கவிஞர் தஞ்சை ராமையாதாஸ். பாடல்களும் அவருடையவைதான். குறைகூறுவதற்கில்லை.

மொத்தத்தில் சிறந்த பொழுதுபோக்குப் படம். சிவாஜியின் நடனத்துக்காக அவசியம் பார்க்கவேண்டியது. தற்போது கொழும்பு செல்லமஹாலில் காட்டப்படுகிறது.

—சபா.

## சிவராத்திரிக்கு விடுதலை வேண்டும்

இதுகாலவரை ஒரு பொது விடுமுறை நாளாயிருந்து வந்த மகா சிவராத்திரி தினம் எதிர்வரும் ஆண்டின் பொது விடுமுறை நாட்பட்டியலில் இடம் பெருதது குறித்து வருத்தம் தெரிவித்தும், அது மீண்டும் வழமைபோல் பொது விடுமுறை நாட் பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்படுவது வேண்டற்பாலது என்று வற்புறுத்தியும், கொழும்பு விவேகானந்த சபைத் தலைவரும், திருக்கேதீஸ்வர ஆலயத் திருப்பணி முக்கிய இயக்குநருமான திரு. எஸ். சிவசுப்பிரமணியம் பத்திரிகைகளுக்கு ஓர் செய்தியறிக்கை அனுப்பியிருக்கிறார்.

# மக்கள் குரல்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

திரிகையில் ஒப்புக்கொண்டுள்ளீர்கள்.

ம. சிவநேசராசா,
தலைவர்
மட்டக்களப்பு
சமசமாஜ வாலிபர்
சங்கம்

9-11-57

குறிப்பு:-

சுதந்திரன் நிருபர் 'தேன்மொழி' போட்ட தொப்பிகளில் ஒன்று தம்முடையதலைக்குப்பொருந்திவிட்டதாக இக்கடிதர் கூறுகிறார். யார் யாருக்கோ தயாரித்த தொப்பிகள் இவர் தலைக்கும் பொருந்திவிட்டமைக்கு நாம் என்ன செய்ய முடியும்? தொப்பியைப் பழிகூறுவதா தலையைப் பழிகூறுவதா என்பதை உள்ளூர் நிலைமையை அறிந்த மட்டக்களப்புப் பொதுமக்கள் தான் தீர்மானிக்க வேண்டும்.

—ஆசிரியர்

## 'நாவலர் மன்றம்' தமிழில் இல்லை

சென்ற வார சுதந்திரனின் தலையங்கத்தைப் படித்தேன். எப்பொழுதும் எப்பொருளுக்கும் முன் எச்சரிக்கை கொடுக்கும் தாங்கள் இப்பொருளில் கால தாமதமாகியது ஏனோ?

தங்களுடைய கண்டனத்துக்கு ஆளாகியிருப்பது, தமிழருக்காக—தமிழ்ப் பண்பாட்டுக்காக—தமிழர்களின் கல்வியின் முன்னேற்றத்துக்காக தமிழ் பல்கலைக் கழக இயக்கத்தால் நடத்தப்படும் நாவலர் மன்றமாகும். ஏனென்றால் தமிழ் மாணவர்கள் பயிலும் இத்தமிழ்ப் பல்கலைக் கழகத்திலே ஆங்கிலத்தில் மட்டும்தான் "நாவலர் மன்றம்" என்று இருக்கிறது. தமிழ் வளர்ச்சிக்காக எழுப்பப்பட்ட இப்பல்கலைக் கழகம் தொடக்கத்திலேயே தமிழைப் புறக்கணிப்பதையிட்டு மனம் வருந்துகிறோம். இதுபற்றி நாவலர் மன்றத்தின் நிருவாகிகள் இனி மேலாவது தமிழில் எழுத முன்வருவார்களா?

ச. மகேந்திரன்,
கொழும்பு
5-11-57

## இலங்கையைப்பற்றி "தினத்தந்தி" பத்திரிகை

"இலங்கை மிகவும் சிறிய நாடு! அங்கே 80 லட்சம் பேர் தான் இருக்கிறார்கள்! அப்படியிருந்தும் அங்கே ஏராளமான தொழிற்சாலைகள் கட்டப்பட்டுள்ளன. இதனால் இலங்கை நாடு சீரும் சிறப்புமாக செல்வம் கொழித்து விளங்குகிறது" என மிக அழகாக சென்னையிலிருந்து வெளிவரும் 'தினத்தந்தி' என்ற தினசரிப் பத்திரிகை 6-11-57ல் ஓர் தலையங்கம் தீட்டியிருக்கிறது.

நாட்டின் உண்மை நிலையைக் கூர்ந்து அவதானியாது தினத்தந்தி சித்தரிப்பதுபோல் இலங்கையிருந்தால் பாக்கியம் பெற்ற உழைப்பாளிகள் நிறைந்த-நேர்மையான அரசாங்கத்தைக்கொண்ட ஓர் பொன்னாடாகும் இலங்கை என்பது திண்ணம்.

ஆனல் நிலைபரமோ நேர் விரோதமாக அமைந்திருக்கிறது. இதை ஏனோ தினத்தந்தி அறியவில்லை.

[illegible]
கொழும்பு
8-11-57

# நாடு நலம்பெற கைத்தொழில்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

புடைவையில் ¼ பங்கை நாம் பெற முடியும். கைத்தறியைவிட மின்சக்தித் தறிகளினால் அதிக வருவாயைப் பெற வசதியிருக்கிறது. மின்சக்தித் தறிகளினால் பல வர்ணப் புடைவைகளையும் இலகுவில் தயாரிக்க முடியும்.

### பருத்தி உற்பத்தி

அடுத்ததாக பருத்தியை இலங்கையில் உற்பத்தி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். பண்டு ஈழத் தமிழகம் பருத்துக்குப் பேர்போன இடமாக விளங்கியிருக்கின்றது. ஊர்காவற்றுறையிலுள்ள பருத்தியடைப்பென்ற பெயர் பருத்திச் செய்கை பெருகியிருந்ததை நமக்கெடுத்துக் காட்டுகிறது. பருத்தித்துறை பருத்தி ஏற்றுமதித் துறைமுகமாக இருந்ததை ஞாபகப்படுத்துகிறது.

### கைத்தறி 'டிப்போக்கள்'

ஒரு ஏக்கருக்கு 250 றுத்தல் பஞ்சு உற்பத்தியாகுமானல் 20,000 ஏக்கர் நிலத்திலாயினும் வருடாவருடம் பருத்தி செய்கை பண்ணப்பட வேண்டும். வெவ்வேறு காலத்தில் ஐந்து வருடத்திற்கு மாற்றி மாற்றிப் பருத்திச் செய்கையை விருத்தி செய்து வந்தால் 100,000 ஏக்கர் செய்கை ஓரளவுக்குப் போதுமானதாகும். இதனல் வருடத்தில் 50 லட்சம் றுத்தல் பஞ்சு நமக்குக் கிடைக்கும். சிங்கப்பூர்—ஏதன் முதலிய நாடுகளில் விற்பனை அதிகாரிகளை நியமித்திருக்கிறார்கள். சிங்கப்பூர்-பாங்காக்-ஏதன் நாடுகளில் கைத்தறி டிப்போக்கள் உள. நமது நாட்டிலும் இருக்கின்றன. பருத்தி நூலும் கிடைத்து நெசவாளர் வாழ்க்கைத்தரமும் உயர்வதனலேயே இத்தகைய டிப்போக்களால் பிரயோசனமுண்டு.

### நாடு நலமடைய

ஆடவரும் மகளிரும் 'கவர்' நாகரிகத்தை நிர்மூலமாக்கி—'பாசனே' குவித்தொண்டிப் புதைத்து உள்நாட்டுக் கைத்தறித் துணிகளை எப்பொழுது விரும்பி அணிகிறார்களோ அன்றுதான் நெசவாளர் வாழ்க்கை வளம் பெறும். நாடு நலமடைய முடியும்.

# இந்தித் திணிப்பை....

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

பழங் கஞ்சி ஆகிவிடும். நாமும் எம்மை ஆயத்தம் செய்துகொள்ளும் காலத்திற்கு எல்லை குறித்துவிட்டுச் சோம்பலாயிருந்து விடுவோம். தவணை முடிந்ததும், ஆரம்பத்திலிருந்தது போலவே எதற்கும் நாம் ஆயத்தமற்றவர்களாகவே இருப்பதைக் காண்போம். இந்தக் கஷ்டம் ஒருபுறமிருக்க, விஷயத்தைப் பின் போடுவது தர்மமற்றது. ஏனெனில் எமது சௌகரியத்தை மாத்திரம் நாம் கவனித்துவிட்டுத் தீமையனைத்தையும் எதிர் காலச் சந்ததியாரின் தலைவர்களில் சுமத்திவிட்டுப் பார்க்கிறோம். இது முறையல்ல.

(தொடரும்)

# அகில இலங்கைத் தமிழ்....

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கோ. 12: தோட்டப் பாடசாலை ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் உதவி நன்கொடைப் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதே வசதிகள் வழங்கப்பட வேண்டும்.

கோ. 13: தோட்டப் பாடசாலை மாணவர்கள் வேறு பாடசாலைகளுக்குப் போக விரும்பினல் ஜனவரியில் போய்ச் சேர்வதற்கு வசதியாக, தோட்டப் பாடசாலைகளும் தத்தம் வகுப்பேற்றப் பரீட்சைகளை டிசம்பர் மாதத்தில் நடத்த வேண்டுமென அரசாங்கம் சட்டம் விதிக்க வேண்டும்.

க. அ. ப: [மேற்கூறிய மூன்று கோரிக்கைகளுக்கும் கல்வி அமைச்சர் ஒன்றாகவே பதிலிறுத்தார்] இது சம்பந்தமாக நான் உங்களுடன் எதுவும் பேச முடியாதவனாயிருக்கிறேன். ஏனெனில் அகில இலங்கைத் தோட்டப் பாடசாலை ஆசிரியர் சங்கத் தலைவர் திரு எம். மோஸஸ் எனக்கு ஒரு அவசரப் பதிவுத் தபாலை அனுப்பியுள்ளார். அதில் நான் உங்களுடன் செய்யும் எந்த தீர்மானமும் தமது சங்கத்தைக் கட்டுப்படுத்தாதென்று கூறியுள்ளார். எனினும் நீங்கள் வற்புறுத்துவதால் இவ்விஷயங்கள் கவனிக்கப்படும் என்று மட்டும் சொல்லுகிறேன்.

### விஞ்ஞான ஆசிரியர் வேண்டும்

கோ. 14: எங்கள் சங்கத்தின் தொழிற் சங்க சார்பான நிகழ்ச்சிகளையும் கூட்டங்களையும் நடத்துவதற்கு அரசாங்கப் பாடசாலைக் கட்டடங்களை அரசாங்கம் இனமாக கொடுத்துதவ வேண்டும்.

க. அ. ப: இவ்விஷயத்தை நான் ஆலோசித்துப் பின்னல் பதில் தருகிறேன்.

கோ. 15: அரசாங்க பாடசாலைகளில் அமுலில் இருந்து வரும் வழக்கப்பிரகாரம் சராசரியை அனுசரிக்காமல் பொது விஞ்ஞான ஆசிரியர்களை நியமிக்க உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கும் அனுமதி வழங்க வேண்டும்.

க. அ. ப: இந்த கோரிக்கை நிதியோடு தொடர்புடையது. எனவே நான் மட்டும் பதில் சொல்ல முடியாது. திறைசேரியோடு கலந்து ஆலோசிக்கப்பட வேண்டியது.

### நடராசா சமாச்சாரம்

கோ. 16: கல்வி இலாகாவின் விசாரணையில் திரு வி. நடராசா என்ற ஆசிரியர் குற்றவாளி அல்லர் என்று காணப்பட்டதால், அவ்வாசிரியரைத் திரும்பவும் சுன்னுகம் மயிலணி சைவ வித்தியாசாலையில் நியமிக்கும்படி கல்வி இலாகா சம்பந்தப்பட்ட முகாமைக்காரரை வற்புறுத்த வேண்டும். வேலையின்றி அவர் இருந்த காலத்துக்குரிய சம்பளத்தைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

க. அ. ப: இவ்வாசிரியர் வேறு பாடசாலைக்குத் தாமாகவே போயிராவிட்டால் அப்படித்தான் செய்திருப்பேன். முகாமைக்காரர் மறுத்திருந்தால் பாடசாலையையே கைப்பற்றியிருப்பேன். ஆனல் அந்த ஆசிரியரே வேறு பாடசாலையில் போய்ச் சேர்ந்து தமது புதிய நியமனத்தை அங்கீகரிக்கும்படி கேட்டதால் நான் வேறெதுவும் செய்ய முடியவில்லை.

அந்த ஆசிரியர் வேலையின்றியிருந்த காலத்துக்குரிய சம்பளத்தை பெறுவதற்கு அவர் சிவில் வழக்குத் தொடரலாம்.

### மரணத்துக்கு வருட சம்பளம்

கோ. 17: சேவையில் இருக்கும்போது ஒரு ஆசிரியர் மரணமடைய நேர்ந்தால் அவருடைய குடும்பத்தினருக்கு ஒரு வருடச் சம்பளத்தை உபகாரப் பணமாக வழங்க வேண்டும். இப்படி ஒரு விதி அரசாங்க சேவையில் உள்ள சகலருக்கும் இருப்பதாகத் தெரிகிறது.

க. அ. ப: அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கு அப்படியொரு சலுகை இருப்பதாகத் தெரியவில்லை. ஆராய்ந்து பார்த்து ஆவன செய்கிறேன்.

### சம்பள கமிஷனில் சுயபாஷை பிரதிநிதி

கோ. 18: சுயபாஷா ஆசிரியர்களின் சம்பள விகிதங்களை திருத்தியமைப்பதற்காக ஒரு சம்பள நிர்ணயக் கமிஷனை உடனடியாக அமைக்க வேண்டும். சுயபாஷா ஆசிரியர்களையும் ஆங்கில ஆசிரியர்களையும் சமதரத்தில்வைப்பதற்கான சட்டங்களை ஆக்க வேண்டும். சம்பள நிர்ணயக் கமிஷனில் எங்கள் சங்கத்தின் பிரதிநிதியொருவரும் அங்கம் வகிக்க வேண்டும்.

க. அ. ப: இக்கோரிக்கையை ஏற்றுக்கொள்ளுகிறேன். சுயபாஷா ஆசிரியர்களின் சம்பளத்தைத் திருத்தியமைப்பதற்காக ஒரு சம்பள நிர்ணயக் கமிஷன் நியமிக்கப்படும்போது அதில் சுயபாஷா ஆசிரியர் சங்கத்தைச் சேர்ந்த ஒருவருக்கும் பிரதிநிதித்துவம் அளிக்கும்படி நிதியமைச்சருக்கு சிபார்சு செய்கிறேன்.

## "அ. இ. பகுத்தறிவு இயக்கமும் மாநகர சபை தேர்தலும்"

அணிமையில் நடைபெறவிருக்கும் யாழ்ப்பாண மாநகர சபைத் தேர்தல் சம்பந்தமாக அகில இலங்கை பகுத்தறிவு இயக்கத்தின் யாழ்ப்பாணக் கிளை பின் வரும் அறிக்கையை வெளியிட்டுள்ளது!

அரசியல் சார்பற்ற எமது இக்கத்தில் உறுப்பினராகவுள்ள தோழர்கள் பலருக்கு அணிமையில் நடைபெறவிருக்கும் மாநகரசபைத் தேர்தலில் தமது நிலைஎன்ன என்பதைத் திட்டவட்டமாக வரையறுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதன் காரணத்தினல் இவ்வறிக்கையை வெளியிட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

எமது இயக்கம் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எந்த ஒரு அரசியல் கட்சியுடனும் சம்பந்தப்படாத காரணத்தினலும் எந்த ஒரு அரசியல் கட்சியினதும் பிரசார பீடமாகவோ அல்லது குரலாகவோ அன்றேல் கையாயுதமாகவோ இல்லாத படியாலும் சமூகச் சீர்திருத்தக் கருத்தொன்றினைப் பரப்புவதையே முக்கிய குறிக்கோளாகக் கொண்டுள்ள படியாலும் எதிர்வரும் மாநகரசபைத் தேர்தலில் எவரொருவரையும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஆதரிக்க மாட்டாது.

வாக்குரிமையுடையவர்கள் தங்கள் வாக்கினை அவசியம் பயன்படுத்த வேண்டும் என்ற ஜனநாயகத் தத்துவத்தில் நம்பிக்கையுடைய எமது இயக்கம், இயக்க உறுப்பினர்களில் வாக்குரிமையுடையவர்கள் அதனைத் தங்களுக்கு விரும்பியவருக்கு அளிப்பதைத் தடை செய்யாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்து எழுத்தாளர்கள் இந்தியப் பத்திரிகைகளில் இடம் பெருதது ஏன்?

## விருந்துபசாரக் கூட்டத்தில் கவிஞர் சாரணபாஸ்கரன் விளக்கம்

"எழுத்துவன்மை இருந்தும் துரதிர்ஷ்டவசமாகப் பிரபலமடையாத எழுத்தாளர்களுக்கு ஓர் செய்தி! உங்கள் எழுத்தோவியங்கள் தமிழ் நாட்டுப் பத்திரிகைகளில் இடம்பெறத் தவறுகின்றன என்ருல் அது உங்கள் குற்றமல்ல; உங்கள் படைப்புக்கள் பிரசுரிப்பதற்கு தகுதியற்றவை என்றும் அர்த்தமல்ல.

தமிழ் நாட்டுப் பத்திரிகையாளர்கள் பிரபலமடையாத எழுத்தாளர்களின் படைப்புக்களைச் சந்தேகக் கண்கொண்டே பார்க்கிருர்கள். பிரஸ்தாப படைப்புக்கள் பிரசுரிப்பதற்கான தகுதியற்றவை என்று கண்டால் அவற்றைத் தள்ளிவிடுகிருர்கள். தகுதியுடையன வென்று கண்டாலும்கூடத் தள்ளிவிடுகிருர்கள். பிரபலமடையாத எழுத்தாளருக்கு இத்தகைய நல்ல படைப்பு உருவாக்க எப்படித் தகுதி வந்தது? அவர் கண்டிப்பாக எழுத்து—கருத்து திருடனுக இருக்கவேண்டும் என்று முடிவு கட்டிவிடுகிருர்கள்.

இதுதான் பல பிரபலமடையாத எழுத்தாளர்களின் படைப்புக்கள் தமிழ் நாட்டுப் பத்திரிகைகளில் இடம்பெருது போவதற்கு முக்கிய காரணம்."

இவ்வாறு அணிமையில் இலங்கை வந்து சென்ற தமிழ் நாட்டுக் கவிஞர் சாரணபாஸ்கரன் கொழும்பு கிறீன்லண்ட்ஸ் ஹோட்டலில் நடந்த தேனீர் விருந்துபசாரமொன்றின் போது பேசுகையில் குறிப்பிட்டார்.

இலங்கையில் உள்ள எழுத்தாளர்களின் எழுத்தோவியங்கள் தமிழ் நாட்டுப் பத்திரிகைகளில் இடம்பெறுவது அபூர்வம் என்றும், உதாரணமாக சமீபத்தில் வெளிவந்த தீபாவளி மலர்களை எடுத்துப் பார்த்தால் அவற்றில் 'கல்கி' மலரில் மட்டும் பண்டிதர் கா.பொ. இரத்தினத்தின் கட்டுரை ஒன்றுதான் பிரசுரிக்கப்பட்டிருக்கிறதென்றும் வருத்தம் தெரிவித்து விருந்துபசாரத்தின்போது ஒருவர் பேசியதற்கு பதிலளிக்குமுகமாகவே கவிஞர் சாரணபாஸ்கரன் மேற்கண்டவாறு கூறிஞர்.

கவிஞர் சாரணபாஸ்கரனையும் அவரோடு தமிழ் நாட்டிலிருந்துவந்த எழுத்தாளர் ஸ்ரீரங்கம் நரசிம்மனையும் கௌரவிக்குமுகமாக இலங்கை வானெலி தமிழ் நிகழ்ச்சி அமைப்பாளர் திரு கே. எஸ். நடராஜா கடந்த 9-ந் திகதி சனிக்கிழமை கிறீன்லண்ட்ஸ் ஹோட்டலில் தேனீர் விருந்துபசாரம் நடத்திஞர். அதில் இலங்கையிலுள்ள பல பிரபல எழுத்தாளர்களும் கலந்துகொண்டார்கள்.

திரு. கே. எஸ். நடராஜா தமிழ் நாட்டு எழுத்தாளரையும், கவிஞரையும் அவர்களோடு சேர்ந்து வந்திருந்த திரு. வெங்கட்டவதரன், இசைக் கலைஞர் கிருஷ்ணமூர்த்திராவ் ஆகியோரையும் கூடியிருந்த எழுத்தாளர்களுக்கு அறிமுகப்படுத்திவைத்தார்.

விருந்தின்போது திரு நரசிம்மன் தம் குழுவினருக்கு அளிக்கப்பட்ட கௌரவத்திற்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் திருச்சியில் தாம் சார்ந்துள்ள எழுத்தாளர் சங்கம், இப்படியே ஈழத்திலிருந்து தமிழ் நாடு செல்லும் இவ்வூர் எழுத்தாளர்களுக்கு அங்கு விருந்துபசாரம் நடத்திக் கௌரவிக்கக் காத்திருப்பதாகவும், அதற்கு ஈழத்து எழுத்தாளர்கள் சந்தர்ப்பம் அளிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். திரு. நரசிம்மன் தொடர்ந்து பேசுகையில் சிறு கதையோ, நாவலோ தனித் தமிழில் எழுதுவதுதான் சிறப்பு என்று கொள்வது தப்பு என்றும் வேண்டிய இடங்களில் பொருத்தமான பிறமொழிச் சொற்களை உபயோகப்படுத்திக் கொள்வதேமேல் என்றும் சொல்லி அதற்குக் காலஞ்சென்ற பேராசிரியர் கல்கியை உதாரணமாகக் காட்டிஞர்.

திரு. கே. எஸ். நடராஜாவின் சேவையைப் பாராட்டியும் விருந்தினர்களின் எழுத்துவன்மை, கவித் திறமைகளைப் புகழ்ந்தும் பண்டிதர் கா. பொ. இரத்தினம் (கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர்) முகாந்திரம் குலசபாநாதன் (தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவர்) திரு. எஸ். டி. சிவநாயகம் (சுதந்திரன் ஆசிரியர்) உட்படப் பலர் பேசிஞர்கள்.

விருந்துபசாரம் முடிந்த பின் அதில் கலந்துகொண்ட ஒரு முக்கியஸ்தரை, "எப்படி விருந்துபசாரம்?" என்று கேட்டபோது அவர், 'படக்'கென்று சொன்ன பதில் இதுதான்:

"வட துருவமும் தென் துருவமும் ஒன்று சேர்வதானல் கேட்கவா வேண்டும்? பிரமாதம்! நடராஜன் எல்லோருக்கும் நல்லவர் — நடு மனிதர். அதில் சந்தேகமேயில்லை."

இந்தப் புதிருக்கு விளக்கம் கிடைக்க அதிகநேரம் பிடித்தது. போட்டிப் பிரமுகர்கள் பலரும் திரு. நடராஜனின் வேண்டுதலின் பேரில் ஒன்று கூடி விருந்துண்டதையே அவர் குறிப்பிட்டார் என்பது பின்னல்தான் தெரிந்தது.

## விதி

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

இயலவில்லை. காரணம், மதியை விட விதி வலிது. அதை தனது மந்திரிகளால் வெல்ல முடியாமற் போய்விட்டது.

மேலும் கம்பர் காவியத்தில் 'விதியின் பிழை நீ இதற்கென்கொல் வெகுண்டதென்' என இலக்குமணனுக்கு உபதேசிக்கின்ருர் இராமபிரான். ஆதலால் விதியை மாற்ற அதே விதியால் இயலுமே தவிர பிறிதொரு சக்தியால் இயலாது. ஆயினும்,

"தெய்வத்தான் ஆகாது
எனினும் முயற்சிதன்
மெய் வருத்தக் கூலி
தரும்"

"ஊழையும் உப்பக்கம்
காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்று பவர்"

என்ற வள்ளுவரின், வழி நின்ருல் ஒரளவாவது விதியை முறியடிக்கலாம் என்பது உண்மை.

ஆதலால் இம் முயற்சிகளை தவிர்ந்தார், நலிவுற்ருேர் யாவரும் கருத்தில்கொண்டு, நல் வாழ்வு வாழ வழி வகுத்துக்கொள்வார்களாக!

—இரா—சந்திரா,
இரத்தினபுரி.

## நினைத்தபடி....

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

டர்களும், ஒரு சமசமாஜ செனட்டரும் முதல் மூன்று ஸ்தானங்களையும் பெற, தமிழரசு செனட்டருக்கு நான்காவது ஸ்தானம் கிடைத்தது.

அரசாங்க செனட்டர் ஒருவர் தமிழரசுச் செனட்டரை விட குறைந்த அம்ச வாக்குகள் பெற்றதனல் அவர் தமிழரசு செனட்டருக்கும் பிறகு ஐந்தாவது ஸ்தானத்தைப் பெற்ருர்.

பாவம், கொம்யூனிஸ்டு அபேட்சகர் திரு. எம். ஸி. சுப்பிரமணியத்துக்கு முதல் பிரீதி வாக்குகளே போதுமான அளவு கிடைக்காததால், அவருக்குக் கிடைத்த இரண்டாவது பிரீதி வாக்குகள் எண்ணப்படவேயில்லை. முதல் பிரீதி வாக்குகளே அவருக்கு 6 வாக்குகள்தான் கிடைத்தன. ஆறு எங்கே பதினறு எங்கே? இவ்வளவு பாரதூரமான படுதோல்வியை அந்த நல்ல மனிதர் சுப்பிரமணியம் கொம்யூனிஸ்டு மண் குதிரைகளை நம்பியதால் அடையவேண்டியதாயிற்று.

இந்த இலட்சணத்தில்தான், செனட்டர் தேர்தலில் முகத்தில் கரியைப்பூசிக்கொண்ட கொம்யூனிஸ்டுகள் சொல்கிருர்கள் 'திரு எம். ஸி. சுப்பிரமணியத்துக்கு தேர்தலில் கிடைத்த வாக்குகளை, சுதந்திரன் இருட்டடிப்புச் செய்துவிட்டது' என்று. துரதிர்ஷ்டவசமாக திரு சுப்பிரமணியத்தின் தோல்வி .36 வாக்குகளால்தான் ஏற்பட்டதாம்! கொம்யூனிஸ்டு கட்சியின் 3 வாக்குகளும், சுயேச்சைகளின் 3 வாக்குகளும், அத்தோடு அரசாங்கக் கட்சி உறுதியளித்த வாக்குகளும் சேர்ந்து திரு சுப்பிரமணியம் வெற்றியீட்டுவதற்குப் போதுமானவையாய் இருந்தனவாம். அன்று 3 எம். பிக்கள் பாராளுமன்றத்துக்கு சமுகம் கொடுக்காமல் போனது தாழ்த்தப்பட்ட மக்களின் துர்அதிர்ஷ்டமாம்!

அந்த மூன்று பேரும் வந்திருந்தால்......அடடா! அத்தைக்கு மீசை முளைத்தால் சித்தப்பாவாக்கியிருப்பார்களாம்!


எல்பின்ஸ்டன் ரெக்ஸி

(2-வது மாதம்)

ஜெமினி கணேசன், சாவித்திரி, டெய்ஸிராணி நடிக்கும்

யார் பையன்

செல்லமகால்

இப்பொழுது ஓடிக்கொண்டிருக்கிறது!

சிவாஜி கணேசன், பி. பானுமதி நடிக்கும்

ராணி லலிதாங்கி

சிலோன் எண்டர்டெயின்மென்ட்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் திரைகளில் விரைவில் வெளிவருகிறது!

ஏ. எல். எஸ். புரொடக்ஷன்சாரின்

அம்பிகாபதி

சிவாஜிகணேசன், பானுமதி, வி. நாகையா, எம். கே. ராதா, ராஜசுலோசன, காலஞ்சென்ற என்.எஸ்.கிருஷ்ணன், மதுரம்

முதலியோர் நடித்த உன்னத திரை ஓவியம்!

முருகன் (ஜிந்துப்பிட்டி)

தினசரி மாலை 6, இரவு 9-30, சனி,ஞாயிறு பி. ப. 2, ஞாயிறு காலை 10 மணிக்கும் விசேஷக்காட்சிகள்

ஜெமினி கணேசன், சாவித்திரி, சாரங்கபாணி

முதலியோர் நடித்த

"பிரேமபாசம்"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றுமை

மனித சமூகம் மாண்புடன் வாழ வேண்டுமெனில் அவர்களிடத்தில் ஒற்றுமை வேண்டும். இதுஒரு விளக்கு.

இப்போது உலகிலுள்ள ஒவ்வொரு நாடும் மற்றைய நாடோடு தொடர்பு கொண்டு ஒற்றுமையாக வாழ்ந்து, உலக சமாதானத்தை நிலைநாட்ட அந்நாட்டின் தலைவர்கள் அரும்பாடுபடுகிறார்கள். உதாரணமாக சீனு-இந்தியாபோன்ற நாடுகள் முன்னேடிகளாக விளங்குகின்றன.

ஒரு நாட்டில் இரண்டு கட்சிகள் உண்டு என வைத்துக் கொள்வோம். ஒரு கட்சியில் பத்து அங்கத்தவர்கள், மற்றைய கட்சியில் பதினைந்து அங்கத்தவர்கள்.

இதிலே பத்து அங்கத்தவர்கள்கொண்ட கட்சி, அங்கத்தவர்களின் கட்டுக்கோப்பான ஒற்றுமையால்தான் மற்றக் கட்சியை வெல்லலாம்.

''ஒன்றுபட்டால் உண்டு
வாழ்வு நம்மில்
ஒற்றுமை நீங்கிடில்
அனைவர்க்கும் தாழ்வு''

என்று பாரதியார் கூடப் பாடி இருக்கிறார்.

ஆகவே இன்றைய சூழ்நிலையில் தமிழ் மக்களிடத்தில் ஒற்றுமை அவசியம் வேண்டும். ''அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு'' என்பது போல, நாம் ஒன்றுபட்டோமானால் எம்மை ஒருவரும் ஜெயிக்க முடியாது.

இக்காலத்திலே தகப்பன் இறந்துவிட்டதும் அவருடைய பிள்ளைகளுக்கிடையில் காணி பங்கு போடுவதில் பகைமை வளருகிறது. இப்படித் தன் உடன்பிறந்தவர்களையே பகைக்கும் எம் தமிழ்ச் சகோதரர்களைத் திருத்த முயல்வோம். திருந்தாவிடில் நம் சமுகத்திலிருந்து துரத்திவிட வேண்டும். அப்போதுதான் மற்றவர்களும் திருந்துவார்கள்.

ஆகவே ஒற்றுமையே வாழ்வுப் பாதையைக் காட்டும் ஒளி விளக்கு. இதைக் கைவிட்டால், தாழ்வது திண்ணம் என்பதை உணர்ந்து 'நீர்மேற் குமிழி இக்காயம்' என்பதற்கிணங்க, இன்றைய நிலையிலாவது ஒன்றுபட்டு வாழ்ந்து, செயலாற்ற வேண்டும். அப்போ வெற்றி நமக்கென்பதில் ஐயமில்லை.

—பொ. வேலாயுதம்.




# திருடனைப் பிடித்தவர் !

கழுதைமலை கணபதியின் பெயரைச் சொன்னவுடனே அழுதுகொண்டிருக்கும் பிள்ளைகளெல்லாம் அமைதி கொள்ள ஆரம்பித்துவிடும். நிம்மதியும் ஓய்வும் வேண்டிய தாய்மார்களுக்கு, கணபதியின் பெயரால் அவைகிடைத்து விடும்!

கணபதி ஓர் பிரசித்தி பெற்ற திருடன். கழுதை மலையில் அவன் வாசஞ் செய்து வருவதாகக் கருதப்பட்டதால் அவனை அனைவரும்கழுதைமலைக் கணபதி என்றே அழைக்கத் தலைப்பட்டனர். நாட்டின் எப்பகுதியிலும் ஒரு கொலையோ கொள்ளையோ நடந்துவிட்டால், அதைச் செய்தவன் கணபதிதானென அனைவரும முடிவுகட்டி விடுவார்கள். நகர பொலீஸாராலும் அவனது நடமாட்டங்களையிட்டு அறிய முடியவில்லை.

கணபதியைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்கு ஆயிரம் ரூபாய் பரிசளிப்பதெனை அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், மற்றவர்கள் தன்னை அறிந்துகொள்ளாவண்ணம் மாறு வேடத்தில் மக்களிடையே சதா நடமாடிக்கொண்டிருந்தான் அந்தப் பக்காத்திருடன் கணபதி.

அன்றொருநாள் நடுநிசிவேளையில் பொலீஸ் ஸ்டேசனுக்கு அவசரமானவோர் செய்தி வந்தது. தம்முடைய ஹோட்டலில் ஓர் அறையில் கணபதி தங்கியிருப்பதாகவும், உடனே வந்து கைது செய்யுமாறும் செய்தி அனுப்பியிருந்தார் பிரபல ஹோட்டலான 'ஜப்பான் பவா'னின் சொந்தக்காரர் ஜம்புலிங்கம். சிறிது நேரத்தில் திருடனைப் பிடித்துவர 'ஜப்பான் பவா'னுக்கு அனுப்பப்பட்டார் இன்ஸ்பெக்டர் பரமசிவம்.

பரமசிவத்தைக் கண்ட ஜம்புலிங்கத்துக்கு ஆனந்தம் தாங்கமுடியவில்லை. ஆயிரம் ரூபாயை உடனே பெற்றுவிட்டதைப்போன்றவோர் பிரமை ஏற்பட்டது அவருக்கு. ''மூன்ருவது மாடியில் இரண்டாவது நம்பர் அறையில் மாறு வேடத்துடன் சயனித்துக்கொண்டிருக்கிறுன், கணபதி'' என அவர் பரமசிவத்திடம் குசுகுசுத்தார். ஓர் பிரபல திருடனைப் பிடிக்கப்போகும் பெருமை தனக்குக்கிடைத்ததையிட்டு உள்ளூரப் பூரித்துக்கொண்டு மாடிப்படிகளில் தனிமையாக ஏறிச்சென்றார் அந்த இன்ஸ்பெக்டர்.

அடிமேலடிவைத்து மாடியை அடைந்த பரமசிவம் அறையைக் கண்டுபிடித்து ஜன்னலினூடே பார்க்கையில் ஒருவன் அங்கு சயனித்திருப்பது காணப்பட்டது. தனது பொல்லாத காலத்துக்கோ என்னமோ, தூங்கிக்கொண்டிருந்த அப்பேர்வழி, தனது அறையைக்கூட தாழ்ப்பாள் போடாமல் திறந்தபடியே விட்டிருந்தான்!

'சரே'லென்று அறைக்குள் நுழைந்து அந்தஆசாமியைக் கைது செய்யப்போனுர் பரமசிவம். [விழித்துக்கொண்ட அவன் தான் ஒரு அப்பாவி வியாபாரியென்றும், தன்னை ஒருவித காரணமுமில்லாமல் கைது செய்வது தகாத செயலென்றும் பலமாக ஆட்சேபித்தான். எனவே பலவந்தமாக அவனைப் பிடிக்க முயன்றார் இன்ஸ்பெக்டர். இருவருக்குமிடையே கைகலப்பு ஏற்பட்டது. இறுதியில் வேறொரு வழியும் தோன்றாமையால் அவனைத் தமது ரிவால்வரால் படுகாயப்படுத்திவிட்டு ஸ்டேஷனுக்கு 'போன்'செய்ய அவசர அவசரமாகக் கீழே இறங்கினர் பரமசிவம். ஓர் பிரபல திருடனின் கொட்டத்தை அடக்கிவிட்ட அகங்காரம் அவரது ஒவ்வொரு அடியிலும் நிலவியது.

கீழே வந்த பரமசிவத்தைக் கண்டவுடன் ஜம்புலிங்கம் ''என்ன காயா பழமா'' என வினவினர். ''தாங்களே போய்ப் பாருங்கள்! அவனுக்கு நேர்ந்துள்ள கெதியை. பயல் தப்பியோட முயலுகிருன். சுட்டுக் காயப்படுத்திவிட்டேன்'' என்று பெருமையடித்துக்கொண்டார் இன்ஸ்பெக்டர். காயமடைந்த கைதியை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செலல ஏற்பாடுகளைச் செய்ய ஆரம்பித்தார் அவர்.

'ஜப்பான் பவான்' முதலாளி ஜம்புலிங்கம் முகமலர்ச்சியுடன் மூன்ருவது மாடியின் இரண்டாவது [illegible] தார். பிரபல திருடன் கணபதியைப் பார்க்க வேண்டுமென்றும் அவா அவருக்கு ஏற்பட்டதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. ஏனெனில் அவனுற்தானே அவர் பொலீஸாரிடமிருந்து ஆயிரம் ரூபாயைப் பெறப்போகிருர்!

ஆனல் மூன்ருவது மாடியின் இரண்டாவது அறையில் அவருக்காக ஓர் அதிசயம் காத்திருந்தது. தாம் சுட்டுவிட்டதாகஇன்ஸ்பெக்டர் கூறிய திருடன் மாயமாக மறைந்துபோனுன். ஒருவருமே அந்த அறையில் காணப்படவில்லை. தமது ஆட்களை விட்டு எல்லா அறைகளையும் தேட ஏற்பாடு செய்தார் முதலாளி. ஏமாற்றத்தை அவரால் தாங்க முடியவில்லை.

சிறிது நேரத்தில் இரண்டாவது மாடியின் மூன்ருவது அறையில் தங்கியிருந்தவோர் வியாபாரி படுகாயத்துடன் குற்றுயிராகக் கிடப்பது கண்டுபிடிக்கப்பட்டது. மூன்ருவது மாடியின் இரண்டாவது அறைக்குச் செல்வதற்குப் பதிலாக இன்ஸ்பெக்டர் பரமசிவம் இரண்டாவது மாடியிலுள்ள மூன்ருவது அறைக்கு அந்த அர்த்தராத்திரியில் நித்திரை மயக்கத்தில் சென்றிருக்கிருரென்ற செய்தி சிறிது நேரத்தில் எங்கும் அம்பலமாகிவிட்டது! 'ஜப்பான் பவான்' சொந்தக்காரர் ஜம்புலிங்கம் இதைக் கேட்டு கல்லாய்ச் சமைந்தார்!

—ரீ. பாக்கியநாயகம்

## மகிழ்ச்சி

இதுவரை வளர்மதி சுதந்திரன் மாணவர் மன்றம் என்ற தலையங்கப் பகுதி அழகின்றியும், அதிக இடத்தைப் பிடித்துக்கொண்டும் இருந்தது. இப்போது அழகாகவும் சிறிய இடத்தைப் பிடித்துக்கொண்டும் வெளிவருவது கண்டு மகிழ்ச்சியடைகிறேன். இதற்காக மாமாவுக்கு என் உளங்கனிந்த நன்றி.

—இராஜம்

காலி-எல

## காட்டுங்கள் பார்ப்போம்

வளர்மதியில் செல்வர்களின் விடயங்கள் அதிகமாகவும் செல்விகளின் விடயங்கள் குறைவாகவுமே வந்துகொண்டிருக்கின்றன. செல்விகளே! ''ஆண்களுடன் பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வோம்'' என்பதை வளர்மதியிலும் காட்டுங்கள் பார்ப்போம்.

—இராஜேஸ்வரி

## வள்ளியின் மகள்!

''அன்பு மணி''

வெள்ளைப்பசு வள்ளி எங்கள் வீட்டின் உற்ற தோழி
என்னைவிட கருமை அது ஈன்றெடுத்த குட்டி
கொல்லையிலே உண்டு அதன் குச்சு குடில் கோட்டை
எல்லையில்லா இன்பம் அந்த எளிய வைக்கோல் வீட்டில்.

அங்கும் இங்கும் நடக்கும் கன்று ஆனல் ஓடிடாது.
அல்லும் பகலும் அன்னை மடியின் அரவணைப்பில்கிடக்கும்
இங்கும் அங்கும் துள்ளும் ஆனல் எட்டிப் போய்விடாது
எப்பொழுதும் வள்ளித் தாயின் பக்கத்திலே நிற்கும்.

எட்டி நின்று பார்த்திட்டாலும் வள்ளி என்னைமுறைக்குது
இளையதம்பி, எங்கள் ஜிம்மி, எல்லோரையும் விரட்டுது.
முட்டி மோதிக் குதித்துப் பாலைக் குடித்திட்டாலும் கன்றினை
மோகத்துடன் பார்த்து முதுகை முழுதும் நக்கிக்
கொடுக்குது.

இத்தனை நாள் எங்களிடம் இணைந்திருந்த அன்பினை
இன்று வந்த கன்று முழுதும் எப்படித்தான் பறித்ததோ?
முத்துவள்ளி நீயும் எங்கள் முகங்களை மறந்ததேன்?
முன்பு நாங்கள் செய்த நன்றி அனைத்தையும்
மறந்ததேன்?

வளர்மதி — சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை ''வளர்மதி''யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து ''வளர்மதி'' C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12 என்ற விலாசத்திற்கு அனுப்பிவைக்கவேண்டும். இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும். அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்.

### வளர்மதி

### சுதந்திரன் மாணவர் மன்றம்

அங்கத்தவர் மனுப்பத்திரம்

இல. 9.

பெயர் ..............................................................

பாடசாலை ..............................................................

விலாசம் ..............................................................

..............................................................

.............................................. பெற்ருேர் அல்லது ஆசிரியர் கையொப்பம்

.............................................. கையொப்பம்

## மகனைக் கொன்ற மாபாவி

ஓர் ஊர் அரசனின் மைந்தன் பெயர் விஜயன். அந்நாட்டு மந்திரியின் மைந்தன் பெயர் கமலன். கமலன் அறிவிலும் அழகிலும் சிறந்தவன். விஜயனே அவனுக்கு எதிர்மாருனவன்.

இருவரும் ஒரே ஆசிரியரிடம் கல்வி கற்ருர்கள். கமலன்தான் இருவரிலும் கெட்டிக்காரன். அவனது அழகும் அறிவும் ஆசிரியரையும் மற்றும் எல்லோரையும் கவர்ந்தது. தன் குமாரனை எல்லோரும் அலட்சியம் செய்கிருர்களென்றும், மந்திரி குமாரனையே எல்லோரும் விரும்புகிருர்களென்றும் அரசிக்குத் தெரியவந்தது. இதை அவளால் பொறுக்கமுடியவில்லை. 'மந்திரி குமாரன் இருப்பதால் தானே இந்தத் தொல்லை' என்று நினைத்தது அவள் உள்ளம். அவனைப் பழிவாங்க நினைத்தாள்.

அவள், கொலை புரியும் சேவகர்களை அழைத்து, 'மந்திரி குமாரனைக் காட்டிலே கொண்டு போய் இரகசியமாய் கொலை செய்யவும்' என்று கட்டளையிட்டு, அவர்களுக்குத் தக்க பரிசு அளித்தாள். மந்திரி குமாரனுக்குப் பதிலாக அரச குமாரனே கொலை செய்யப்பட்டதாக அன்றிரவு ஒரு பயங்கர கனவு கண்டு திகிலுடன் விழித்தாள்.

உடனே எதிரிலிருந்த பஞ்சணை மெத்தைப் படுக்கையைப் பார்த்தாள். அங்கே மந்திரி குமாரன் படுத்திருந்தாற்போல் அவனுக்குத் தோன்றிற்று. வாளை உருவி அவனை வெட்டினுள். 'ஐயோ அம்மா என்ற குரல்' அவளைத் திடுக்கிடச் செய்தது. அக்குரல் தன் மைந்தனது என்று தெரிந்தது. வெட்டுண்டு மடிந்து கிடக்கும் தன் மகனை உற்றுப் பார்த்தாள்: தான் தடுமாற்றத்தில் செய்த வேலையை உணர்ந்தாள். உடனே ''ஐயோ! நான் மகனைக் கொன்ற பாவி'' என்று கத்திக்கொண்டு அரண்மனையை விட்டு வெறிபிடித்தவள் போல் ஓடினுள்.

—லீலா. பொன்னையா.
மட்டுக்கொல்லை.

## விதி

விதியென்ருல் என்ன? மனித சக்திகளுக்கு அப்பாற்பட்ட ஓர் சக்தியே விதியென்பதாகும். விதியின் சக்திக்கு மற்ற சக்திகள் யாவும் குறைந்தன என்று கூறின் அது மிகையாகாது. காரணம், விதி எல்லோரையும் ஆட்டிப்படைத்திருக்கிறது-ஆட்டிப் படைக்கிறது.

'விதி வலிது' என்ற கூற்று உண்மைதான் என்பதை. சாவித்திரி, சந்திரமதி, இராமன் நளன் ஆகியோர்களின், சரிதைகள் கூருமல் கூறுகின்றன. ஆதலால் விதியை வெற்றி கொள்வார் யார் உளர்?

'விதியை மதியால் வெல்லலாம்' என கூறுவர் ஒரு சாரார் ஆனல் வார்த்தையளவிலன்றி, நடைமுறையில் எவரும் விதியை வென்று வாகை சூடியதாகத் தெரியவில்லை.

உதாரணமாக, தசரதன் மண்டலத்தை (மந்திரி சபை) அலங்கரித்த அமைச்சர் குழாம் விதியை மாற்ற வல்லவர்கள், என கம்பர், மந்திரப்படலத்தில் கூறியுள்ளார். ஆயினும் அவர்களால் இராமனின் ஆரண்ய வாசத்தையோ, தசரதனின் மரணத்தையோ, தடுக்க

(15-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடைமுறையில் தமிழ் இல்லாதவரை

## சட்டத்தால் சம அந்தஸ்து கிடைத்துப் பயனில்லை

## தமிழர் தமிழ்ப் பிரதேசங்களில் சென்று குடியேறி, தமிழ்க் கொடி நாட்டி சுதந்திர வாழ்வுக்கு வழிகோல வேண்டும்

### மாதகல் சங்க விழாவில் மட்டக்களப்புப் பிரதிநிதி

"தமிழர்களாகிய நாம் அனைவரும் தமிழில் பேச வேண்டும். தமிழில் எழுத வேண்டும். நம்மிடத்தில் இத்தகைய நிலை ஏற்படாத வரை தமிழ் மொழிக்கு சம அந்தஸ்து வேண்டுமென நாம் போராடுவதனாலோ அன்றி தமிழுக்கு அரசியல் சட்டத்தில் இடம் பெறுவதினாலோ ஓர் பயனும் இல்லை" இவ்வாறு மட்டக்களப்புப் பாராளுமன்றப் பிரதிநிதி திரு. செ. இராசதுரை கொழும்பு மாதகல் சங்க ஒன்பதாவது ஆண்டுநிறைவு விழாவில் பேசுகையில் கூறினார்.

கொழும்பு மாதகல் சங்கத்தின் ஒன்பதாவது ஆண்டு நிறைவு விழா கடந்த 3-11-57-ல் கொழும்பு விவேகானந்தசபை மண்டபத்தில் நடைபெற்றது விழாவுக்கு திரு. எம். ஜே. சிமான்பிள்ளை தலைமை வகித்தார்.

திரு. இராசதுரை தொடர்ந்து பேசுகையில் "தமிழ் மக்களிடம் தாழ்வு மனப்பான்மை இன்னும் விட்டுப் போகவில்லை. பல நூற்றாண்டுகளாக அந்நிய தேசத்தவர்களுக்கு அடிமையாக இருந்த நாம் இன்று சொந்த நாட்டவர்களுக்கு அடிமையாக இருந்தாலென்ன என்ற மனப்பான்மை இன்னும் ஓர் சிலரிடம் இருப்பதாகத் தெரிகிறது. இத்தகைய அடிமை மனப்பான்மை எப்பொழுது நம்மை விட்டு ஒழிகிறதோ அன்றே நம் தமிழ் இனத்துக்கு விடுதலை. எனவே கிராம முன்னேற்றத்துக்காக உழைக்கும் இத்தகைய சங்கங்கள் கிராமவாசிகளின் மத்தியில் சுதேசப் பற்றையும் உற்சாகத்தையும் ஊட்டி வந்து அப்பற்றை இன—தேசிய பற்றாகச் செய்ய வேண்டும்" எனக் குறிப்பிட்டார்.

சுதந்திரன் ஆசிரியர் திரு. எஸ். டி. சிவநாயகம் பேசுகையில் "ஓரளவு கல்வி கற்றபின் அரசாங்க சேவையில் சேர்ந்துவிட வேண்டும் என்ற மனப்பான்மை நம்மவர்கள் பலரிடம் இருந்து வருகிறது. இம் மனப்பான்மை அவர்களை விட்டு அகல வேண்டும். சுதந்திரமாக வாழ விரும்பும் மக்கள் இவ்வாறான அடிமை வாழ்வை விரும்பாது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உழைக்க வேண்டும். ஆதி காலத்திலே மலைக்குகைகளிலும், காடுகளிலும், நதிக்கரைகளிலும் வாழ்ந்து வந்த மனிதன் அவனது சிந்தனா சக்தியினாலும் உழைப்பினாலும் இன்று வானளாவும் மாட மாளிகைகளில் சுதந்திரமாக வாழ்கின்றான். நாமும் நமது சிந்தனா சக்தியையும் உழைப்பையும் பயன்படுத்தி ஈழத்தின் இயற்கை வளத்தை நவீன முறையிற் பெருக்கி தமிழகத்தை செழிப்பு நிறைந்த ஓர் விவசாய தொழில் விருத்தி நாடாக்கவேண்டும்.

"யாழ்ப்பாண குடா நாட்டில் இடமின்றித் தவிக்கும் மக்கள் கிழக்கு மாகாணத்தின் உள்ள திருகோணமலை, மட்டக்களப்பு பிரதேசங்களில் குடியேறி தமிழ்ப்பிரதேசம் பறிபோகாமல் பாதுகாத்து ஆங்காங்கே தமிழ்க் கொடியை நிலை நாட்ட வேண்டும். இவ்வித துறையில் நாம் கவனம் செலுத்தி உழைத்து வந்தால் தமிழ் இனம் சுதந்திரமாக வாழ முடியும்" எனக் குறிப்பிட்டார்.

மாதகல் இளைஞர்களின் விஞ்ஞான பயிற்சிக்கு உதவியாக சுமார் 2,000 ரூபா வரை சேர்த்து மாதகல் சென். ஜோசப் கல்லூரியில் ஓர் பொது விஞ்ஞான ஆராய்ச்சிக்கூடம் அமைக்க வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

புதுவருட உத்தியோகத்தர்களாக பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவர்: திரு. எம். ஜே. சிமான் பிள்ளை, துணைத் தலைவர்கள்:- திருவாளர்கள்: என். தங்கராஜா, எம். பல்த்தசார், கே. ஏ. தங்கராஜா, செயலாளர்: திரு. சி. நல்லையா, துணைச் செயலாளர்: திரு. ஈ. ஆரோக்கியநாதன், பொருளாளர்: திரு. எஸ். பி. துரைராஜா, துணைப் பொருளாளர்: திரு. எஸ். நடராஜா, செயற்குழு உறுப்பினர்கள்:- திருவாளர்கள்: எல். ஈ பாங்கிரேசியஸ், எஸ். தருமலிங்கம், ஆர். பெனடிக், எஸ். குமாரசாமி, பி. என். தாஸன், கே. புண்ணியமூர்த்தி, வி. எஸ். பாலசிங்கம்.

—

### எகலியகொட வர்த்தகர் சங்கம்

எகலியகொட வர்த்தகர் சங்கப் பொதுக் கூட்டம் சென்ற 31-10-57ல் திரு ஏ. எச். எம். றியால் தலைமையில் கூடியது. அப்பொழுது காரியதரிசிகளான திரு. எம். டி. சந்திரரட்ன சிங்களத்திலும், திரு ஏ. கணபதிப்பிள்ளை தமிழிலும் சென்ற கூட்ட அறிக்கையை வாசித்தனர்.

நகரின் முன்னேற்றத்தைக் கருதி நகரை பட்டின சபையாக்க ஆகவேண்டிய நடவடிக்கைகளை சங்கம் எடுப்பதென்று தீர்மானிக்கப்பட்டது. கடைசியாக தலைவர் பேசுகையில் எல்லோரும் ஒற்றுமையாகவும், சமாதானமாகவும், தனிப்பட்ட குரோதம் பாராட்டாமல் தங்களின் ஒத்துழைப்பையும் ஆதரவையும் தந்து சங்கத்தை வளர்க்க முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

### கொழும்பில் பாரதி விழா

பாரதி இளைஞர் சங்கத்தார் வழக்கம்போல் டிசம்பரில் கொண்டாடும் பாரதி விழா இவ்வாண்டும் டிசம்பர் மாதம் 6, 7, 8 ஆகிய மூன்று தினங்களிலும் கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுவார்கள் எனத் தெரிகிறது.

இவ்விழாவில் தருமபுர ஆதின பல்கலைக் கல்லூரி தமிழ்ப் பேராசிரியர் வித்துவான் சொ. சிங்காரவேலனும், மதுரை தமிழ் எழுத்தாளர் சங்க செயலாளர் பண்டிதர் நா. பார்த்தசாரதி, வித்துவான் க. வேலன், ஜனாப் எஸ். எம். கமால்தீன், திருமதி பாலம் லக்ஷ்மணன், வித்துவான், கா. பொ. இரத்தினம், சுவாமி சச்சிதானந்தஜி, கே. பி. அரன், அன்பர் பூபதிதாசர், நயமணி கல்கிதாசன் முதலியோர் சொற்பொழிவாற்றுவார்கள் எனத் தெரிகிறது.

—

### திருவள்ளுவர் (ஹரிஜன) பாடசாலை

திருவள்ளுவர் (ஹரிஜன) பாடசாலையின் நிர்வாகிகளின் கூட்டம் கடந்த 1-10-57ல் திரு எஸ். சங்கர் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. அவ்வமயம் பாடசாலை வளர்ச்சிபற்றி பல விஷயங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பின் கீழ்க் கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

நவம்பர் திங்களில் நடைபெறவிருந்த பள்ளியின் 10வது ஆண்டு நிறைவு விழாவையும், பெற்றோர் தின விழாவையும் தைத்திங்களில் பொங்கல் விழாவன்று நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

—

### பதுளையில் ஐ. நா. சபைக் கூட்டம்

பதுளை தருமதூதக் கல்லூரியின் வரலாற்றுக் கழகத்தின் ஆதரவில் சென்ற 7-11-57ல் ஐ நா. சபையின் மாதிரிக் கூட்டமொன்று நடைபெற்றது. "உலக நெருக்கடியைத் தீர்க்க ருஷியா உடனடியாகச் செயற்கைச் சந்திரன்களைச் சைபீரியாவில் இறக்கவேண்டும்" என்ற தீர்மானத்தின் மீது பல நாட்டுப் பிரதிநிதிகளும் காரசாரமாகப் பேசினார்கள். தலைமை வகித்த ஆசிரியர் திரு மு. சிவானந்தம் பல நெருக்கடிகளுக்கிடையே இந்த மகாநாடு கூட்டப்பட்டதென்றும், குரோத மனப்பான்மையும், பொறாமையும், போட்டியும் இருக்கும்வரை முன்னேற்றம் முயற்கொம்பென்றும் மாணவர்கள் தமது திறமையை இத்தகைய நலம்பெறு முயற்சிகளில் பயன்படுத்த வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

### முற்போக்கு வாலிபர் சங்கம்

கொழும்பு முற்போக்கு வாலிபர் சங்கத்தின் மாதாந்திரப் பொதுக் கூட்டம் கடந்த 2-11-57ல் சங்கப் பணிமனையில் திரு என். கதிர்காமத்தம்பி தலைமையில் நடைபெற்றது.

முதலாவதாக காலஞ்சென்ற கலைவாணர் என். எஸ். கிருஷ்ணனின் அகால மரணத்திற்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

பின்பு திரு செ. டேனியல், திரு. பி. புருசோத்தமன், திரு. எம். எம். மாரிமுத்து ஆகியோர் சொற்பொழிவாற்றினர். சங்கசெயலாளர் திரு. எச். கே. சிவனையா நன்றி கூறினார்.

—

### இந்து இளைஞர் சங்கம்

பண்டத்தரிப்பு பண்ணாகம் வடக்கு கிராம முன்னேற்றச் சங்கத்தின் ஆதரவில் இயங்கும் இந்து இளைஞர் இயக்கத்தின் ஆறுவது ஆண்டு விழா அணிமையில் திரு. த. குமாரசாமி தலைமையில் நடைபெற்றது.

விழாவில் வித்துவான் திரு வி. நவரத்தினம் "பக்தியும் சிவமும்" என்னும் விடயம் பற்றியும் ஆசிரியை பத்மா பஞ்சநதேஸ்வரன் "மலரும் சமுதாயத்தில் மகளிர் கடமை" என்னும் விடயம் பற்றியும் பேசினார்கள். செல்வர்கள் எஸ். பெரியதம்பி, வ. சுப்பிரமணியம், செ. தங்கராசா உட்பட பலர் சொற்பொழிவாற்றினார்கள்.

### மாணவர் சுற்றுப்பிரயாணம்

மட்டக்களப்பு அரசடி மெ. மி. சிரேஷ்ட பாடசாலையைச் சேர்ந்த 40 மாணவ மாணவிகள் கடந்த 30-10-57 தொடக்கம் 40 மாணவ மாணவிகள் கடந்த 3-10-57 தொடக்கம் 3-11-57 வரை பொலன்னறுவை, சிகிரியா, தம்புலை, கண்டி, கொழும்பு, சிலாபம், புத்தளம், அநுராதபுரி மிகுந்தலை ஆகிய புராதன நகரங்களையும், சரித்திரப் பிரசித்திபெற்ற இடங்களையும் பார்வையிட்டனர். இம்மாணவர் கோஷ்டிக்கு பாடசாலை ஆசிரியர் என். இராசதுரை தலைமைதாங்கினார்.


—

### கொம்பனித்தெருவில் திருக்கல்யாண விழா

கொழும்பு கொம்பனித் தெரு வள்ளி திருமணசபையாரின் ஆதரவில் கொம்பனித்தெரு சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் ஸ்கந்த சஷ்டி 8ம் நாள் உற்சவ விழாவும், திருக்கல்யாண விழாவும் சென்ற 30-10-57ல் திரு நா. மகாதேவக் குருக்கள், திரு சோ. இராமசாமிக் குருக்கள் ஆகியவர்களால் விமரிசையாக நடத்தப்பட்டது.

விழாவில் சபைக் காரியதரிசி திரு ச. சுப்பையாவின் கூட்டு வழிபாடும் ஈழம்புகழ் நாதஸ்வர வித்துவான் யாழ்ப்பாணம் என். கே. பத்மநாதன் கோஷ்டியாரதும் கொழும்பு கே. பி. இராசமாணிக்கம் கோஷ்டியாரதும் நாதஸ்வரக் கச்சேரிகளும் இடம்பெற்றன.


மல்லர்ட் வானொலிப் பெட்டி



மொடல் இல: MUS/122 ஏ. ஸி. — டீ. ஸி.

ரூபாய் 150-00.

ஒவ்வொரு வீட்டிற்கும் மல்லர்ட் வானொலி பெட்டி அவசியம் தேவை

இலங்கை முழுவதிலுமுள்ள மல்லர்ட் விநியோகஸ்தர்களிடத்திலும் கிடைக்கும்

Mullard

ஸோல் ஏஜெண்டுகள்:-

கொழும்பு ஏஜென்சீஸ், லிமிட்டெட்

355 டீன்ஸ் ரோட், கொழும்பு.

தபால் பெட்டி 913

டெலிபோன்: 94211 தந்தி: கொலாக்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## சினிமாஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் அடுத்த அதியற்புதத் திரையீடு



# நாகேஸ்வரராவ், அஞ்சலிதேவி,

## பாலையா, தங்கவேலு, ரங்கராவ்,

ராஜசுலோசனு நடித்துள்ள

## ஜெய்சக்தி பிக்சர்சாரின்

★



# அலாவுத்தீனும் அற்புத விளக்கும்



பின்னணி இசை:

சுசீலா - ஜிக்கி - கோமளா - திருச்சி லோகனுதன் - ஏ. எம். ராஜா - ராணி ஆகியோர்.

## இவ்வருடத்திய திரை ஓவியங்களனைத்திலும் சிறந்த சித்திரம்!

கேவா கலர் நடனங்கள், மயிர்க்கூச்செறியும் பயங்கரச் சண்டைகள், அற்புதமான மந்திர ஜாலங்கள் இவை ஒருங்கே அமையப்பெற்றது.




இப்பத்திரிகை கொழும்பு தட்டா தெரு 19ம் இலக்கத்தில் வசிக்கும் எஸ். டீ. சிவநாயகம் அவர்களால் சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் சார்பாக தட்டா தெரு சுதந்திரன் அச்சகத்தில் பதிப்பித்து 1957 நவம்பர் மாதம் 17-ம் திகதி பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org